# மொறட்டுவைப் பல்கலைக்கழகம்,

இலங்கை













# வருடாந்த அறிக்கையுடன் கணக்கறிக்கை

# 2019

# கணக்குகளின் வருடாந்திர அறிக்கை மற்றும் அறிக்கை

# 2019

## தொலைநோக்கக் கூற்று

உலகளாவிய ரீதியில் அதிகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவுசார் நிறுவனமாக தெற்காசியாவில் திகழ்வதாகும்.

## செயற்பணிக் கூற்று

என்பன மூலமாக தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் அதிகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவுசார் நிறுவனமாக தெற்காசியாவில் திகழ்வதாகும்.

- உலக சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் ஆராய்ந்தறியும் மனோபாவத்தையும் அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்வதனையும் போசிக்கக் கூடியதான தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் கல்வியை வழங்குதல்;

- கல்வி வரையறைகளை விருத்தி செய்வதற்காக மற்றும் தேசிய தொழில்நுட்பத் திறமைகளை உயர்வடையச் செய்வதற்காக தேசிய ரீதியில் பொருத்தமான மற்றும் உயர் விளைவுகள் கொண்ட ஆய்வினை மேற்கொள்ளுதல்;

- சர்வதேச ரீதியிலான இடத்தைக் கொண்டதொரு இலங்கைப் பல்கலைக்கழகமாக நாட்டிற்கும் கைத்தொழில் துறைக்கும் சமூகத்திற்கும் நிபுணத்துவ சேவைகளை வழங்குதல்; மற்றும்

- இலங்கையின் நிலைத்திருக்கும், விஞ்ஞான, தொழில்நுட்ப, சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் பங்குபற்றுதல்

## உப வேந்தரின் செய்தி



மொறட்டுவை பல்கலைக்கழகமானது (UoM) யாராலும் மறுக்க முடியாதளவிற்கு இன்று இலங்கையில் **எல்லா வகையிலும் மிகச் சிறந்த** பல்கலைக்கழகமொன்றெனும் கீர்த்தியைப் பெற்றுக்கொண்டுள்ளது. கற்கைகள் சார்பாக மிகச் சிறந்த, தன்னம்பிக்கைமிக்க, நெகிழ்வுடைய, அதிகளவில் வேலை பெறக்கூடிய சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரம் வாய்ந்த, பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் தொழில் செய்யக் கூடிய பட்டதாரிகளை உருவாக்குவதற்கு UOM கடுமையாக உழைக்கின்றது. அதற்கும் மேலதிகமாக, அவர்கள் பட்டத்தைப் பெறும்போது எமது மாணவர்கள் அதிகமானோர் "வேலை தேடுபவராக" அன்றி "வேலை உருவாக்குபவர்" எனும் நிலைக்குப் பயிற்றுவிப்பதுமாகும். பொறியியல், கட்டடக்கலை, கணிய அளவையியல், வடிவமைப்பு, பட்டணமும் நாடும் திட்டமிடல், வசதியளித்தல் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், போக்குவரத்தும் ஏற்பாட்டு முகாமைத்துவம் மற்றும் வியாபாரம் போன்ற துறைகளில் பட்டதாரிகளை உருவாக்குவதற்காக எமது அதிகமான புதிய பட்டதாரிகளின் வருடாந்த சம்பளத்தை விடக் குறைந்ததொரு தொகையான 4 வருடங்களுக்கும் ஒரு மாணவருக்கு 9000 ஐ.அமெ. டொலரை விட குறைந்த தொகையை (மீண்டுவரும்) செலவிடுகின்றது.

பல்கலைக்கழகத்தின் மூலோபாய திட்டமிடல் மற்றும் பல பூர்வாங்க வேலைகளை அமுலாக்குதல் மூலமாக இலங்கையை "அறிவியல் கேந்திரநிலையமாக" ஆக்குவதற்கு பங்களிப்புச் செய்யும் அதேவேளை, எமது நாட்டினது பொருளாதார அபிவிருத்தியில் செயற்பாட்டு இயக்கி ஒன்றாக ஆகுவதற்கான சில குறிக்கோள்களை உருவாக்கியுள்ளது.

2019 ஆண்டின் இறுதியில், மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு மாணவர்கள் 8369 பேர் காணப்பட்ட அதேவேளை, 2018 உ./த. மாணவர் தொகுதி மூலம் 2019 திசம்பரில் 1731 மாணவர்களை UOM சேர்த்துக்கொண்டது. அது, காலப்பகுதி சார்ந்த சிக்கல் மற்றும் பாரிய இடப்பிரச்சினை என்பவற்றை கவனத்தில் கொள்ளாது மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது புதிய அனுமதிகளுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் ஏனைய பல பல்கலைக்கழகங்களை விடவும் முன்னணியில் இருந்துமாகும்.

எமது பட்டதாரி நிகழ்ச்சித்திட்டத்திற்கான மாணவர்களினதும், அவர்களின் பெற்றோர்களினதும் அதிகரித்த கேள்வியை எதிர்கொள்வதற்காக பல்கலைக்கழகமானது கடந்த பத்து ஆண்டுகளில் வருடாந்த மாணவர் உள்வாங்கலை சகல விதத்திலும் 40% இற்கு மேலாகவும் தகவல் தொழில்நுட்ப பீட உள்வாங்கல் 118% ஆலும் அதிகரித்துச் சென்றுள்ளது என்பதை இங்கு குறிப்பிட்டுக் கூறுதல் வேண்டும்.

கடந்த பத்தாண்டுகளில் வருடாந்த உள்வாங்கல்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து இருப்பதுடன், வரையறுக்கப்பட்ட வசதிகளுடன் மொறட்டுவைப் பல்கலைக்கழகம் எல்லாப் பட்டதாரிகளையும் ஏற்றவகையிலும் தரத்திலும் தடங்களின்றிப் பேணிச் செல்வதையிட்டும் மேம்படுத்தியுள்ளதையிட்டும் பெருமிதம் அடைகின்றது.

2019 இல் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய 1407 மொத்த மாணவர் எண்ணிக்கையில் 1290 (92%) பேர் விதிக்கப்பட்ட குறைந்தபட்ச காலவரையறைக்குள் தமது முதாலவது பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்கள். 2019-ஆம் ஆண்டு பொதுப் பட்டமளிப்புவிழாவில் பட்டமேற்படிப்பு பட்டங்களையும் உள்ளடக்கி மொத்தமாக வழங்கப்பட்ட 1910 பட்டங்களில் 1407 இளமாணிப் பட்டங்களும், 503 பட்டமேற்படிப்பு பட்டங்களும் உள்ளடங்கியிருந்தன.

2019 இல் நடாத்தப்பட்ட பட்டதாரிகளின் தொழில் தன்மைகள் பற்றிய டிரேஷர் ஆய்வில் (Tracer surveys) மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகள் கைத்தொழில்துறைகளாலும், அதன் தொழில் வழங்குநர்களாலும் பெரிதும் வேண்டப்படுகின்றார்கள் என்பதைக் சுட்டிக்காட்டும் வகையில் அவர்களின் பட்டமளிப்பு விழாவின் போது சகல பட்டதாரிகளும் 91.4% தொழிலைப் பெற்றுள்ளனர் எனும் தகவல் பெறப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) மூலம் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினது நிறுவனம்சார் மதிப்பாய்வின் (Institutional review - IR) மூன்றாவது சுழற்சி 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. முந்தைய இரண்டு சுழற்சிகள் 2006 ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன. இந்த ஆண்டின் நிறுவனம்சார் மதிப்பாய்வுக்கு "ஏ" தரத்தை (மிக உயர் தரத்தை) பெறும் சிறப்புரிமையை பல்கலைக்கழகம் அடைந்துகொண்டது.

கூட்டு பட்டங்களை ஆரம்பித்தல், வெளிநாட்டு மாணவர்களை ஈர்த்தெடுத்தல், சர்வதேச சுற்றுப்பயணங்களை ஏற்பாடுசெய்தல், சர்வதேச பல்கலைக்கழகங்களில் எமது மாணவர்களுக்கான அனுமதிகளை ஏற்பாடுசெய்தல், சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் (MOUs) ஆகியவற்றில் ஈடுபடல் போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டின் போது, பல வெளிநாட்டவர்கள் கல்விசார் மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்புக்களை மேம்படுத்துதல் சம்பந்தமாக இந்தியா பிரதிநிதிகள், தேசிய தாய்வான் பல்கலைக்கழகத்திலிருந்து பிரதிநிதிகள், அவுஸ்திரேலியாவின் டீகின் (Deakin) பல்கலைக்கழகத்திலிருந்து குழு, பின்லாந்து நாட்டின் மாண்புமிகு தூதுவர், தில்லி தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்திலிருந்து குழு, கொரியாவின் இஞ்சியோன் (Incheon) தேசிய பல்கலைக்கழகத்திலிருந்து பிரதிநிதிகள், ஷங்ஹாய் இலக்ரிக் பவர் பல்கலைக்கழகத்திலிருந்து (SUEP) பிரதிநிதிகள், ஆக்லாந்து பல்கலைக்கழகம் (UoA) மற்றும் தாய்வானின் தேசிய சுன் யட்-சென் (Sun Yat-sen) பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உட்பட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்தமை சில நடவடிக்கைகளாகும்.

2019 இல், சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவகங்கள் ஆகியவற்றுடன் பல ஒத்துழைப்புக்களை ஏற்படுத்த நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதுடன், அவற்றோடு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் (MOUs) மற்றும் ஒப்பந்தங்களில் ஈடுபட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) அங்கீகாரத்துக்காக காத்திருக்கிறது. கூட்டு ஆராய்ச்சி மற்றும் மாணவர்/ பணியாளர்கள் பரிமாறல்கள் சார்பாக நாகோகா (Nagaoka) தொழில்நுட்ப பல்கலைக்கழகம், AALTO பல்கலைக்கழகம் – பின்லாந்து, இஞ்சியோன் (Incheon) தேசிய பல்கலைக்கழம், அன்ஸ்பக் (Ansbach) பிரயோக விஞ்ஞானங்கள் பல்கலைக்கழகம், மியாஸாகி (Miyazaki) பல்கலைக்கழகம், ஷான்டோங் (Shandong) பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியாவின் ரோயல் மெல்போர்ன் இன்ஸ்ரிடியுட் ஒப் டெக்னோலோஜி (RMIT) மற்றும் டீகின் (Deakin) பல்கலைக்கழகம் உட்பட செயற்படும் குறிப்பிடத்தக்க ஒத்துழைப்புக்களாகும்.

பணியாளர்களினதும் மாணவர்களினதும் வினைத்திறன்மிக்க செயலாற்றல் காரணமாக தேசிய ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் மொறட்டுவை பல்கலைக்கழகம் 2019 ஆண்டில் பல துறைகள் சார்பாக அங்கீகாரம் கிடைத்ததன் ஊடாக தொடர்ந்தும் சிறப்பான முன்னேற்றங்களை பெற்று வருகின்ற அதேவேளை, UOM 2019 ஆண்டு காலப்பகுதியிலும் தொடர்ந்து சர்வதேசமயப் படுத்துவதற்காக அதிகளவு கவனத்தைச் செலுத்தியது.

அரசாங்கமும், உயர் கல்வி அமைச்சும் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் மொறட்டுவைப் பல்கலைக்கழகம் சென்ற பல வருடங்களில் அடைந்த குறிப்பிடத்தக்க சாதனைகளை கணக்கிலெடுத்து, அதன் செயல்நுணுக்க முகாமைத்துவ திட்டத்தின் குறிக்கோள்களையும், நோக்கங்களையும், அதன் தூரநோக்கான **"உலகளாவிய ரீதியில் அதிகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கல்வி நிறுவகமாக தென் ஆசியாவில் திகழ்வதாகும்"** என்பதை அடையவும் உதவிபுரியுமென மனப்பூர்வமாக எதிர்பார்க்கின்றோம்.

பேராசி. கே. கபில சி.கே. பெரேரா
உபவேந்தர்
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | நிறுவன இலக்குகள் | i |
| | பல்கலைக்கழக நிருவாக சபை | ii - iv |
| பகுதி 1 | பல்கலைக்கழக செயற்பாடுகள் சார் மீளாய்வு | 01- 33 |
| பகுதி 2 | மூலவளங்கள் மற்றும் மாணவர்கள் | |
| | பொழிப்பு (மூலவளங்கள் மற்றும் மாணவர்கள்) | 34 |
| | விபரம் (மூலவளங்கள் மற்றும் மாணவர்கள்) | 35 - 36 |
| பகுதி 3 | உள்நாட்டு மாணவர்கள் | |
| | பொழிப்பு (உள்நாட்டு மாணவர்கள்) | 37 - 38 |
| | விபரம் (உள்நாட்டு மாணவர்கள்) | 39 - 43 |
| பகுதி 4 | வெளிநாட்டு மாணவர்கள் பற்றிய விபரம் | 44 - 45 |
| பகுதி 5 | கல்விசார் ஆளணியினர் பற்றிய விபரம் | 46 |
| பகுதி 6 | நிர்வாக ஆளணியினர் பற்றிய விபரம் | 47 |
| பகுதி 7 | கல்விசாரா ஆளணியினர் பற்றிய விபரம் | 47 - 48 |
| பகுதி 8 | ஆய்வு கருத்திட்டங்கள் / ஆக்கவுரிமைகள் | |
| | பொழிப்பு (ஆய்வு கருத்திட்டங்கள் / ஆக்கவுரிமைகள்) | 49 |
| | விபரம் (ஆய்வு கருத்திட்டங்கள் / ஆக்கவுரிமைகள்) | 49 - 50 |
| பகுதி 9 | ஆய்வு, புதுமையாக்கம், பிரசுரங்கள் | |
| | பொழிப்பு (ஆய்வு, புதுமையாக்கம், பிரசுரங்கள்) | 50 |
| | விபரம் (ஆய்வு, புதுமையாக்கம், பிரசுரங்கள் | 51 |
| பகுதி 10 | நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் | 52 |
| பகுதி 11 | கிடைத்த விருதுகள் பற்றிய விபரம் | 53 |
| பகுதி 12 | 2019 இல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகள் பற்றிய விபரம் | 53 |
| பகுதி 13 | மீண்டெழும் செலவினங்கள் பற்றிய விபரம் | 54 |
| பகுதி 14 | மூலதன செலவினங்கள் பற்றிய விபரம் | 54 |
| பகுதி 15 | கருத்திட்ட செலவின விபரம் (உள்நாட்டு / வெளிநாட்டு நிதியிடப்பட்டவை) | 55 - 56 |
| பகுதி 16 | நிதிசார் முன்னேற்றம் பற்றிய விபரம் (செலவினம்) | 57 |
| பகுதி 17 | நிதிசார் முன்னேற்றம் பற்றிய விபரம் (உருவாக்கப்பட்ட வருமானம்) | 57 |
| பகுதி 18 | நிதி செயற்திறன் பகுப்பாய்வு | 58 |
| பகுதி 19 | உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய விபரம் | 59 |
| பகுதி 20 | நிதிக் கணக்குகள் 2019 | |
| | 20.1 2019.12.31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று | 60 |
| | 20.2 2019.12.31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதி செயலாற்றல் கூற்று | 61 |
| | 20.3 2019.12.31 இல் முடிவடைந்த ஆண்டின் தேறிய சொத்துக்கள் மாற்றல் கூற்று | 62 |
| | 20.4 2019.12.31 இல் முடிவடைந்த ஆண்டின் காசுப்பாய்ச்சல் கூற்று | 63 |
| | 20.5 நிதி நிலைமைக் கூற்றுக்கான குறிப்புக்கள் - 2019 | 64 - 74 |
| | 20.6 நிதி நிலைமைக் கூற்றுக்கான குறிப்புக்கள் | 75 - 78 |
| | 20.7 நிதிச் செயற்திறன் கூற்றுக்கான குறிப்புகள் | 79 - 81 |
| | 20.8 கணக்காய்வாளரின் தலைமையதிபதியின் அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் | 82 - 93 |
| | 20.9 சட்ட நியாயாதிக்க சபை நிதியியல் முன்னேற்றம் 2019 | 94 |
| | 20.10 கணக்காய்வுக் குழு அறிக்கை – 2019 | 95 - 97 |
| பகுதி 21 | நிலையான வளர்ச்சி குறித்த வருங்கால அறிக்கை | 98 - 101 |

## நிறுவன இலக்குகள்

- உயர் கல்வி பயிற்சி நிறுவகமென்ற வகையில் சர்வதேச மட்டத்திலான அங்கீகாரத்தை அடைதல்.

- உலகலாவிய அங்கீகாரத்துடன் உள்நாட்டு மற்றும் சர்வதேச தொடர்புடையதான ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் நிறுவக நிலையில் உயர்நிலையை அடைதல்.

- தேசத்தின் தேவைப்பாடுகள் மற்றும் கைத்தொழில் துறையினதும் சமூகத்தினதும் எதிர்ப்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையிலான கல்வியை வழங்கும் முன்னோடிப் பல்கலைக்கழமாக திகழுதல்.

- பல்கலைக்கழகம் அதனது செயற்பாடுகளில் வினைத்திறனை அடையும் வகையில் கல்விசார் புலமை மற்றும் பௌதீக சூழலை உயர்த்துதல்.

- முனைப்பான பல்கலைக்கழக கட்டமைப்பின் நிபந்தனைகளை சந்திக்கத்தக்க சிறந்த அறிவுமிக்க, திறமைமிகுந்த மற்றும் திருப்தியடைந்த ஆளணியினர் மற்றும் மாணவர்களை உள்ளடக்கியதுமான சமூகத்தை உருவாக்குதல்.

- உயர் தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குவதில் திறமைமிக்க சேவை வழங்கும் முன்னோடியாகத் திகழுதல்.

- இலங்கையில் ஒழுக்க நெறிமுறைகள் மற்றும் உயர்/தொழில்சார் கல்வி தொடர்பிலான தேசிய அபிவிருத்தி மற்றும் கொள்கை வகுப்பில் அரசாங்கத்திற்கு ஆலோசகராக செயற்படுதல்.

- தர உறுதிப்பாடு மற்றும் வினைத்திறன் மிக்க கூட்டு நல்லாட்சியினை பல்கலைக்கழக கலாசாரத்தில் ஏற்படுத்துதல்.

**பதவிவழி உறுப்பினர்கள்:**

| | |
|---|---|
| உப வேந்தர் (தவிசாளர்) | பேராசி. கே.கே.சி.கே. பெரேரா |
| பிரதி உப வேந்தர் | பேராசி. பீ.கே.எஸ். மஹானாம |
| பீடாதிபதி, கட்டடக்கலைப் பீடம் | பேராசி. எம்.எல். த சில்வா (2019.12.05 வரை)<br>கலாநிதி டீ.பீ. சந்திரசேக்கர (2019.12.06 முதல்) |
| பீடாதிபதி, வியாபார பீடம் | பேராசி. என்.டீ. குணவர்தன |
| பீடாதிபதி, பொறியியல் பீடம் | பேராசி. என்.கே. விக்கிரமாரச்சி |
| பீடாதிபதி, தகவல் தொழில்நுட்ப பீடம் | திரு. பீ.எம். கருணாரத்ன |
| பீடாதிபதி, பட்டமேற்படிப்பு கற்கை பீடம் | பேராசி. (திருமதி) எஸ்.ஏ.டீ. டயஸ் |

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்:**

கலாநிதி திலக் சியம்பலாபிட்டிய (2015.04.20 முதல்)

சக்தி பற்றிய சர்வதேச ஆலோசகர் மற்றும் SLEMA பருவ சஞ்சிகையின் ஆசிரியர், இலங்கை சக்தி பற்றிய முகாமையாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர், இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் கூட்டாண்மை உறுப்பினர், வலுத் திறன் மற்றும் மின்சக்தி உற்பத்தி திட்டமிடல் தொடர்பாக மின்சக்தி, வலு அமைச்சு மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியவற்றில் பணியாற்றியுள்ளார்.

பொறியியலாளர் வஜிர குலதிலக்க (2015.04.20 முதல்)

பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் - NDB கெபிடல் ஹோல்டிங்ஸ் லிமிடெட் (NCAP), சென்ற வருட தலைவர் – சவுத் ஏசியன் பெடரேஷன் ஒப் எக்சேன்ஜ்ஸ் (SAFE) மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனை (CSE), CFA பட்டயம் பெற்றவர் மற்றும் தோழமை உறுப்பினர் – பட்டய முகாமைத்துவ கணக்காளர்களின் நிறுவகம் – ஐக்கிய இராச்சியம் (FCMA). ஐக்கிய அமொிக்காவின் சர்வதேச அபிவிருத்திற்கான முகவராண்மை (USAID), சம்பத் வங்கி மற்றும் CKN நிதி முகாமை உட்பட பிரதான மூலோபாய பதவிகளில் சேவையாற்றியுள்ளார்.

திருமதி கீதாஞ்சலி சூபிகா ரனவக்க (2015.08.27 முதல்)

பணிப்பாளர் நாயகம் – இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம் – 2012 முதல், தேசிய சுவடிக்கூட திணைக்களம் மற்றும் இலங்கை சுங்கத் திணைக்களம் ஆகியன சார் சட்டத் திருத்தம் பற்றிய முன்மொழிவுக் குழுக்களின் அங்கத்தவர்

மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் பலவற்றிலும் குழு அங்கத்தவர் மற்றும் கடந்த 4 ஆண்டு காலப்பகுதியில் உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பின் (WIPO) ஆதரவுடன் தேசிய புலமைச்சொத்துக்கள் அலுவலகத்தின் (NIPO) கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது சார்பாக பணியாற்றியுள்ளார்.

Dr. சின்னையா சாந்திதாஸ் ஆரியரத்ன (2017.05.22 முதல்)

சர்வோதய சிரமதான இயக்கத்தின் தலைவர், சமூதாய மருத்துவம் தொடர்பான சபை சான்றுபடுத்தப்பட்ட மருத்துவ நிபுணர், இலங்கை சமூதாய மருத்துவர்களது சங்கத்தின் (CCPSL) முன்னாள் தவிசாளர், ஐக்கிய இராச்சியத்தின் லிவர்பூல் ஸ்கூல் ஒப் டொபிகல் மெடிசின் நிறுவகத்தின் வெளிவாரி உறுப்பினர், ஐக்கிய இராச்சியத்தின் லீட்ஸ் பல்கலைக்கழகத்தின் மருத்துவ மற்றும் சுகாதார பீட நபீல்ட் நிறுவகத்தின் புலமைப்பரிசில் பெற்ற அங்கத்தவர்.

பேராசிரியர் கமால் டீன் (2017.05.22 முதல்)

களனி பல்கலைக்கழக, அறுவைசிகிச்சை தொடர்பான பேராசிரியர், இலண்டன் அறுவைசிகிச்சை மருத்துவர்களது றோயல் கல்லூரியின் தோழமை உறுப்பினர், பெருங்குடல் மற்றும் மலக்குடல் அறுவைசிகிச்சை பற்றிய அமொிக்கா சங்கத்தின் உறுப்பினர், இலங்கை தேசிய விஞ்ஞான அகடமியின் தோழமை உறுப்பினர், இந்தியா – பெருங்குடல் மற்றும் மலக்குடல் சங்கத்தின் உறுப்பினர், இந்தியா – மும்பாய் டாடா நினைவு புற்றுநோய் மையம், இஸ்லாமிய சர்வதேச மருத்துவ பல்கலைக்கழகம், வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி மற்றும் மலேசியா செரம்மன் – சர்வதேச மருத்துவ பல்கலைக்கழகம் ஆகியவற்றின் வருகைதரும் பேராசிரியர்.

திரு. மானில் ஜயசிங்ஹ FCA,FCMA,CIPFA (2018.04.20 முதல்)

பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்தின் தோழமை உறுப்பினர் (ஐக். இராச்.), இலங்கை பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்தின் தோழமை உறுப்பினர் மற்றும் பொது நிதியும் கணக்கீடும் சார் பட்டய நிறுவகத்தின் உறுப்பினர், இலங்கை பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்தின் உப தலைவர், நியாயாதிக்க கணக்கீட்டு நியமங்கள் குழுவின் தவிசாளர், நியாயாதிக்க கணக்காய்வுக் குழு அங்கத்தவர், கணக்காளர்களின் சர்வதேச சம்மேளனத்தின் சர்வதேச கணக்கீட்டு கல்வி நியமங்கள் சபையின் அங்கத்தவர், கணக்காளர்களின் தெற்காசிய சம்மேளனத்தின் கணக்கீட்டு நியமங்கள் குழுவின் (SAFA) தவிசாளர், பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகளின் கணக்காய்வுக் குழுக்களது ஆலோசகர் மற்றும் CMA ஸ்ரீலங்கா நிறுவகத்தின் கவுன்சில் உறுப்பினர்.

திரு. லிலான் ரந்திக விக்கிரமரத்ன (2018.04.20 முதல்)

இலங்கை உயர் நீதிமன்றத்தின் சனாதிபதி சட்டத்தரணி மற்றும் பதிவுசெய்யப்பட்ட கம்பனி செயலாளர், பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்தின் (ACMA) (ஐக். இராச்.) இணை உறுப்பினர் மற்றும் பட்டய உலகளாவிய முகாமைத்துவ கணக்காளர்களர் (CGMA), டயலோக் Axiata PLC கம்பனி குழுமத்தின் சட்டமும் ஒழுங்குபடுத்தலும் பற்றிய அலகு முகாமையாளர்.

திரு. மதுர பிரேமதிலக்க (2018.04.20 முதல்)

கட்டடக்கலைஞர் மற்றும் நகர வடிவமைப்பாளர், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் கட்டடக்கலை திணைக்களத்தில் சிரேஷ்ட விரியாளராக பணியாற்றியுள்ளார், கொழும்பு teaM Architrave இன் தலைவர்.

கலாநிதி திலக்கரத்ன ஏ. பியசிறி (2018.04.20 முதல்)

தேசிய கல்வி ஆணைக்குழுவின் உப தவிசாளர் (திட்டமிடல்), மூன்றாம் நிலை மற்றும் தொழில்பயிற்சிக் கல்வி ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் (மற்றும் தொழில்பயிற்சி தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் உப வேந்தர்) சேவை உட்பட பல அரச நிறுவனங்களில் பணியாற்றியுள்ளார். அங்கீகாரம் சார்பாக தொழில்சார் நிறுவனங்களது தேவைகளுக்கேற்ப பல்கலைக்கழகங்களின் தொழில்நுட்ப பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பாளராக பணியாற்றுவதுடன், மொறட்டுவைப் பல்கலைக்கழக எந்திர பொறியியல் திணைக்களத்தின் முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளரும் ஆவார்.

கலாநிதி சஞ்ஜீவ வீரவரன (2018.04.20 முதல்)

இலங்கை தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயற் குழுவின் அங்கத்தவர், இலங்கை வணிகப் பேரவையின் சபை குழு அங்கத்தவர், சம்பத் வங்கியின் பணிப்பாளர் சபை அங்கத்தவர், லங்கா சொப்ட்வெயர் பவுண்டேஷனின் ஸ்தாபகர், தலைவர் மற்றும் பிரதான நிர்மாணகர்த்தா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணினியியல் நிலையான குழுவின் அங்கத்தவர் மற்றும் இலங்கை நனோதொழில்நுட்ப நிறுவகத்தின் (SLINTEC) பணிப்பாளர் சபை அங்கத்தவர்.

**மூதவையினால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள்** : பேராசி. எம்.எஸ். மானவடு
பேராசி. பீ.ஜீ.ஆர். தர்மரத்ன

**பதிவாளர் (செயலாளர்)** : Ms. வீ. குலசேக்கர - (2019.03.14 வரை)
Ms. டபிள்யூ.எம்.டீ.பீ. மடவல ஹுலுகல்ல (2019.03.15 முதல்)

**நிதியாளர் (அழைப்பின் போில்):** திரு. கே.ஏ.டீ. புஸ்பகீர்த்தி

## 1. பல்கலைக்கழக செயற்பாடுகள் சார் மீளாய்வு

மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது (UOM), 1960-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பிரத்தியேக தொழில் நுட்ப நிறுவகம் மற்றும் 1966-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி என்பவற்றைத் தொடர்ந்து, 1972ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 15ஆம் திகதி முதல் கட்டுபெத்தைப் பல்கலைக்கழகமாகச் செயற்பட ஆரம்பித்தது. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கட்டுபெத்தைப் பல்கலைக்கழகமானது, அதன் தற்போதய பெயரான "இலங்கை மொறட்டுவை பல்கலைக்கழகம்" எனும் ஒரு சுயாதீனப் பல்கலைக்கழக அந்தஸ்தையும் பெற்றுக்கொண்டது. 2019 ஆம் ஆண்டின் இறுதியில், மொறட்டுவை பல்கலைக்கழகமானது கட்டடக்கலை, பொறியியல், தகவல் தொழில்நுட்பம், பட்டமேற்படிப்புக் கற்கைகள் மற்றும் வியாபாரம் ஆகிய ஐந்து பீடங்களைக் கொண்டிருக்கிறது. வியாபார பீடம் 2017 சனவரி மாதம் தொடங்கப்பட்ட அதேவேளை, மொறட்டுவை பல்கலைக்கழகம் மருத்துவ பீடத்தை ஆரம்பிக்க ஆவலுடன் காத்திருக்கிறது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) மூலம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பன்னிரெண்டு (12) இளமாணிப் பட்டப் பாடநெறிகளை வழங்கும் கல்விசார் பீடங்கள் இருபத்திரெண்டு (22) (பார்க்க: அட்டவணை - 1) 2019 ஆண்டின் இறுதியில் பல்கலைக்கழகத்தில் காணப்பட்டன. செலவை மீட்கும் அடிப்படையில் இந்த 22 திணைக்களங்களும் ஐம்பத்து இரண்டும் (52) மேற்பட்ட பட்டமேற்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றன. அதில், 2019 ஆண்டில் 47 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளதுடன், புதிய பட்டமேற்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் சில உட்பட 32 நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய புதிய உள்வாங்கல் செயற்பாட்டை மேற்கொண்டுள்ளது. மொறட்டுவை பல்கலைக்கழகமானது யாராலும் மறுக்க முடியாதளவிற்கு இன்று இலங்கையில் **எல்லா வகையிலும் மிகச் சிறந்த** பல்கலைக்கழகமொன்றெனும் கீர்த்தியைப் பெற்றுக் கொண்டுள்ளது. கல்வி அடிப்படையில், ஏற்றுக்கொள்ளப்பட்ட உலகப்

அட்டவணை 1- மொறட்டுவை பல்கலைக்கழக பீடங்கள் மற்றும் திணைக்களங்கள்

| |
|---|
| **கட்டடக்கலை பீடம்** |
| கட்டடக்கலை திணைக்களம் |
| பட்டணமும் நாடும் திட்டமிடல் திணைக்களம் |
| கட்டட பொருளியல் திணைக்களம் |
| ஒருங்கிணைந்த வடிவமைப்பு திணைக்களம் |
| **வியாபார பீடம்** |
| தீர்மானித்தல் விஞ்ஞான திணைக்களம் |
| கைத்தொழில் முகாமைத்துவ திணைக்களம் |
| தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம் |
| **பொறியியல் பீடம்** |
| இரசாயன மற்றும் செயல்முறை பொறியியல் திணைக்களம் |
| சிவில் பொறியியல் திணைக்களம் |
| கணினி விஞ்ஞான, பொறியியல் திணைக்களம் |
| நில மூலவளங்கள் பொறியியல் திணைக்களம் |
| மின் பொறியியல் திணைக்களம் |
| இலத்திரணியல், தொலைத்தொடர்பு பொறி. திணைக்களம் |
| மொழிகள் திணைக்களம் |
| பொருட்கள் விஞ்ஞானம் மற்றும் பொறியியல் திணைக்களம் |
| இயந்திரப் பொறியியல் திணைக்களம் |
| கணிதவியல் திணைக்களம் |
| புடவையும் ஆடை தொழில்நுட்பமும் திணைக்களம் |
| போக்குவரத்து, தேவை ஒழுங். விநி. முகாமை. திணைக்களம் |
| **தகவல் தொழில்நுட்ப பீடம்** |
| தகவல் தொழில்நுட்ப திணைக்களம் |
| கணிப்பீட்டு கணிதவியல் திணைக்களம் |
| பல்துறைசார் கற்கைகள் திணைக்களம் |
| **பட்டமேற்படிப்புக் கற்கைகள் பீடம்** |

புகழ்பெற்ற பல்கலைக்கழகமொன்றில் பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் எதிலும் இலகுவாக அனுமதி பெற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் கற்கைகள் மற்றும் செயற்பாடுகள் ஆகிய இரண்டிலும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த பல்கலைக்கழமொன்றினால் உருவாக்கப்பட்ட பட்டதாரிகளைப் போன்று சிறப்பாகச் செயலாற்றக்கூடிய - தொழில்நுட்பத் துறைகளிலே "உலக தரம் வாய்ந்த பட்டதாரிகளை" உருவாக்குவதற்கு பல்கலைக்கழகம் கடுமையாக உழைக்கின்றது. அதனடிப்படையில், மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பிரதான இலக்கானது கற்கைகள் சார்பாக மிகச் சிறந்த, தன்னம்பிக்கைமிக்க, நெகிழ்வுடைய, அதிகளவில் வேலை பெறக்கூடிய சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரம் வாய்ந்த, பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் தொழில் செய்யக் கூடிய பட்டதாரிகளை உருவாக்குதல் மற்றும் அதேபோல், அவர்கள் பட்டத்தைப் பெறும்போது எமது மாணவர்கள் அதிகமானோர் "வேலை தேடுபவராக" அன்றி "வேலை உருவாக்குபவர்" எனும் நிலைக்குப் பயிற்றுவிப்பதுமாகும். எமது அதிகமான புதிய பட்டதாரிகளின் வருடாந்த சம்பளத்தை விடக் குறைந்ததொரு தொகையான **ஒரு மாணவருக்கு 9000 அமெரிக்க டொலரை விடவும் குறைந்த செலவில்** (மீண்டுவரும்) பொறியியல், கட்டடக்கலை, கணிய அளவையியல், வடிவமைப்பு, பட்டணமும் நாடும் திட்டமிடல், வசதியளித்தல் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், போக்குவரத்தும் ஏற்பாட்டு முகாமைத்துவம் மற்றும் வியாபாரம் போன்ற துறைகளில் உயர்ந்தளவில் தொழில்களில் அமரக் கூடிய, உலக தரம் வாய்ந்த பட்டதாரிகளை மொறட்டுவைப் பல்கலைக்கழகம் உருவாக்குகின்றது என்பதை சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

பல்கலைக்கழகத்தின் மூலோபாய திட்டமிடல் மற்றும் பல பூர்வாங்க வேலைகளை அமுலாக்குதல் மூலமாக இலங்கையை "அறிவியல் கேந்திரநிலையமாக" ஆக்குவதற்கு பங்களிப்புச் செய்யும் அதேவேளை, எமது நாட்டினது பொருளாதார அபிவிருத்தியில் செயற்பாட்டு இயக்கி ஒன்றாக ஆகுவதற்கான சில குறிக்கோள்களை உருவாக்கியுள்ளது. காணி கையேற்புச் செய்தல், பாடவிதான அபிவிருத்தி மற்றும் குவைட் அரசாங்கத்துடனான பூர்வாங்க கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடல் போன்றவற்றுடன் மருத்துவ பீடத்தை தொடங்குவதற்கான முன் ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப் பின்னணியுடன் இந்த மீளாய்வானது, மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பெற்றுக்கொள்ளல் அதிகரிக்கப்பட்டது சார்பாகவும், அதையடுத்து 2019 ஆம் ஆண்டில் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் அடைவுகள் மற்றும் அங்கீகாரங்கள் தொடர்பாக முதலில் நோக்குகின்றது. அதன் பின்னர் அது, மூலோபாயத் திட்டமிடல் அம்சங்கள், முதலீட்டுச் செலவுகள், புத்தாக்கமும் தொழில்முனைவுசார் தன்மையும் கொண்ட பட்டதாரிகளை உருவாக்குதல், பல்கலைக்கழக-கைத்தொழிற்றுறை ஒத்துழைப்புக்கள், தர உத்தரவாதம் என்பவற்றுடன் ஆய்வு விவரக்குறிப்பு மற்றும் சர்வதேசமயப்படுத்தல் சார்பாக முன்னேற்றும் எமது முயற்சி போன்றவற்றை நோக்குகின்றது. பல்கலைக்கழகத்தின் மூலோபாய அபிவிருத்திக்கு இடையூறாக அமைந்த வரையறைகள் பற்றிய ஒரு சுருக்கமான கூற்றுடன் ஆய்வு முடிவடைகின்றது.

### 1.1 பல்கலைக்கழக கல்வி பெற்றுக்கொள்வதை அதிகரித்தல்

2000 ஆம் ஆண்டில் மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது, பல்கலைக்கழகத்தினால் தனிவேறாக தேசிய தொழில்நுட்ப திப்ளோமாவை (NDT) வழங்குவதற்காக மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவகத்தை (ITUM) உருவாக்கியதுடன், இது அப்போது பொறியியல் பீடத்தின் ஒரு பகுதியாக இருந்தது. அதன்போது 2300 மாணவர்களைக் கொண்ட

பொறியியல் மற்றும் கட்டடக்கலை ஆகிய இரண்டு பீடங்களே இப் பல்கலைக்கழகத்தில் காணப்பட்டன. என்டீரீ பாடநெறியில் 1050 திப்ளோமா மாணவர்கள் இருந்தனர். பொறியியல் பீடமானது, பொறியியல் பி.எஸ்சி. எனும் பட்டத்தினை ஒன்பது துறைகளில் வழங்கிய அதேவேளை, கட்டடக்கலை பீடமானது கட்டட சூழல் பி.எஸ்சி. மற்றும் கணிய அளவையியல் பி.எஸ்சி. ஆகிய இரண்டு பட்ட நிகழ்ச்சிகளை வழங்கியது.

2019 ஆண்டின் இறுதியில், மொறட்டுவை பல்கலைக்கழகத்தில், பட்டப்படிப்பு மாணவர்கள் 8369 பேர் இருந்தனர். பொறியியல் பீடமானது மூன்று பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது. அவை, பி.எஸ்சி. பொறியியல் (விசேடமான கற்கைப் பிரிவுகள் பத்து), பி.எஸ்சி. போக்குவரத்து மற்றும் தேவை விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவம், பி. வடிவமைப்பு - நவநாகரீக வடிவமைப்பு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி என்பனவாகும்.

கட்டடக்கலைப் பீடம் ஆறு பட்ட நிகழ்ச்சிகளை வழங்குகின்றது. அவை, பீ. கட்டடக்கலை, பீ. வடிமைப்பு, பி.எஸ்சி. கணிய அளவையியல், பி.எஸ்சி. வசதிகள் முகாமைத்துவம், பி.எஸ்சி. பட்டணமும் நாடும் திட்டமிடல் மற்றும் பி.எஸ்சி. நிலத்தோற்ற வடிவமைப்பு கட்டடக்கலை பட்டங்களுமாகும். தகவல் தொழில்நுட்ப பீடமானது, பி.எஸ்சி. தகவல் தொழில்நுட்பம் மற்றும் பி.எஸ்சி. தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் ஆகிய இரண்டு பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது. 2017 ஆம் ஆண்டிலிருந்து வியாபார பீடம் வியாபார பகுப்பாய்வு, வியாபார செயலாற்றல் பகுப்பாய்வு மற்றும் நிதியியல் பகுப்பாய்வு ஆகிய மூன்று விசேட துறைகளில் இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் யாவும் 4 வருடங்கள் கொண்ட கௌரவ பட்ட நிகழ்ச்சித்திட்டங்களாகும். இதற்கு மேலதிகமாக, தகவல் தொழில்நுட்பப் பீடம் தனது பங்காளி நிறுவனங்களின் உதவியுடன் இணைந்து வெளிவாரியாக வழங்கும் நிகழ்ச்சித்திட்டமாக தகவல் தொழில்நுட்ப இளமாணி (BIT) நிகழ்ச்சித்திட்டத்தை வழங்குகின்றது.

**உரு 1 – கடந்த பத்து ஆண்டுகள் சார்பாக பீடங்களுக்கான வருடாந்த உள்வாங்கல்**




2019 அக்டோபர் மாதத்தில், 2018 உ./த. மாணவர் தொகுதியிலிருந்து மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு 1731 மாணவ, மாணவிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன், அது,

காலப்பகுதி சார்ந்த சிக்கல் மற்றும் பாரிய இடப்பிரச்சினை என்பவற்றை கவனத்தில் கொள்ளாது மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது புதிய அனுமதிகளுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் ஏனைய பல பல்கலைக்கழகங்களை விடவும் முன்னனியில் இருந்துமாகும்.

எமது பட்டதாரி நிகழ்ச்சித்திட்டத்திற்கான மாணவர்களினதும், அவர்களின் பெற்றோர்களினதும் அதிகரித்த கேள்வியை எதிர்கொள்வதற்காக பல்கலைக்கழகமானது கடந்த பத்து ஆண்டுகளில் வருடாந்த மாணவர் உள்வாங்கலை சகல விதத்திலும் 40% இற்கு மேலாகவும் தகவல் தொழில்நுட்ப பீட உள்வாங்கல் 118% ஆலும் அதிகரித்துச் சென்றுள்ளது என்பதைக் இங்கு குறிப்பிட்டுக் கூறுதல் வேண்டும். கடந்த பத்து மாணவர் உள்வாங்கல்கள் தொடர்பாகவும் மூன்று பீடங்களுக்கும் பட்டதாரி அபேட்சகர்கள் உள்வாங்கப்பட்ட முறையினை உரு-1 வெளிக்காட்டுகிறது. Z-புள்ளி பற்றிய பிரச்சினையின் விளைவாக மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை சரி செய்யும் வகையில் வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பின் காரணமாக பல்கலைக்கழகமானது பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் மேலதிக மாணவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியேற்பட்ட 2011/2012 கல்வியாண்டு விசேடமான ஆண்டாக அமைந்தது.

மொறட்டுவைப் பல்கலைக்கழகம் 2006 ஆம் ஆண்டில் அதனது திறந்த தொலைக் கல்வி (ODL) முறையிலான முதலாவது வெளிவாரி இளமாணி நிகழ்ச்சித்திட்டமான தகவல் தொழில்நுட்ப இளமாணிப் பட்டத்தை (BIT) ஆரம்பித்தது. மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பிரதான திட்டத்தின் ஊடாக இந்த திறந்த மற்றும் தொலைக்கல்வி முறையானது உயர் தரத்தில் தகுதிபெற்ற, குறிப்பாக கிராமபுர பிரதேசத்தைச் சேர்ந்த அதிக எண்ணிக்கையான மாணவர்களுக்கு இப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் உயர் தரத்தைக் கொண்ட கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கின்ற முறையொன்றாக இனம் காணப்பட்டுள்ளது. திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தின் (CODL) தொழிற்பாடு மற்றும் நிர்வாக தரத்தினை உயர்த்தும் எதிர்பார்ப்புடன் 2012 ஆண்டு செம்ரெம்பர் மாதம் இருபத்தோராம் நூற்றாண்டுக்கான உயர் கல்வி (HETC) திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூ. 20 மில்லியன் மானியத்துடன் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலைய செயற்பாடுகள் விரிவுபடுத்தப்படுத்தப்பட்டன. இம் மானியத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிகள் அதிகமாக 2014 - 2017 ஆண்டுகளில் செலவிடப்பட்டது. இந்த BIT நிகழ்ச்சித் திட்டமானது, பிரதானமாக அங்கீகாரம் பெற்ற பங்காளி நிறுவனங்களின் ஊடாக வழங்கப் படுவதுடன், இந்த முன்மாதிரியானது ஏனைய பல பல்கலைக்கழகங்கள் மூலம் வெளிவாரி பட்டங்கள் வழங்கப்படுகின்ற முறையை விட மாறுபட்டுக்காணப்படுவது அதன் தர உத்தரவாதப் படுத்தல் மற்றும் மாணவர் எண்ணிக்கை சார் கட்டுப்பாடும் ஆகும். 2019 ஆண்டின் போது இந் நிகழ்ச்சித்திட்டத்தை தொடருவதற்காக 561 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2019 ஆண்டின் இறுதியில் 2539 பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இந் நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்கின்றனர்.

## 1.2 அடைவுகள் மற்றும் அங்கீகாரங்கள்

கடந்த பத்தாண்டுகளில் வருடாந்த உள்வாங்கல்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து இருப்பதுடன், வரையறுக்கப்பட்ட வசதிகளுடன் மொறட்டுவைப் பல்கலைக்கழகம் எல்லாப் பட்டதாரிகளையும் ஏற்றவகையிலும் தரத்திலும் தடங்களின்றிப் பேணிச்செல்வதனாலும் மேம்படுத்தியுள்ளதனாலும் பெருமிதம் அடைகின்றது. 2019 இல் நடாத்தப்பட்ட பட்டதாரிகளின் தொழில் தன்மைகள் பற்றிய டிரஷர் ஆய்வில் (Tracer surveys) மொறட்டுவைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் கைத்தொழில்களாலும், அதன் தொழில் வழங்குநர்களாலும் பெரிதும் வேண்டப்படுகின்றார்கள் என்பதைக் சுட்டிக்காட்டும் வகையில் அவர்களின் பட்டமளிப்பு விழாவின் போது சகல பட்டதாரிகளும் 91.4%-மும், கட்டடக்கலை பட்டதாரிகள் 100.0%-மும், வடிவமைப்பு பட்டதாரிகள் 93.5%-மும், கணிய அளவையியல் பட்டதாரிகள் 96.8%-மும், பொறியில் பட்டதாரிகள் 93.4%-மும் மற்றும் தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகள் 96.6%-மும் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர் எனும் தகவல் பெறப்பட்டுள்ளது. உரு- 2 மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் பட்டப்படிப்பு பாடநெறிகள் ஒவ்வொன்றினதும் தொழில்வாய்ப்புத்திறன் வீதத்தைக் காட்டுகிறது.

**உரு 2 – பல்வேறுவகையான பாடநெறிகள் சார் பான வேலைவாய்ப்புத்திறன் - 2019**




2019 இல் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய 1407 மொத்த மாணவர் எண்ணிக்கையில் 1290 (92%) பேர் விதிக்கப்பட்ட குறைந்தபட்ச காலவரையறைக்குள் தமது முதாலவது பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்கள். 2019 ஆண்டு பொதுப் பட்டமளிப்புவிழாவில் பட்டமேற்படிப்பு பட்டங்ளையும் உள்ளடக்கி மொத்தமாக வழங்கப்பட்ட 1910 பட்டங்களில், 1407 இளமாணிப் பட்டங்களும், 503 பட்டமேற்படிப்பு பட்டங்களும் உள்ளடங்கியிருந்தன.

2019 ஆண்டில் பணியாளர்களினதும் மாணவர்களினதும் வினைத்திறன்மிக்க செயலாற்றல் காரணமாக தேசிய ரீதியில் மற்றும் உலகளாவிய ரீதியில் பல துறைகள் சார்பாக அங்கீகாரம் கிடைத்ததன் ஊடாக தொடர்ந்தும் மொறட்டுவை பல்கலைக்கழகம் சிறப்பான முன்னேற்றங்களை பெற்றுவருவதுடன், குறிப்பிடத்தக்க சில விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

சர்வதேச விருதுகள்:

- 2019 நவம்பரில் இலண்டன் நகரில் நடைபெற்ற 7-வது வருடாந்த குளோபல் டெலிகொம்ஸ் விருதுகள் (GLOTEL Awards) நிகழ்வில் டயலொக்-மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் செல்லிட தொடர்பாடல் ஆய்வுகூடத்தில் உருவாக்கப்பட்ட பல வகையான IoT தயாரிப்புக்கள் விருப்பத்துக்குரிய 'ஆண்டின் தொழில்துறை IoT முயற்சிகள்' விருதை வென்றன. இவ் வெற்றிப் பிரவேசம் டயலொக், மொறட்டுவைப் பல்கலைக்கழகம், ஆக்ஸியாடா டிஜிடல் லெப்ஸ் (ADL) மற்றும் லங்கா மின்சார கம்பனி (LECO) ஆகியவற்றுடனான 4 வழி பங்காண்மையின் விளைவாகும். இவ் விருது குறிப்பிடுவது போல, பங்காண்மையின் ஊடாக வீடுசார்ந்த தொழில்நுட்பத்திற்கு உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்த முடியுமென்பதை காண்பித்துள்ளது. இந்த அபிவிருத்திச் செயல்முறை முழுவதும் முடிவுக்கு முடிவு IoT பெற்றுக்கொண்ட முறைமைகள் சார் அனுபவம் இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் பொறியியல் திணைக்களத்தினது பட்டதாரி மாணவர்களுக்கான புதிய பாடநெறி தொகுதிகள் (மொடியூல்ஸ்) இரண்டை அறிமுகப்படுத்துவதற்கான வாய்ப்பை பெற்றுக்கொடுத்துள்ளதுடன், பல இறுதியாண்டு கருத்திட்டங்கள் சார்பாக ஆதரவளிப்பதற்கு டயலொக்- UoM ஆய்வாகத்திற்கும் இயலுமாகியுள்ளது.

- மைக்ரோசொப்ஃட் இமேஜின் கிண்ணம் 2019 நிகழ்வில் கணினி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் திணைக்களத்தின் தொகுதி '15 மாணவர்கள் குழு பங்குபற்றி, பிராந்திய இறுதிச் சுற்றுக்கு தொிவானது. பிராந்திய இறுதிச் சுற்றுப் போட்டிக்கு தொிவாகுவதற்கான தகைமை பெற்ற இலங்கையின் ஒரே அணி இவர்கள் என்பதுடன், இறுதிச் சுற்றுப் போட்டிக்காக தொிவு செய்யப்பட்ட 12 அணிகளுள் ஒன்றாகும். இறுதிச் சுற்றுப் போட்டி 2019 பெப்பிரவரி 10-ஆம் திகதி சிட்னி நகரில் நடைபெற்றது. போட்டித் தயாரிப்பு Mind Probe என பெயரிடப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் ALS மற்றும் DMS போன்ற தொடர்பால் குறைபாடுகள் உள்ளவர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆளொருவர் நினைக்கும் எண்ணைக் கணிப்பதற்கு மூளை அலைகள் பயன்படுத்தப்படுவதுடன், இத் தகவல்களை ஸ்மார்ட் தொலைபேசியின் ஊடாக தொடர்புபடுத்துவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

- எக்ஸ்போ2020 (Expo2020) துபாய் நிகழ்வில் ஆக்கபூர்வமான இளைஞர்கள் (Creative Youth Program - CYP) நிகழ்ச்சியில் பார்வையாளர்கூடம் வடிவமைப்பு போட்டி சார்பாக கட்டடக்கலை பீட, ஒருங்கிணைந்த வடிவமைப்புத் திணைக்களத்தின் (DID) பட்டதாரி மாணவர் குழுவொன்று வெற்றியீட்டியது. போட்டியில் வெற்றியீட்டியதன் பின்னர், 2020 ஆண்டு வரை துபாயில் நடைபெறும் எக்ஸ்போ 2020 நிகழ்வில் இலங்கை பார்வையாளர்கூடத்தை அமைக்கும் குழுவினருடன் பங்காற்றுவதற்கான வாய்ப்பை பெற்றுக்கொண்டது. சகல கப்பல் கட்டணங்கள் உட்பட தீர்வையற்ற இலங்கை பார்வையாளர்கூடம் உட்பட நாட்டுக்கு ஏராளமான நன்மைகள் இதன் மூலம் கிடைத்தன. வெற்றிபெற்ற அணி சார்பான செய்தியாளர் சந்திப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் வைபவம் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் (EDB) கேட்போர்கூடத்தில், 2019 பெப்பிரவரி 26-ஆம் திகதி EDB–இன் தலைவரும் பிரதம நிறைவேற்றுநருமான திருமதி இந்திரா மல்வத்த அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டது. அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மாண்புமிகு மலிக் சமரவிக்ரம மற்றும் மொறட்டுவை பல்கலைக்கழக உப

வேந்தர் பேராசிரியர் கபில பெரேரா ஆகியோர் பிரதம அதிதிகளாக பங்குபற்றி இந் நிகழ்வை சிறப்படையச் செய்தனர்.

- எந்திரப் பொறியில் திணைக்களத்தை சேர்ந்த சசிரங்க த சில்வா, டுக்டுக்-களை மின் சக்தியில் இயக்கச் செய்வதற்கு ஏற்கக்கூடிய மாற்றீடு கருவியொன்றை உருவாக்கியள்ளதுடன், ஐ.நா. சூழல் (UN Environment) நிறுவனத்திலிருந்து ஐ. அமெ. டொ. 20,000 தொகை மானியமொன்றை வென்றெடுத்துள்ளார். குறைந்த காபன் செயலாக்கல் பிரிவில், ஆசியா பசுபிக் குறைந்த காபன் வாழ்க்கைமுறைச் சவால் சார்பாக வெற்றியாளராக சசிரங்க அவர்களுக்கு உலகளாவிய நிபுணர்களிடமிருந்து வணிக மற்றும் சந்தைப்படுத்தல் பயிற்சியை பெற்றுக்கொள்வார். ஆசியா – பசுபிக் குறைந்த காபன் வாழ்க்கைமுறையை எவ்வாறு வளர்ப்பது என்பது தொடர்பாக வணிக கருத்துக்களைக் கொண்ட இளைஞர்களை அணி திரட்டுவதையும் ஆதவளிப்பதையும் நோக்காகக் கொண்டுள்ளது.

- படைப்பாற்றல் 2019 சார்பான கேன்ஸ் லயன்ஸ் (Cannes Lions) விழாவில், ரோஜர் ஹெப்சுவல் (Roger Hatchuel) அகடமியின் இலங்கை மாணவர் பிரதிநிதியாக, கட்டடக்கலை பீடத்தினது ஒன்றிணைந்த வடிவமைப்பு திணைக்களத்தின் ஊடக மற்றும் தொடர்பாடல் வடிவமைப்பைச் சேர்ந்த மூன்றாம் ஆண்டு மாணவரொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ரோஜர் ஹெப்சுவல் அகடமியானது, வருடாந்த ஐந்து நாள் பயிற்சித்திட்டத்தை கொண்டுள்ளதுடன், அது 2019 யூன் 17 முதல் 21 வரை பிரான்ஸில் நடாத்த திட்டமிடப்பட்டிருக்கிறது. விளம்பரப்படுத்தல், தொடர்பாடல் மற்றும் ஏனைய ஆக்கபூர்வமான துறைகள் தொடர்பாக சிறப்புத்தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு போட்டித்தன்மையான படைப்பாற்றல் துறை சார்பாக வகிபாத்திரமொன்றை பெற்றுக்கொள்வது தொடர்பாக இந் நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தற்போதய கைத்தொழில் நிலத்தோற்றத்திற்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அது வகுப்பறை அமர்வுகள் மற்றும் உத்தியோகபூர்வ விழா உள்ளடக்க தேர்வு என்பவற்றை ஒன்றிணைக்கிறது. இந்த வாய்ப்பு உலகம் முழுவதும் உள்ள மாணவர்கள் 40 பேருக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதுடன், கேன்ஸ் லயன்ஸ் போட்டியில் வெற்றியீட்டியதன் மூலம் கேன்ஸ் லயன்ஸ் விழா – 2019 நிகழ்வில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பை அவர் பெற்றுக்கொண்டார்.

- தாய்லாந்தின் பேக்கொக் நகரில் நடைபெற்ற கைத்தொழில்துறை பொறியியல் மற்றும் தொழிற்பாட்டு முகாமைத்துவம் (IEOM) பற்றிய 9-வது சர்வதேச மாநாட்டில் கட்டடப் பொருளியல் திணைக்களத்தின் மாணவர்கள் மற்றும் பணியாளர்களைக் கொண்ட ஆராய்ச்சி குழு அவர்களது 'ஒப்பந்தத்திற்கு முந்திய கட்டத்தில் முறையான நடைமுறை ஊடாக நிர்மானிப்பு கட்டத்தில் மோதல் தவிர்ப்பு' ("Conflict Avoidance in Construction Stage through Proper Practice in Pre Contract Stage") எனும் தலைப்பிலான அவர்களது ஆராய்ச்சிப் பத்திரத்திற்கு சிறந்த தடம்சார் பத்திர விருதை வென்றெடுத்தது.

- இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் பொறியியல் திணைக்களத்தின் எம்.பீல். (MPhil) மாணவரொருவர், கனடாவில் நடைபெற்ற சர்வதேச கண்டுபிடிப்பு புத்தாக்கப் போட்டியில் (iCAN 2019) மூன்று தங்கப்பதங்கள், ஒரு வெள்ளிப்பதக்கம் மற்றும் மூன்று சிறப்பு பரிசுகளை வென்றெடுத்துள்ளார். அவரது கண்டுபிடிப்புக்களில் பார்வையற்றவர்களுக்கான வழிகாட்டும் உபகரணம், வாகனங்களுக்கான ஹெட்லைட்டை மங்கலாக்கும் சாதனம்,

தானியங்கி இரயில் கடவை வாயில் கட்டுப்பாட்டு அமைப்பு மற்றும் தையல் இயந்திர கண்காணிப்பு அமைப்பு என்பன உள்ளடங்குகின்றன.

- மலேசியா, சேலங்கூர், கோலாலம்பூர் உட்கட்டமைப்பு பல்கலைக்கழகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட 19-வது கோலாலம்பூர் சர்வதேச வியாபார, பொருளாதார மற்றும் சட்ட மாநாடு 2019 ஆகஸ்ட் 24 – 25 வரை மலேசியாவின் செலங்கோர், பங்கியில் நடாத்தப்பட்டது. சிறந்த பத்திரத்திற்கான விருது "இலங்கை பெண் தொழில்முயற்சியாளர்கள்: எதிர்கொள்ளும் சட்ட சவால்கள்" எனும் தலைப்பிலான பத்திரத்திற்காக வியாபார பீட, கைத்தொழில் முகாமைத்துவ திணைக்களத்தினது கலாநிதி தெசரா வீ.பீ. ஜயவர்தன அவர்களுக்கு வழங்கப்பட்டது. அவரது ஆய்வுப்பத்திரமானது வியாபாரம், பொருளாதாரம் மற்றும் சட்டம் சார் சர்வதேச ஜேர்னல் (The International Journal of Business, Economics and Law), தொகுதி 19-இல் பிரசுரிக்கப்படவுள்ளது.

- சிங்கப்பூர், ஸ்பைக்ஸ் ஆசியா (Spikes Asia) அமைப்பு ஆசியா பசுபிக் படைப்பாற்றல் சமூகத்திற்கு தொடர்பாடல் சார் படைப்பாற்றல் தொடர்பாக அற்புதமான மூன்று நாள் கொண்டாட்டத்தில் ஒன்றிணைவதற்கான மேடையொன்றை ஏற்படுத்திக்கொடுக்கிறது. ஸ்பைக்ஸ் ஆசியா விழா என்பது, பிராந்தியம் முழுவதும் உள்ள படைப்பாற்றலுடைய தொடர்பாடல் தொழில்வாண்மையாளர்களுக்கான கற்றல் மற்றும் வலையமைப்பு சார்பாக வாழ்நாளினுள் ஓர் வாய்ப்பாக கருதப்படுகிறது. இதன் கீழ் ஒழுங்குசெய்யப்பட்ட இளம் ஸ்பைக்ஸ் மாணவர் போட்டியில் UNDP மூலம் கொடுக்கப்பட்ட சுருக்கத்திற்கு பதிலளிக்கும் வகையில் சுவரொட்டியொன்றை தயாரிக்குமாறு மாணவர்களிடம் வேண்டிக்கொள்ளப்பட்டது. மொறட்டுவைப் பல்கலைக்கழக, கட்டடக்கலை பீட, ஒன்றிணைக்கப்பட்ட வடிவமைப்பு திணைக்களத்தின் வெகுசன ஊடாகம் மற்றும் தொடர்பாடல் வடிவமைப்பின் II ஆம் நிலை மாணவரொருவரின் சுவரொட்டி வடிவமைப்புக்கு பிரசுரிப்பதற்குரிய மாணவர் படைப்பாற்றல் விருதுக்கான தங்கப் பதகத்தை வென்றெடுத்தது. அத்துடன், சிங்கப்பூர் சன்டெக் மாநாட்டு நிலையத்தில் 2019 செப்ரெம்பர் 25 முதல் 27 ஆம் திகதி வரை, ஓர் மாநாடு, ஒரு செயலமர்வு மற்றும் விருது வழங்கல் வைபவம் ஆகியவற்றுக்காக சிங்கப்பூருக்குச் செல்வதற்கான வாய்ப்பு அவருக்கு கிடைத்தது.

- பேச்சுக் கோளாறு உள்ளவர்களுக்கு ஏனையோர்களுடன் தொடர்பாடலை மேற்கொள்ள உதவுகின்ற கருவியொன்றுக்கான வடிவமைப்பு யோசனையை இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் திணைக்களத்தைச் சேர்ந்த மாணவர் குழுவொன்றுக்கு முன்வைக்க இயலுமானது. டெராசிக் மற்றும் இன்டெல் (Terasic and Intel) உடன் செயற்கை மதிநுட்பத்தின் எதிர்காலத்தை கண்டுபிடிப்பதற்காக உலகெங்கிலும் உள்ள அணிகள் போட்டியிடும் உலகளாவிய FPGA வடிவமைப்பு போட்டியான InnovateFPGA 2019 இல் இந்த யோசனை வெளியிடப்பட்டது. பங்குபற்றிய 30 அணிகளிடையே, ஆசியா பசுபிக் மற்றும் ஜப்பான் பிராந்திய இறுதிச் சுற்றில் இவ் அணியினருக்கு இரும்பு விருதைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

- பேராசி. சிசில் குமாரவடு அவர்கள், மின் சக்தி சார் சங்ஹாய் பல்கலைக்கழகத்தின் (SUEP) இலத்திரனியல் மற்றும் தகவல் பொறியியல் கல்லூரியில் வெளிநாட்டு கீர்த்திமிக்க பேராசிரியர் ஒருவராக கௌரவ பதவியொன்று வழங்கப்பட்டது. 1951-இல் ஆரம்பிக்கப்பட்ட SUEP-இல் தனித்துவமான 12 கல்லூரிகள் மின் உற்பத்தி நிலையங்களில் பிரைம் மூவர்ஸ் தொடர்பாக புதிய எண்ணக்கருக்களில் இருந்து சக்தி முறைமைகள் சைபர்

பாதுகாப்பு வரை பரந்த அளவிலான மின் சக்தி பொறியியல் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளது. ஸ்மார்ட் வலு செயல்திறன் மிக்க கட்டடங்கள் கூட்டு ஆராய்ச்சி ஆய்வகமொன்றை அமைத்தல் உட்பட கூட்டு ஆராய்ச்சி முயற்சிகள் தொடர்பாக UoM மற்றும் SUEP ஏற்கனவே முக்கியமான முன்னேற்றங்களை பெற்றுக்கொண்டுள்ளன. பேராசி. குமாரவடு அவர்கள் தற்போது, மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் மின் பொறியியல் சார் சிரேஷ்ட பேராசிரியரும் மின் பொறியியல் திணைக்களத்தின் தவைருமாவார்.

- எந்திரவியல் பொறியியல் திணைக்களத்தைச் சேர்ந்த கலாநிதி திலின லலிதரத்ன, சஞ்ஜய மல்லிகாரச்சி மற்றும் துலித் சிந்தக ஆகியோர், கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரில் IEEE BIBE 2019 நிகழ்வின் போது நடாத்தப்பட்ட "BrainComputer Interface Hackathon" இல் அவர்களது "Brain Signaled Controlled Wearable Surgery Assistant Robot" தொடர்பாக முதலாம் பரிசை வென்றெடுத்தனர்.

**தேசிய விருதுகள்:**

- 2018 இற்கான வருடாந்த MAS விருதுகள் விழா, 2019 பெப்பிரவரி 28-ஆம் திகதி கொழும்பு கோல் பேஃஸ் ஹோட்டலில், MAS கிளஸ்டர் மற்றும் ஏனைய பல்கலைக்கழகங்களின் உயர்மட்ட நபர்களின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டது. புடைவை மற்றும் ஆடை தொழில்நுட்ப திணைக்களத்தின் தலைவர் பேராசி. (திருமதி) சமுத்ரிகா விஜயபால மற்றும் ஏனைய சிரேஷ்ட பணியாளர் அங்கத்தவர்கள் விசேட அதிதிகளாக இவ் வைபவத்தை சிறப்பிக்க அழைக்கப்பட்டிருந்தனர். புடைவை மற்றும் ஆடை தொழில்நுட்ப திணைக்களத்தின் இரண்டு மாணவர்கள் 2018-ஆம் ஆண்டுக்கான சிறந்த சகலதுறை மாணவர் மற்றும் நாகரிக வடிவமைப்பு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி சார் 2018-ஆம் ஆண்டுக்கான சகலதுறை மாணவர் எனும் MAS விருதுகளை வென்றெடுத்தனர்.

- ஹேய்லீஸ் எட்வான்டீஸுடன் (Hayleys Advantis) ஒன்றிணைந்து சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கிளப் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட "கொ.பா.ப. லொஜிஸ்டிக்ஸ் தினம் 2019" லொஜிஸ்டிக்ஸ் விடய ஆய்வு சவால் நிகழ்ச்சி 2019 ஏப்பிரல் 01-ஆம் திகதி ஹேய்லீஸ் எட்வான்டீஸ் வளாகத்தில் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது. போக்குவரத்து தேவை விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவ (TLM) பட்டதாரி மாணவர்கள் சம்பியன்ஸ்களாவும் அதேபோல், இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களையும் வென்றெடுத்தனர்.

- இலங்கை டிஜிடல் இலத்திரனியல் நோக்கியதாக வித்யா ஜோதி பேராசிரியர் கே.கே.வை. டபிள்யூ. பெரேரா அவர்கள் ஆற்றிய பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் விருது வழங்கப்பட்டது. இலங்கையில் இலத்திரனியல் பொறியியல் சார் முதலாவது பேராசிரியரான இவர், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் பொறியியல் திணைக்களத்தின் ஆரம்பத் தலைமைத்துவ முன்னோடியும் என்பதுடன், அனலொக் (Analog) மற்றும் டிஜிடல் இலத்திரனியல் பற்றியும் கற்பித்தார். இவர், இலங்கை கணினி மற்றும் தகவல் கவுன்சிலின் (CINTEC) தலைவராகவும், பின்னர் அரசாங்க தொலைத்தொடர்பு இயக்குநர் ஸ்ரீலங்கா டெலிகொம் (SLT) நிறுவனத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

- தகவல் தொழில்நுட்ப பீடத்தின் 4-வது நிலை மாணவரொருவர், 2019 ஆகஸ்ட் 24-ஆம் திகதி, கொழும்பு SLT தலைமை அலுவலகத்தில் 2019 - 2020 ஆம் ஆண்டுக்கான STEMUp

மிகப் பெறுமதிமிக்க தன்னார்வாளர் (MMV) விருதை வென்றெடுத்தார். மாணவர் சமூகத்தின் நலனுக்காகவும் பிறரை தன்னார்வுத் தொண்டாற்ற தூண்டச் செய்யவும் தமது பெறுமதியான நேரம் மற்றும் திறன்களை பங்களிப்புச் செய்த தனி நபர்களை STEMUp கல்விசார் பவுன்டேஷன் அங்கீகரிப்புச் செய்கிறது.

- பேராசி. சிசில் குமாரவடு அவர்களுக்கு, உலக கல்வி காங்கிரஸ் மற்றும் CMO ஆசியா ஆகியவற்றின் மூலம் CMO கவுன்சில் அதன் உபாய பங்காளராக, இலங்கை கல்வி சார் தலைமைத்துவம் 2019 விருது வழங்கப்பட்டது. இந்த விருதானது, முன்மாதிரியான தலைமைத்துவத்துடன், முன்மாதிரியாளர்களாக செயற்பட்ட தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த விருது, ஆராய்ச்சி செயல்முறையின் அடிப்படையில் உலகெங்கிலும் உள்ள சிரேஷ்ட தொழில்வாண்மையாளர்கள் எட்டுப் பேர் கொண்ட ஜூரி நடுவர்கள் குழுவின் மூலம் ஆராய்ச்சி குழுவினால் வழங்கப்பட்ட பட்டியலொன்று மதிப்பாய்வு செய்யப்படுகிறது.

- இலங்கை பொறியியலாளர்களின் நிறுவகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட தேசிய பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கண்காட்சியான டெக்டோ 2019 நிகழ்வில் சிறந்த பல்கலைக்கழக காட்சிக்கூடத்திற்கான தங்க விருதை மொறட்டுவைப் பல்கலைக்கழக, பொறியியல் பீடம் வென்றெடுத்தது. இது அக்டோபர் 11, 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் BMICH மண்டபத்தில் நடைபெற்றது. மொறட்டுவைப் பல்கலைக்கழகம் தொடர்ச்சியாக நான்கு வருடங்கள் ஏனைய அரசாங்க பல்கலைக்கழகங்களுடன் போட்டியிட்டு, தங்க விருதை வென்றெடுத்துள்ளது. "நிலைபேறான இலங்கையை நோக்கியதான புத்தாக்க பொறியியல்" எனும் கருப்பொருளின் கீழ் புத்தாக்கமான மற்றும் அற்புதமான அனுபவத்தை பெற்றுக்கொடுப்பதற்காக இக் கண்காட்சி ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. பொறியியல் பீடத்தின் சகல திணைக்களங்களினதும் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு மாணவர்களது ஆராய்ச்சி கருத்திட்டங்களின் நவீன மற்றும் கவர்ச்சியான கண்காட்சிகள் அதில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

- hackX 2019 என்பது, களனி பல்கலைக்கழகத்தின் கைத்தொழில்துறை முகாமைத்துவ விஞ்ஞான மாணவர்களின் சங்கத்தின் மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான ஹக்கதொன் (Hackathon) நிகழ்வாகும். இவ் வருட நிகழ்வு கைத்தொழில்துறை மட்டத்திலான உற்பத்தி அபிவிருத்தி வழிகாட்டுதல் ஊடாக புத்தாக்க தொடக்க முயற்சி சவாலாக மிக திடமான வடிகட்டப்பட்ட தொடக்க முயற்சிகள் உள்நாடு மற்றும் உலகளாவிய ரீதியில் தற்போதுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்காக புத்தாக்கமான மற்றும் சாத்தியமான தீர்வுகளையும் செயற்படுத்தல் திட்டங்களையும் வடிவமைப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. மொறட்டுவைப் பல்கலைக்கழக, தகவல் தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த Bits of Erise அணி, போட்டியின் ஆரம்ப தொிவுச்சுற்று, அரையிறுதிச் சுற்று மற்றும் இறுதிப் போட்டிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்ததன் பின்னர், 2019 செப்ரெம்பர் 29-ஆம் திகதி hackX 2019 இன் மூன்றாவது இடத்தை வெற்றியீட்டிக் கொண்டது.

- பேராசிரி. எம்.ரீ.ஆர். ஜயசிங்ஹ (சிரேஷ்ட பேராசிரியர்), பேராசிரி. (திருமதி) சீ. ஜயசிங்ஹ (சிரேஷ்ட பேராசிரியர்) மற்றும் சிவில் பொறியியல் திணைக்களத்தின் கலாநிதி ஜே.சீ.பீ.எச். கமகே (சிரேஷ்ட விரிவுரையாளர்) ஆகியோர், 2019 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற விஞ்ஞானபூர்வ பிரசுரத்துக்கான சனாதிபதி விருதுகள் விழாவில் 2017 ஆம் ஆண்டின் விஞ்ஞானபூர்வ பிரசுரத்துக்கான விருதின் வெற்றியாளர்களாக தொிவு செய்யப்பட்டனர்.

- கணினி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் திணைக்களத்தின் பேராசிரியர் கிஹான் டயஸ், உள்நாட்டு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) துறையின் வளர்ச்சிக்காக ஆற்றிய விலைமதிப்பற்ற சேவைகள் சார்பாக "ICT வாழ்நாள் சாதனையாளர் விருது" வழங்கப்பட்டது. இவ் அங்கீகாரம், 2019 அக்டோபர் 11-ஆம் திகதி, NBQSA விருதுகள் வழங்கும் நிகழ்வில் தகவல் தொழில்நுட்பவியலுக்கான (IT) BCS பட்டய நிறுவகம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை (ICTA) ஆகியன இணைந்து வழங்கியது.

- தொழிலாளர் மற்றும் தொழில்சங்க உறவுகள் அமைச்சினது, இலங்கையின் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் மூலம் நடாத்தப்பட்ட தேசிய பாதுபாப்பு தொழில்வாண்மையாளர்கள் சங்கத்தின் (NSPA) சிறந்த பாதுகாப்பு கல்விசார் விருது பேராசி. அஜித் த அல்விஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு 2019 செப்ரெம்பர் 26-ஆம் திகதி கொழும்பு, தாமரை தடாக அரங்கில் நடைபெற்றது.

- மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் செவ்வியல் (கிளசிகல்) இசை சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் டீம் லெக்டோ (Team Legato) அணியானது, Andante 2019 பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான இசைப் போட்டியில், மிகப் பிரபலமான விருதுடன் சிறந்த செயல்திறன் விருதையும் வென்றெடுத்தது. இப் போட்டியை, இலங்கை தொழில்நுட்ப வளாகம் (Sri Lanka Technology Campus) ஒழுங்கு செய்திருந்ததுடன், மாபெரும் இறுதிப் போட்டி கொழும்பு, ரோயல் கல்லூரியின் நவரங்கஹல மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

- கட்டட பொருளியல் திணைக்களத்தின் விரிவுரையாளர் Ms. தருஷா ரனதேவ மற்றும் அதே திணைக்களத்தின் தலைவர் பேராசி. யசங்கிகா சந்தநாயக்க ஆகியோரின், "இலங்கையில் சிறு மற்றும் நடுத்தர ஒப்பந்தக்காரர்களது குறைந்த இயலுமையூட்டும் மனித திறனை கட்டியெழுப்புதல்" எனும் தலைப்பிலான பத்திரத்திற்கு, 8-வது உலக நிர்மாணித்தல் சிப்போசியம் 2019–இல் BEPAM சிறந்த பத்திர விருது கிடைத்தது.

- கட்டட பொருளியல் திணைக்களத்தின் ஆராய்ச்சி உதவியாளர் Ms. பஸ்னா பஸ்லி மற்றும் அதே திணைக்களத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி (Ms.) சஷி குணதிலக்க ஆகியோரின், "தற்போதுள்ள கட்டடங்களின் சக்தி செயல்திறனை அதிகரிப்பதற்காக சக்தி மறுபயன்பாடுகள்: ஒரு மீளாய்வு" எனும் தலைப்பிலான பத்திரத்திற்கு, 8-வது உலக நிர்மாணித்தல் சிப்போசியம் 2019–இல் BEPAM மிகவும் பாராட்டப்பட்ட பத்திர விருது கிடைத்தது.

- கட்டட பொருளியல் திணைக்களத்தில் இணைப்புச் செய்யப்பட்டுள்ள விரிவுரையாளர், Ms. கவீஷா தேவகொட, 8-வது உலக நிர்மாணித்தல் சிப்போசியம் 2019–இல் "போட்டித்தன்மை சார் டென்டர் வழங்கலில் ஈடுபட்டுள்ள நிர்மாணிப்பு அமைப்புக்களுக்கான கருத்தியல் அறிவுப் பெறுமதி சங்கிலி மாதிரி" எனும் தலைப்பிலான பத்திரத்திற்கு CIOB சிறந்த சமர்ப்பித்தவருக்கான விருது கிடைத்தது.

## 1.3 பிரதான திட்டம் மற்றும் செயல்நுணுக்க முகாமைத் திட்டம்

மொறட்டுவைப் பல்கலைகழகத்தின் 2020, 2030ஆம் ஆண்டுக்கான பிரதான திட்டம் கட்டடக்கலை பீடத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர் குழுவொன்றினால் தயாரிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் தற்போதைய சகல பௌதிக அபிவிருத்தி செயற்பாடுகளும் இந்த பிரதான திட்டத்திற்கும் செயல்நுணுக்க முகாமைத் திட்டத்திற்கும் (SMP) 2014-2018 ஏற்ப மேற்கொள்ளப்படுகிறது. பல்கலைக்கழகம் சார் துரித விரிவாக்கத்துடன், 2020 மற்றும் 2030 தொடர்பான திருத்தப்பட்ட பிரதான திட்டங்கள் பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணத்துவக் குழுவொன்றின் மூலம் தேசிய அபிவிருத்தித் திட்டம் மற்றும் உயர் கல்வி அமைச்சினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் கூட்டுத்திட்டம் ஆகியவற்றுடன் இணைந்ததாக மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் சார்பான துரித அபிவிருத்தி திட்டங்கள் உள்ளடக்கப்பட்டு மேம்படுத்தப்படுகின்றது.

முன்னைய 2010–2015 கூட்டுத் திட்டம் திருத்தியமைக்கப்படுவதன் மூலம், செயல்நுணுக்க முகாமைத் திட்டம் (SMP) 2017-2018 அபிவிருத்தி செய்யப்பட்டதுடன், 2013 ஆண்டின் பிற்பகுதியில் அதன் பங்காளிகள் எல்லோருடனும் பரந்தளவில் கலந்துரையாடியதன் பின்னர், 2014 மார்ச் மாதத்தில் பல்கலைக்கழக நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. 2014-2018 செயல்நுணுக்க முகாமைத்துவத் திட்ட (SMP) மீளாய்வின் போது, மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நிதித் தேவைப்பாடுகள் பெருமளவு அவசியமற்ற அதன் இலக்குகள் மற்றும் நோக்கங்கள் பெரும்பாலானவற்றை தற்போது அடைந்துள்ளது என்பதையும் எஞ்சிய இலக்குகளையும் அடைந்துகொள்ளும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது என்பதையும் வெளிக்காட்டியது.

2017 – 2021 ஆண்டுப் பகுதிக்கான செயல்நுணுக்க முகாமைத்துவத் திட்டத்தை (SMP) இற்றைப்படுத்துவதற்காக இரண்டு நாள் சிந்தனைக்கிளறல் செயலமர்வொன்று 2017 சனவரி மாதம் பல்கலைக்கழக உப வேந்தர், சபை உறுப்பினர்கள், மூதவை அங்கத்தவர்கள் மற்றும் தொிவுசெய்யப்பட்ட கல்விசார் மற்றும் நிருவாக பணியாளர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் நடாத்தப்பட்ட அதேவேளை, மற்றுமொரு ஓர் நாள் செயலமர்வொன்று பெப்பிரவரி மாதம் பல்கலைக்கழக உப வேந்தர், பிரதி உப வேந்தர், பதிவாளர், பீடங்களின் பீடாதிபதிகள் மற்றும் பதில் கடமையாற்றும் நூலகர் ஆகியோர்களுடன் கல்விசார் துணை மற்றும் கல்விசாராத பணியாளர்கள் வகையைச் சேர்ந்த தொிவுசெய்யப்பட்ட பணியாளர்களின் பங்குபற்றலுடன் நடாத்தப்பட்டது.

## 1.4 மூலதன முதலீடுகள்

மொறட்டுவை பல்கலைக்கழகம் அதன் பௌதிக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக மிக விசேட நிதிகளைப் பெற்றுக்கொண்டது. மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின் விரிவாக்கத்திற்கு இணைவாக கடந்த ஐந்தாண்டு காலப்பகுதியினுள் பூர்த்திசெய்யப்பட்ட நிர்மாணக் கருத்திட்டங்கள் பற்றிய விபரங்களை அட்டவணை-2 காட்டுகிறது.

2019 ஆண்டின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) ஊடாக திறைசேரியிலிருந்து மூலதன முதலீடாக நிர்மானிப்புக்களுக்காக ரூ. 128.6 மில்லியன் கிடைத்ததுடன், மூலதனச் சொத்துக்களை புனரமைப்புச் செய்வதற்காக ரூ. 73.42 மில்லியனும், ஆராய்ச்சி வலுவூட்டுதல் சார்பாக ரூ. 77.48 மில்லியனும் மற்றும் நிலையான சொத்துக்களை கையேற்பதற்காக ரூ. 143.96 மில்லியனும் பெற்றுக்கொள்ளப்பட்டன.

அட்டவணை 2 – கடந்த 5 வருடத்தின் மூலதன உட்கட்டமைப்பு அபிவிருத்தி

| கருத்திட்டம் | பெறுமதி (ரூ. மில்.) | நிலை |
|---|---|---|
| கட்டடக்கலை பீடம் – கட்டம் II (பட்டணமும் நாடும் திட்டமிடல்) | 140 | 2015-ல் பூ.செ.பட்டது |
| மாணவ நிலையம் மற்றும் சிற்றுண்டிச்சாலை விரிவாக்கல் | 57 | 2015-ல் பூ.செ.பட்டது |
| நெடுஞ்சாலை சார் பரிசோதனை ஆய்வுகூடம் - கட்டம் I | 6.7 | 2015-ல் பூ.செ.பட்டது |
| விடுதி கருத்திட்டத்தின் கீழ் விடுதிக் கட்டடம் - I (Pre-fabricated) (உயர் கல்வி அமைச்சின் நேரடி நிதியளிப்பு) | 196.4 | 2016-ல் பூ.செ.பட்டது |
| விடுதி கருத்திட்டத்தின் கீழ் விடுதிக் கட்டடம் - II (Pre-fabricated) (உயர் கல்வி அமைச்சின் நேரடி நிதியளிப்பு) | 196.4 | 2016-ல் பூ.செ.பட்டது |
| தகவல் தொழில்நுட்ப பீடக் கட்டடம் - கட்டம் II | 205 | 2016-ல் பூ.செ.பட்டது |
| கட்டடக்கலை பீடம் – கட்டம் IV (கட்டடக்கலை) | 150 | 2016-ல் பூ.செ.பட்டது |
| கட்டடக்கலை பீடம் – கட்டம் III (ஒருங்கிணைந்த வடிவமைப்பு) | 110 | 2017-ல் பூ.செ.பட்டது |
| நிருவாகக் கட்டடத்தின் விரிவாக்கம் | 282 | 2017-ல் பூ.செ.பட்டது |
| கட்டடக்கலை பீட விரிவுரை அறை கட்டடம் (உருக்கு) | 164 | 2017-ல் பூ.செ.பட்டது |
| பொறியியல் பீட பலநோக்குக் கட்டடம் (உருக்கு) | 184 | 2017-ல் பூ.செ.பட்டது |
| நெடுஞ்சாலை சார் பரிசோதனை ஆய்வுகூடம் - கட்டம் II | 23.7 | 2018-ல் பூ.செ.பட்டது |
| புடவையும் ஆடை தொழில்நுட்பமும் திணைக்கள கட்டடம் | 307 | 2018-ல் பூ.செ.பட்டது |
| புடைவை மற்றும் ஆடை தொழில்நுட்ப திணைக்கள புடைவை சார் நீடிப்பு கட்டட நில மற்றும் இடைநிலை மாடிகளின் எஞ்சிய வேலை | 28 | 2019-ல் பூ.செ.பட்டது |
| பெண்கள் விடுதி (400 மாணவிகளுக்கானது) | 194 | நடைபெறுகின்றது |
| விடுதி கட்டடம் 3 (Pre-fabricated) விடுதிக் கருத்திட்டத்தின் கீழ் (உயர் கல்வி அமைச்சின் நேரடி நிதியளிப்பு) | 196.4 | நடைபெறுகின்றது |
| கட்டட பொருளியல் திணைக்கள கட்டடம் | 75 | நடைபெறுகின்றது |
| பொருட்கள் விஞ். மற்றும் பொறியியல் திணைக்கள கட்டடம் | 439 | நடைபெறுகின்றது |
| எந்திரவியல் பொறியியல் திணைக்களத்திற்கான உத்தேச கட்டடம் | 247 | நடைபெறுகின்றது |

## 1.5 புதுமையாக்க, தொழிலுரிமைத்துவ பட்டதாரிகளை உருவாக்குதல்

மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது, மூன்று வருடங்களுக்காக தேசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் பல்கலைக்கழக முறைமையில் முதன்முதலாக ஏற்படுத்திய கைத்தொழில் ஆதரவு தலைமைத்துவத்துடன் கூடிய "தொழிலுருமைத்துவம் பற்றிய NDB வங்கியின் அறக்கொடையுடனான பேராசிரியர்/உறுப்பினர்" எனும் கௌரவ பதவியை உருவாக்கியுள்ளது. இதன் கீழ் முதலாவது அறக்கொடையுடனான பேராசிரியர் 2010 ஆண்டு அக்டோபரில் நியமிக்கப்பட்டதுடன், இதன் கீழ் எடுக்கப்பட்ட தொழில்முனைவோர் சார் முன்னெடுப்புக்களால் பிரதானமாக இளம் தொழில்முனைவோர் ஸ்ரீலங்கா (YESL) நிகழ்ச்சித்திட்டத்துடன், பல்கலைக்கழக தொழிலுரிமைத்துவ கலாச்சாரம் குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தப்பட்டதுடன், பொறியியல் பட்ட பாடவிதானத்துக்கு தொழிலுரிமைத்துவம் தொடர்பாக சிறு விசேடத்துவமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

பல்கலைக்கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட மற்றுமொரு முக்கியமான செயற்றிட்டம், மூன்றாண்டு காலப்பகுதியினுள் ரூ. 16 மில்லியனுக்கும் கூடுதலான தொகையுடன் கைத்தொழிற்துறை நிதிசார் சேவைகள் (IFS) மூலமான முதலீட்டுடன் "புத்தாக்கம் மற்றும் தொழிலுரிமைத்துவம்" பற்றிய அறக்கொடையுடனான பதவியொன்று உருவாக்கப்பட்டது. இந் நோக்கத்திற்காக 2014 நவம்பரில் ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன், புத்துருவாக்கம் மற்றும் தொழிலுரிமைத்துவம் தொடர்பான சிரேஷ்ட தோழமை உறுப்பினரொருவரின் நியமனத்துடன், 2015 செப்ரெம்பரில் புதிய தொழிலுரிமைத்துவம் பூர்வாங்க செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன.

புதிய கண்டுபிடிப்புக்கள், புத்தாக்கங்கள் மற்றும் தொழிலுரிமைத்துவம் சார்பான வசதிகளை ஏற்படுத்துவதற்கான பொறிமுறையை உருவாக்குதல் அத்துடன், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரிடையே தொழிலுரிமைத்துவம் பற்றிய கலாச்சாரத்தை மேம்படுத்துதல் சம்பந்தமாக பல்கலைக்கழக உபாயங்களின் கீழ் 2017 ஆண்டினுள் சில குறிப்பிடத்தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பூர்வாங்க பொது வேலை வெற்று இடத்தை அடிப்படையாகக் கொண்ட முன்னெடுப்பு இலங்கையின் முதலாவது அரசாங்க பல்கலைக்கழகத்தில் "The Enterprise" ஆரம்பித்து வைக்கப்பட்டது. The Enterprise ஏற்கனவே முன்மொழியப்பட்ட தனியார் துறை பங்காண்மையுடன் மேலும் வசதிகளை கூட்டிக்கொண்டு தற்போது 25 இற்கும் மேற்பட்ட முன்னெடுப்புக்களுக்கு இடவசதிகளை உண்டாக்க பல்கலைக்கழகத்திற்கு முடிந்துள்ளது. புத்தாக்கங்கள், தொழிலுரிமைத்துவ மற்றும் தொழில்நுட்ப அனுமதிப்பத்திரங்களை வழங்தல் சார் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் நிலையமாக The Enterprise திகழும். பல்கலைக்கழக முன்னெடுப்புக்களுக்கான திறந்த அலுவலக சூழலொன்றை வழங்கும் அதேவேளை, பல்கலைக்கழகத்தின் உள்ளே மேலும் புத்தாக்கங்களுக்கு ஒத்துழைப்பு மற்றும் ஏற்பாட்டு வசதியை வளர்த்தெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பொது வேலை வெற்று இடத்தில் ஆரம்பத்தில் மாணவர்களது 15 முன்னெடுப்புக்கள் மற்றும் 3 கைத்தொழில் முன்னெடுப்புக்கள் (பட்டதாரிகளால் முன்னெடுக்கப்படுபவை) ஆகியவற்றுக்கு இடவசதி உண்டாக்கும் திறனைக் கொண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட சகல மாணவர் முன்னெடுப்பினதும் உள் கூட்ட அறை மற்றும் சரக்கு அறை ஆகியவற்றுக்கான பிரவேசத்துடன் இலவச Wi-Fi உடனும் காப்பகத்தில் 2 முதல் 3 இடங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். மேலும், கைத்தொழில் முன்னெடுப்புக்கள் 3 இற்கு கழிவு கொடுக்கப்பட்ட வீதத்தில் வழங்கப்படுகின்ற 5 முதல் 6 வரையிலான இடங்களை பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படும். பொது வேலை வெற்று இடத்திற்கு தொிவுசெய்வதற்கு விசேடமாக வரையப்பட்ட அளவுகோல்கள் மிகச் சிறந்த முன்னெடுப்புக்களை தேர்ந்தெடுப்பதை உறுதிப்படுத்துகிறது. தற்போது, மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது முன்னெடுப்புக்களின் வாழ்க்கைச் சுழற்சியின் பல்வேறு நிலைகளில் 80 இற்கும் மேற்பட்ட முன்னெடுப்புக்களை கொண்டு வந்துள்ளது. 2017 பெப்பிரவரியில் தொடங்கப்பட்ட Mora Ventures மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெடுப்பு காப்பகமாகும். இலங்கையின் முதலாவது unicorn (ஐ.அமெ. டொ. 1 பில்லியனுக்கு மேல் மதிப்புள்ள முன்னெடுப்பு) மூலம் நிதியளிப்பு செய்யப்பட்ட Mora Ventures 2027 ஆண்டு வரை காலாண்டு ரீதியில் நடக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மருத்துவ டுரோன் வானூர்தியொன்று இலங்கையில் முதன் முதலாகக இரத்த மாதிரிகளை வான்வழியாக கொண்டுசெல்லத் தயாராகவுள்ளது. இந்த டுரோன் வானூர்தி, அதன் முன்னோடிகளான MoraHex மற்றும் Hornet ஆகிய இரண்டினதும் மேலும்

மேம்படுத்தப்பட்டதாகும். MoraHex முழுமையாக தன்னியங்கி பொதியை கொண்டு செல்வதற்காக 2019 பெப்பிரவரியில் சோதனை செய்யப்பட்டதுடன், Hornet முழுமையாக தன்னியங்கி செங்குத்து மேல் எழும்புதல் மற்றும் தரையிறங்குதல் (VToL) திறன் தொடர்பாக சோதனை செய்யப்பட்டது. இந்த இரண்டையும் ஒன்று சேர்ப்பதன் மூலம் MoraMedic டுரோன் வானூர்தி, இரத்த மாதிரிகள் நிரப்பப்பட்ட 8 பரிசோதனை குழாய்களை ஒரு வைத்தியசாலையிலிருந்து 11 கி.மீ. தூரத்தில் உள்ள ஆய்வு மையத்திற்கு கொண்டுசெல்லும் திறனுடன் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது, ஆய்வு மையத்தில் நியமிக்கப்பட்ட இடத்தில் தன்னியக்க முறையில் தரையிறங்கி, இரத்த மாதிரிகள் அடங்கிய பெட்டியை விடுவிப்பதுடன், உடனடியாக வைத்தியசாலைக்கு திரும்பி பறந்து செல்கிறது. இந்த டுரோன் வானூர்தி மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் ஆளில்லா வான்வழி வாகன ஆராய்ச்சி ஆய்வகத்தின் மூலம் பேராசி. ரொஹான் முனசிங்ஹ அவர்களது மேற்பார்வையின் கீழ் உருவாக்கப்பட்டது.

பாரம்பரிய புள்ளிவழங்கலின் போது ஏற்படும் சிக்கல்களை தவிர்த்துக் கொள்வதற்கான கோரிக்கையின் போில், இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் பொறியியல் திணைக்களத்தின் ஆய்வுக் குழுவொன்று விளையாட்டுத்துறை அபிவிருத்தி அமைச்சுக்கான இலத்திரனியல் புள்ளி வழங்கல் பலகையொன்றை உருவாக்கியது. இந்த இலத்திரனியல் புள்ளிவழங்கல் பலகை பிரதானமாக கபடி விளையாட்டுக்காக வடிவமைக்கப்பட்ட போதிலும், ஏனைய இதுபோன்ற விளையாட்டுக்களுக்கும் எளிதாக மாற்றியமைக்க முடியும். பெறுபேறுகளை புள்ளிவழங்கும் நபருக்கு காண்பிக்கும் அதேவேளை, இப் புள்ளிவழங்கல் பலகை பார்வையாளர்களுக்கும் விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்கும் இரண்டாவது பொிய திரையில் ஒரே மாதிரியாக காட்சியளிக்கும். புள்ளிவழங்கலுக்கு மேலதிகமாக, அலாரம், இறங்குமுகக் கணிப்பு, நேரம் முடிவு போன்றவற்றை உருவாக்கக்கூடிய ஓர் சைரன் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இந்த இலத்திரனியல் புள்ளிவழங்கல் பலகை மெய்யான விளையாட்டுக்களில் பலமுறை பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், அது சரியான செயல்பாடு மற்றும் செயல்திறன் தொடர்பாக சோதிக்கப்பட்டுள்ளது. இலத்திரனியல் புள்ளிவழங்கல் பலகையை இயக்குதல் மற்றும் பராமரித்தல் சார்பாக போட்டி நடுவர்கள் குழுவொன்று பயிற்றுவிக்கப்பட்டது.

கட்டடக்கலை பீட, ஒன்றிணைக்கப்பட்ட வடிவமைப்புத் திணைக்களத்தின் III நிலை ஊடக மற்றும் தொடர்பாடல் வடிவமைப்பு மாணவர்கள், பொதியிடல் வடிவமைப்பு சார் வடிவமைப்பு கருத்திட்டமொன்றை உருவாக்கியுள்ளது. இக் கருத்திட்டமானது, இலங்கையின் பொதியிடல் வடிவமைப்பு கைத்தொழில் மற்றும் புள்ளிவழங்கல் பலகை உற்பத்தியாளர்களை மேம்படுத்தச் செய்வதற்கானதொரு முயற்சியாகும். உள்நாட்டு பொதியிடல் கைத்தொழிலின் தற்போதய நடைமுறைகளை புரிந்துகொள்ளவும், மாறுபட்ட பொதியிடல் தீர்வுகளை முன்மொழியவும் மாணவர்களுக்கு இது உதவியது. மாணவர்களது புத்தாக்கமான கருத்துக்கள் மற்றும் கருத்திட்ட உருவாக்கங்கள் பின்வரும் கம்பனிகளின் பிரதிநிதிகளால் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்பட்டது. JF & I பெக்கேஜின், பிரின்ட் கெயா (பிரை.) லிமி., Anim8 (பிரை.) லிமி., ஜவன கிரபிஃக்ஸ் (பிரை.) லிமி. (பெந்தர் தயாரிப்புக்கள்). 13 பலகை விளையாட்டு வடிவமைப்புக்கள் மற்றும் எண்ணக்கருக்கல் ஆகியவற்றுடன் இக் கருத்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டது.

மேலும், மொறட்டுவை பல்கலைக்கழகம் வணிக ரீதியான பயன்பாடுகளுக்காக துல்லியமான அளவையீட்டுக்காக குவாட்ரோட்டர் டுரோன் வானூர்தியை “Mora-X” எனும் பெயரில் உருவாக்கியுள்ளது. GPS சமிக்ஞைகளில் உள்ள தற்காலிக முரண்பாடுகளை தரையிலுள்ள REACH RS+ குறிப்பீட்டு நிலையத்துடன் (PPK - பிந்திய செயலாக்கப்பட்ட அசைவு விபரியல்)

ஒப்பிட்டு, சரிசெய்து வான்வழி புகைப்படங்கள் துல்லியமாக புவி இருப்பிடத்துடன் பதிவு செய்வதற்கு டுரோன் வானூர்திக்கு REACH M+ நிகழ் நேர அசைவு விபரியல் (RTK) GPS உணரிகள் விமான கட்டுப்பாட்டாளரிடம் இடைத்தளப்படுத்தப்பட்டுள்ளது. 20MPix புகைப்படக்கருவியின் ஷட்டர் சமிக்ஞை GPS குறியிடுவதற்காக பயன்படுத்தப்படுகிறது. இதனால், தூண்டுதல் கட்டளைக்கும் புகைப்படக்கருவி ஷட்டருக்கும் இடையிலான நேர வேறுபாட்டால் (சுமார் 100ms) ஏற்படும் நிலைசார் வழுவை குறைக்கிறது. புகைப்படக்கருவி 7 பாகையால் கீழ் சரிவாவதுடன், டுரோன் வானூர்தியின் ஒரே வீச்சுக் கோண அளவீட்டு பணிகளில் ஈடுபடுவதுடன், வான்வழி புகைப்படங்கள் அனைத்தும் சரியாக பதிவு செய்யப்-படுகின்றன. இந்த அனைத்து அம்சங்களுடனும் வான்வழி அளவையியலில் 3-4 செ.மீ. புவிசார் துல்லியமான நிலையை Mora-X அடைந்துகொள்ள முடிந்துள்ளது. டுரோன் வானூர்தியின் வணிகமயமாக்கல் "தொழிலுரிமைத்துவ – பல்கலைக்கழக வியாபார இணைப்புக் குழு" ஊடாக மேற்கொள்ளப்படும். Mora-X, பேராசி. ரொஹான் முனசிங்ஹ அவர்களால் வடிவமைக்கப்-பட்டதுடன், ஆளில்லா வான்வழி வாகன ஆராய்ச்சி குழுவின் மூலம் உருவாக்கப்பட்டது.

மொறட்டுவைப் பல்கலைக்கழகம், பெரும்பாலும் இலங்கையில் முதன் முறையாக நிகழ் நேர போக்குவரத்து உணர்தல் சார்பாக செயற்கை மதிநுட்பத்தை (AI) வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது. பேராசி. ரொஹான் முனசிங்ஹ அவர்களது தலைமையிலான ஆராய்ச்சிக் குழுவொன்றினால் வீதி சார் படங்களை எடுப்பதற்கு, அந்தப் படங்களை செயலாக்குவதற்கு ஆழ் நியூரல் வலையமைப்பு (Deep Neural Network) ரோபோடிக்ஸ் ஒன்றை இயக்குவதற்கு மிகச் சிறிய அளவிலான புகைப்படக்கருவியைக் கொண்ட உணரி அலகொன்று உருவாக்கப்பட்டுள்ளது. அக்டோபர் 14 முதல் 18 வரை இந்தியா, புதுதில்லியில் நடைபெற்ற ரோபோ மற்றும் மனித ஊடாடும் தொடர்பாடல் (RO-MAN) பற்றிய 28-வது IEEE சர்வதேச மாநாட்டில் "சேவை ரோபோக்களின் பண்புகளுக்கு ஏற்றவாறு மனிதர்களது புரொக்ஸெமிக்ஸ் விருப்பத்தேர்வுகள் பற்றிய ஆராய்ச்சி சார் கற்கை" எனும் தலைப்பில் மொறட்டுவைப் பல்கலைக்கழகம் ஆய்வுப் பத்திரமொன்றை சமர்ப்பித்தது. திருமதி சமரகோன் பீ.எச்டீ. (DNN), நிகழ் நேர போக்குவரத்து மட்டத்தை அனுமானிக்க, பிலியந்தலை வெளிப்புற சுற்றுவட்டப் பாதையில் மஹரகம சந்தியில் எடுக்கப்பட்ட போக்குவரத்து படங்களின் தொகுப்பை பயன்படுத்தி அந்தளவு ஆழமற்ற DNN சார் பயிற்சியளிக்கப்பட்டது. இந்தப் படங்கள் மிகக் குறைந்தது (தீவிரம் 1) முதல் மிக உயர்ந்த (தீவிரம் 5) போக்குவரத்து வீச்சு நொிசல் மட்டம் வரை இருக்கும். பயிற்சியின் பின்னர் துல்லியமான சோதனைக்காக உணரி அலகு ஒரே இடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சோதனையின் போது, உணரி 1 முதல் 5 வரையிலான எண்ணிக்கையை பயன்படுத்தி (மிகக் குறைந்த போக்குவரத்து நொிசல் முதல் மிகக் கூயடிய போக்குவரத்து நொிசல் வரை) ஒவ்வொரு படத்தின் கீழும் வலது மூலையில் காட்டப்பட்டுள்ளவாறு உணரி அதன் காட்சியில் நிகழ் நேர போக்குவரத்து நொிசல் தீவிரத் தன்மையை காண்பித்தது. சிங்கப்பூரின் SUTD இல் செயலாக்க தாமதம் மற்றும் புகைப்படக்கருவி மாணவர் போதுமானளவு இல்லாமை புறக்கணித்து, குழுவின் மூலம் இதுவரை எண்ணக்கரு ஆதாரம் பகுதியை மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. மொறட்டுவைப் பல்லைக்கழக மதிநுட்ப சேவை ரோபோடிக்ஸ் குழுவில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி பணிகளை அடிப்படைகயாகக் கொண்டு இப் பத்திரம் தொகுக்கப்பட்டது. இப் பத்திரத்திற்கு மொறட்டுவைப் பல்கலைக்கழக மின் பொறியியல் திணைக்களத்தைச் சேர்ந்த கலாநிதி ஏ.ஜீ.பி.பீ. ஜயசேக்கர, சிங்கப்பூர் SUTD –இன் கலாநிதி எம்.ஏ.வீ.ஜே. முத்துகல மற்றும் சிங்கப்பூர் SUTD –இன் பேராசிரியர் எம்.ஆர். எழார ஆகியோர் இணை ஆக்ககர்த்தாக்களாக இருந்தனர். உணரி அலகுக்கான கிரயத்தை குறைவாக வைத்திருப்பது ஒரு முக்கிய நோக்கமாக இருந்ததுடன், அதன் மூலம் இந்த தொழில்நுட்பத்தை பாரிய அளவில் பயன்படுத்தும் போது

பொருளாதார ரீதியில் சாத்தியமானதாகவும் அமையும். இருப்பினும், புதிரான பெறுபேறு ஏற்கனவே அடையப்பட்டுள்ளது. அடுத்து, குழுவினால் உணரி அலகுகளை மேலும் அபிவிருத்தி செய்து சம்பந்தப்பட்ட அதிகார தரப்புடன் போக்குவரத்து விளக்கு கட்டுப்பாட்டுக்காக உணரி தொகுப்பினை அதே இடத்தில் (நான்கு வழி சந்தி) ஈடுபடுத்தப்படும். இக் கருத்திட்ட வெற்றியின் காரணமாக நிலையான சமிக்ஞை நேரத்தால் ஏற்படும் வாகனங்கள் அனாவசியமான காத்திருப்பது தவிர்க்கப்படும். இக் கருத்திட்டத்திற்கு உலக வங்கியின் மூலம் AHEAD மானியத்தின் ஊடாக நிதியளிப்பு செய்யப்பட்டதுடன், பல்கலைக்கழகத்தின் ITS (Intelligent Transport Systems - மதிநுட்ப போக்குவரத்து முறைமைகள்) பல் துறை ஆராய்ச்சிக் குழுவின் ஒரு பகுதியாகும். இக் கருத்திட்டத்தின் ஆரம்ப கட்டத்திற்கு Innovation Quotient (பிரை.) லிமி. நிறுவனத்தின் மூலம் நிதியளிப்பு செய்யப்பட்டது.

2019 ஆண்டில், ஆக்கவுரிமை பத்திரம் வழங்குதல் சார்பாக தேசிய புலமைச்சொத்து அலுவலகத்தின் (NIPO) மூலம் செயற்படுத்தப்பட்ட 33 ஆக்கவுரிமை பத்திர விண்ணப்பங்களை பல்கலைக்கழகம் வழங்கியது.

தொழிலுரிமைத்துவம் சார் சூழலொன்றை உருவாக்குவதற்கான பல்கலைக்கழகத்தின் முயற்சி தொடர்பான செயற்பாடுகள் ஊடாக ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள புலமைச் சொத்து பற்றிய ஆலோசனை குழு (IPAC), பல்கலைக்கழக கைத்தொழில்துறை இணைப்புக் குழு (UIIC), கருவாக்கல் சார் திணைக்களங்கள் மற்றும் பீடங்களில் உள்ள கருவாக்கல்சார் நிறுவனங்களை வலுவூட்டிப் பாதுகாக்கும். இவ் அனைத்து அடிப்படை அம்சங்களும் குறிப்பாக எமது பட்டதாரிகள் "வேலை தேடுபவராக அல்லாது வேலை உருவாக்குபவர்" எனும் நிலையை உருவாக்கவும் மற்றும் எமது பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கு வணிகமயப்படுத்தக்கூடிய அவர்களின் புத்தாக்கங்களுக்கு ஆக்கவுரிமை சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கும் இம் முயற்சிகள் பங்களிப்புச் செய்யும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## 1.6 பல்கலைக்கழக - கைத்தொழில்துறை இடைத்தொடர்பு

பயனுறுதிமிக்க பல்கலைக்கழக – கைத்தொழில்துறை பிணைப்பு மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பலம் வாய்ந்த காரணிகளுள் ஒன்றாகும். பொதுமுயற்சிகள் கைத்தொழில் துறையில் உள்ளோர்களுக்கான பகுதி நேர பட்டப்பின்படிப்பு பாடநெறிகள், குறுங்கால பாடநெறிகள், பயிற்சியும் தொடர் தொழில்சார் அபிவிருத்தி (CPD) பாடநெறிகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள், ஆலோசனை மற்றும் பரிசோதனை ஒப்படைகள், கைத்தொழில் நிதியிடப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி (R & D) ஆய்வுகூடங்கள், அறக்கொடையுடனான தலைமைகள், திணைக்கள கைத்தொழில்துறை ஆலோசனை சபைகள், பீட கைத்தொழில் ஆலோசனை சபைகள் மற்றும் கூட்டிணைந்த சமூக பொறுப்பு நடவடிக்கைகள் மூலமாக மொறட்டுவைப் பல்கலைக்கழகம் கைத்தொழில் துறைகளுடனும், சமூகத்துடனும் குறிப்பிடத்தக்க வகையில் பரஸ்பர செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. கைத்தொழிலுடனும் சமூகத்துடனும் காணப்படும் பரஸ்பர இணைப்புக்கள் மூலம் கைத்தொழிற்சாலைகளின் முன்னேற்றம் மற்றும் அதற்கேற்ப நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ளல்

என்பதுடன், அதற்கு மேலாக அதனூடாக பல்கலைக்கழக பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கும், மாணவர்களுக்கும் மற்றும் அதற்கு இணையாக நிறுவகத்திற்கும் பாரிய நன்மைகள் பெருமளவில் கிடைப்பதனால் இந்த பரஸ்பர செயற்பாடுகள் பல்கலைக்கழகத்திற்கு தீவிரமாக ஊக்கமளிக்கின்றது.

கைத்தொழில்துறை மூலம் நிதியளிக்கும் ஆராய்ச்சி மையங்கள் வெற்றிகரமான பல்கலைக்கழக கைத்தொழிற்துறை ஒத்துழைப்பு சார் மற்றுமொரு முக்கியமான பொறிமுறையாகும். சுமார் ஒரு தசாப்தத்துக்கு முன் அமைக்கப்பட்ட தொடர்பாடலுக்கான டயலொக் - UoM ஆய்வுகூடம், தொலைத்தொடர்பாடல் துறையினுள் கைத்தொழில் அடிப்படையிலான ஆய்வு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி தொடர்பான மிகவும் வெற்றி பெற்ற மாதிரியாக அமைந்துள்ளது. இந்த ஆய்வுகூட வெற்றியானது, இலத்திரணியல் சார்ந்த புதிய தொழில்நுட்பங்களுக்கான "Zone 24X7 UoM ஆய்வுகூடம்", இறப்பர் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி மற்றும் செயன்முறை அபிவிருத்திக்கான "SIL-UOM ஆய்வுகூடம்", உயிரியில் மருத்துவ தொழில்நுட்பத்துக்கான "Premium International - UoM", எழுதுபொருள் தொழில்நுட்பத்துக்கான சிலோன் பென்சில் கோப்பரேஷன் ATLAS - UoM மற்றும் பொருட்கள் ஆய்வுக்கான INSEE – UOM, மாணவர்களை கைத்தொழிற்துறையில் அமர்த்துதல் மற்றும் வெளிநாட்டு பயிற்சி உட்பட பயிற்சியளிப்பு, ஆய்வு, வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பத் திறன்கள் என்பவற்றை வலுவூட்டுதல், உற்பத்தி அபிவிருத்தி மற்றும் வருடாந்த நவநாகரீக வடிவமைப்புக் கண்காட்சிக்கு ஆதரவளித்தல் என்பவற்றுக்காக Textured Jersey, "Epic-UOM Innovation Lab" எனும் முழுமையான வசதிகளுடன் நவீன ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க நிலையமொன்று அமைத்தல், மைக்ரோ-கிறிட் (Micro-Grid) முன்னோடி கருத்திட்டமொன்றும் லங்கா மின்சார கம்பனி மற்றும் ஆசியா அபிவிருத்தி வங்கி (ADB) ஆகியவற்றுடன் இணைந்து மின் பொறியியல் திணைக்களத்தில் ஸ்மார்ட் கிறிட் (Smart Grid) ஆராய்ச்சிகூடமொன்றும் மற்றும் இலங்கையில் "QBITS" எனும் பெயரிலான முதலாவது செயற்கை மதிநுட்ப ஆய்வகம் என்பன அமைக்கப்பட்டு, செயற்படுத்தப்படுகின்றது.

பல்கலைக்கழக கைத்தொழில்துறை ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக மேலும் சில முன்னெடுப்புக்கள் 2019 இல் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று, Dialog Axiata PLC, லங்கா மின்சார கம்பனி (LECO) மற்றும் மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திவலு அமைச்சு ஆகியன கூட்டாக "GSMA Mobile for Development Utilities Asia Industry Forum 2019" கூட்டத்தில் இலங்கையில் மின் அளவிடல் முன் செலுத்துதல் கருவியை அறிமுகப்படுத்துவதற்கான புத்தாக்க Internet of Things (IoT) செயலாக்கக்கூடிய ஸ்மார்ட்-கிரீட் தீர்வினை பயன்படுத்துவதாகும். இந்த நிகழ்ச்சி, மின்சக்தி, சக்திவலு மற்றும் கருத்திட்ட அமுலாக்கல் அமைச்சர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. டயலொக்-UoM ஆய்வகத்தினால் ஸ்மார்ட் மீட்டர் தொகுதி (மொடியூல்) உருவாக்கப்பட்டதுடன், அது LECO-வின் இலத்திரனியல் மின்வலு மீட்டருடன் ஒன்றிணைக்கப்பட்டது. இதன் மூலம் மீட்டருக்கு முன் செலுத்தும் பணப்பையை பேணுவதற்கு முடியுமாவதுடன், நுகர்வோர்களுக்கு தங்களது மின்சார மீட்டரை அவர்களின் வசதிக்கேற்ப மீள் நிரப்பவும் முடியும். இது மாதாந்த தொலைபேசி சிட்டையொன்றை செலுத்துவதை விடவும் முன் நிரப்பும் செல்லிடத் தொலைபேசியை மீள் நிரப்புகிறது போல சாதாரண ஸ்மார்ட்-கிரீட் தீர்வுக்கு IoT-இன் ஆதரவுடன் டயலொக் மற்றும் LECO இணைந்து உருவாக்கிய பகுப்பாய்வு தளமொன்றாகும்.

மற்றுமொரு முன்னெடுப்பாக, மொறட்டுவைப் பல்கலைக்கழக, ஒன்றிணைக்கப்பட்ட வடிவமைப்பு திணைக்களமானது, விஞ்ஞான, தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் (MSTR) கீழுள்ள விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கம் (COSTI) பற்றிய ஒருங்கிணைப்புக் செயலகத்தின் ஒத்துழைப்புடன் மொறட்டுமுல்லை மரப்பலகையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்துறை சார் வளர்ச்சிக்காக மரப்பலகை வடிவமைப்பு புத்தாக்க நிலையமொன்றை (TDIC) உருவாக்குதல் ஆகும். இந்த நிலையத்தை சிறப்பாக உருவாக்குதல், இலங்கையில் மரப்பலகை மற்றும் மரப்பலகையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழிலை உயர் மட்டத்தில் உலகளாவிய ஏற்றுமதிச் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட வைப்பதுடன், இது எதிர்காலத்தில் மரப்பலகை கைத்தொழில்துறைசார்பாக ஆதரவு வழங்கக்கூடிய முழுமையான நிலையமொன்றாக செயற்படும்.

SLIoT வடிவமைப்பு புத்தாக்க ஆய்வகத்தின் திறப்புவிழா வைபவம் 2019 அக்டோபர் 29-ஆம் திகதி மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இந்த ஆய்வுகூடமானது, SLT நிறுவன உயர்மட்ட முகாமைத்துவம், UoM பீடங்களின் பீடாதிபதிகள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன், ஸ்ரீலங்கா டெலிகொம் PLC நிறுவனத்தின் குழுமத் தலைவர் திரு. பீ.ஜீ. குமாரசிங்ஹ சிறிசேன மற்றும் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரி. கபில பெரேரா ஆகியோரால் திறந்துவைக்கப்பட்டது. மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் கணினி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் திணைக்களம் மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் ஆகியவற்றுக்கிடையிலான கூட்டு முயற்சியான இந்த ஆய்வகம், மாதிரியமைப்பு மற்றும் துறைசார் ஈடுபடுத்தக்கூடிய மட்டங்கள் இரண்டிலும் Internet of Things (IoT) அடிப்படையிலான தீர்வை விருத்திசெய்வதற்கான மாணவர்களது வேலைக்கு உதவுகிறது. இது, IoT தயாரிப்பை நிர்மாணிப்பதற்காக அதிநவீன சோதனை மற்றும் அளவீட்டு உபகரணங்களை கொண்டுள்ளதுடன், சாதாரமான கற்கைச் சூழலைப் போலில்லாமல், மாணவர் குழு வேலை, சிந்தனைக்கிளறல் மற்றும் மென்பொருள் வடிவமைப்பு மற்றும் நிர்மாணிப்பு ஆகியவற்றுக்காக வடிவமைக்கப்பட்ட இடத்தையும் கொண்டுள்ளது. ஆரம்ப வைபவத்தின் போது ஸ்மார்ட் சுகாதார பராமரிப்பு, ஸ்மார்ட் சில்லறை விற்பனை, மதிநுட்ப தயாரிப்பு பொறி கண்காணிப்பு மற்றும் தன்னியங்கி உள்ளக வழிச்செலுத்தல் தொடர்பாக தற்போது செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் செய்துகாட்டப்பட்டன.

வியாபார பீடம், BPM பட்டதாரி மாணவர்களுக்கு வியாபார செயலாக்கப் பகுப்பாய்வு மற்றும் அவர்களது வளவிடங்களை மேம்படுத்துதல் எனும் பிரிவுகளில் இலாபகரமான இணைப்புக்களை வழங்குவதங்காக கொழும்பின் மையத்தில் அமைந்துள்ள ஆசியாவின் மிகப் பொிய புதுமையான பரிசு மற்றும் நினைவுப் பொருள் விற்பனை கடைத்தொகுதிகளில் ஒன்றான LAKARCADE (பிரை.) லிமி. நிறுவனத்துடன் கூட்டை ஏற்படுத்திக் கொண்டது. இந்த உடன்பாட்டை அடைவதற்கான பூர்வாங்க கூட்டம் LAKARCADE-இன் தலைமை அலுவலகத்தினது உயர் முகாமைத்துவம், UoM-இன் வியாபார பீட பீடாதிபதி மற்றும் முகாமைத்துவ தொழில்நுட்ப திணைக்களத்தின் பல கல்வியாளர்கள் ஆகியோருடன் 2019 திசம்பர் 30 ஆம் திகதி சிறப்பாக நடாத்தப்பட்டது.

சகல பணியாட்டொகுதி உறுப்பினர்களும் பல்கலைக்கழக துறை, கைத்தொழில் பரஸ்பர இணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அதேநேரம், அரசாங்க திரட்டு நிதியிலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக வழங்கப்படும் நிதி ஏற்பாடுகளுக்காக அவர்கள் கல்வித்துறை சார்பாக பொறுப்புக் கூறுவதை உறுதிப்படுத்துவதற்காக அவர்களால் பட்டதாரி கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக தம்மீது ஒப்படைக்கப்பட்ட கல்வி வேலை

பணிகள் மற்றும் கல்விசார் அலுவல்களையும் நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துதல் பல்கலைக்கழக நிருவாக சபையின் கொள்கையாகும். பட்டதாரி மாணவர்களுக்கான உயர் பயிற்சி மற்றும் தராதரங்களை மேம்படுத்துவதற்காக வழங்கப்படும் பாடநெறிகள், அறிவு மற்றும் தொழில்நுட்ப விருத்திசெய்யவும் மாற்றம் செய்யவும் நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், CPD பாடநெறிகள், ஆய்வு மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் ஏனைய கல்விசார் ஒப்படைகள், கைத்தொழிலுக்கான ஆலோசனை மற்றும் ஆய்வு ஒப்படைகள் மற்றும் கூட்டிணைந்த சமூக பொறுப்பு நடவடிக்கைகள் ஆகியன பொது நிதிச் சுற்றுநிருபம் இல. 380 இற்கு இணங்க **செலவு மீட்பு** (சுய நிதியிடல்) அடிப்டையில் செயற்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களாகும். அதற்கேற்ப, மொறட்டுவைப் பல்கலைக்கழக சமூகம், கைத்தொழில் சார்ந்து காணப்படும் அதன் கடற்பாடுகளை அரசாங்கத்திற்கு எவ்வித **செலவுமின்றி** நிறைவேற்றி வருகின்றது.

இச் செயற்பாடுகள் மூலம் மொறட்டுவைப் பல்கலைக்கழகம் தனது **செலவு மீட்பு** (சுய நிதியிடல்) செயற்பாடு மற்றும் தொழிலுரிமைத்துவ நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கான தனது கைத்தொழில் முன்னெடுப்பின் ஊடாக 2019 ஆண்டினுள் ரூ. 623.10 மில்லியன் தொகையை உருவாக்கியுள்ளது. பொது நிதி சுற்றுநிருபம் இல. 380 இன் பிரகாரம் உருவாக்கப்பட்ட வருமானம் இலாபமற்ற அடிப்படையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 1.7 தர உத்தரவாதம்

மொறட்டுவைப் பல்கலைக்கழத்தின் தர உத்தரவாதம் அதன் சேவைகள் மற்றும் உற்பத்திகள் ஆகியவற்றின் தரம் தொடர்பாக மாணவர்கள், பணியாட்டொகுதி உத்தியோகத்தர், ஊழியர்கள் மற்றும் மொத்தச் சமூகம் போன்றவற்றுக்கும் உத்தரவாதப்படுத்துவதற்காக அதன் கற்றலுக்கான உள்ளீடுகள், கல்விப் பெறுபேறுகள், ஆராய்ச்சிக்கான தளம், செயற்றிறன் மதிப்பிடல், நிருவாக கட்டமைப்பை கொண்ட மாணவர் சேவைகள் மற்றும் பாடவிதானங்களுக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளை உள்ளடங்கிய பிரதான நடவடிக்கைகளின் தரம், வெளிப்படைத்தன்மை, திறனாற்றல், நம்பிக்கைமிகு அடைவுகள் எனும் வகையில் செயலுறுதிப்படுத்தியதாக பல்கலைக்கழக முகாமைத்துவத்தின் செயற்பாடு அமையப் பெற்றுள்ளது. பல்கலைக்கழகத்தின் QA கொள்கை மூலம் நிறுவகத்தின் கீழ்வரும் கல்விசார், கல்விசாரா மற்றும் நிருவாகம் சார் சகல பணியாட்தொகுதி உறுப்பினர்கள் அதேபோல் மாணவர்கள் ஆகியோர்களால் ஏற்றுக்கொள்ளத் தக்க QA அடிப்படையிலான கலாச்சாரமொன்றை அபிவிருத்திசெய்து கடைப்பிடிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தர உத்தரவாத உபாயம் (QAS) மூலம் பல்கலைக்கழகத்தின் செயல்நுணுக்க முகாமைத்துவ திட்டத்தில் (SMP) குறிப்பிடப்பட்ட தொலைநோக்கு மற்றும் செயற்பணி ஆகியவற்றுடன் இணைந்ததாக செல்கின்றது. SMPஐ செயற்படுத்தும் போது, பல்கலைக்கழக முகாமைத்துவம் அதன் சேவைகளும் உற்பத்திகளும் அவற்றுக்கு ஏற்படுத்தப்பட்ட வரையறைகள் மற்றும் இலக்குகள் சார் அதிசிறந்த தரத்தை உத்தரவாதம் செய்யத் தேவையான முறைமைகள், செயற்பாடுகள் மற்றும் கண்காணிப்பு பொறிமுறைகள் ஆகியவற்றை ஸ்தாபிக்கின்றது. அதற்கிணங்க, SMP இல் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்கள் தரம் சார் கொள்கைளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், அவை பல்கலைக்கழக உள்ளக தரம் சார் அலகின் (IQAU) தலைமையின் கீழ் நோக்கங்களாக வடிகட்டப்பட்டு, மேலும் அவைகள் ஒவ்வொன்றும் முதன்மைச் செயற்பாடுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இவ் ஒவ்வொரு

செயற்பாடுகளை முன்னேற்றச் செய்வதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்/ பங்காளர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், தர உறுதிப்படுத்தல் மற்றும் ஒப்படைத்தல் சபையின் (QAAC) வழிகாட்டுதல் அம்சங்களுக்கு இணங்க நியமிக்கப்பட்ட காலப்பகுதிகளில் வெளிவாரி மற்றும் உள்ளக மீளாய்வு முறைகள் மூலம் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுகின்றது. பல்கலைக்கழக செனட் சபை மற்றும் நிருவாக கவுன்சில் மூலம் அவர்களது மாதந்த கூட்டங்களில் IQAU செயற்பாடுகள் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் அவர்களால் புதிய நிருவாகக் கட்டடத்தில் 2017 நவம்பர் மாதம் உள்ளக தர உத்தரவாத அலகு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் அதன் முதன்மை ஆர்வமிக்க பங்காளர்கள், ஆளணியினர் மற்றும் மாணவர்கள் ஆகியோர்களுக்கு மிகப் பயனளிக்கத்தக்க அனுபவத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு பல்கலைக்கழகம் செயலாற்றுவதுடன், தர உத்தரவாத உபாயம் (QAS) மூலம் அதன் கருத்துப் பற்றிய வரைவிலக்கணத்தையும் வழங்குகின்றது. அது, சர்வதேச மட்டத்திலான மதிப்புமிக்கதொரு பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொள்ள இயலுமான சிறப்பான கற்பித்தல், கற்றல் என்பன யாதென்பது பற்றி தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. தர உத்தரவாத உபாயம் (QAS) மூலம் பட்டமேற்படிப்பு மற்றும் ஆய்வு உட்பட கற்பித்தல் உள்ளீடுகள் மற்றும் கற்றல் வெளியீடுகள் ஆகியவற்றில் ஏற்படுகின்ற வெளிவாரி மற்றும் உள்வாரி அம்சங்களை நோக்குவதுடன், அதன் மூலம் தர நியமங்களை மேம்படுத்தவும் பேணிச்செல்லவும் பீட மட்டத்தில் புதிய பொறிமுறையையும் அதனூடாக விபரிக்கின்றது. தனியான கல்விசார் திணைக்களங்கள் மற்றும் பிரிவுகள் வரை விரிவடையும் அதன் வலையமைப்புடன் இது தொடர்பாக பீட மட்டத்தில் தர உத்தரவாத குழுவானது (QA Cells) உள்ளக தர நிர்ணய அலகுடன் (IQAU) இணைந்து செயலாற்றுகின்றது.

அதேபோல், பல்வேறு பின்புலத்தில் வரும் ஆளணியினர்களுக்கும், மாணவர்களுக்கும் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்களின் சாதகங்களைப் பெறவும், கல்விசார்ந்த வகையிலும் ஆளுமையிலும் சிறப்படையவும் அதேபோல், உலகலாவிய சவால்களுக்கு ஏற்றவகையில் அவசியமான அறிவுசார் மற்றும் திறன்கள் சார் அபிவிருத்தியின் ஊடாக தொழிலுக்கும் பரந்த உலகின் பணிசார் வெற்றிக்குப் பங்களிக்கவும் மற்றும் பட்டமேற்படிப்பு தகைமை மற்றும் ஆய்வு ஊடாக தொழிலொன்றை தேடிச்செல்ல முடியுமாக இருந்தால், அவர்களுக்கு தேவைப்படுவது யாதென்பது பற்றி தர உத்தரவாத உபாயம் (QAS) தன் கவனத்தைச் செலுத்துகின்றது. கற்றலின் தரம், ஆய்வு, வழிகாட்டல் மற்றும் அதன் மீது நிறுவகம் வைக்கின்ற பெறுமதியும் இதன் பகுதியாவதுடன், மொறட்டுவைப் பல்கலைக்கழகச் செயற்பாடுகள் இது தொடர்பாகவுள்ள துறைசார்ந்த சிறப்படைதலுக்கு இணைந்ததாக உள்ளதென்பதை உறுதிப்படுத்த, திட்டமிடுவதற்கான செயற்பாடு தர உத்தரவாத உபாயத்தில் (QAS) உள்ளடங்குகின்றது.

மேலும், கற்பித்தலின் உள்ளீடுகள், கற்றலின் வெளியீடுகள், செயற்றிறன் மதிப்பீடு, ஆய்வு, புலமைப்பரிசில் மற்றும் தொழில்முயற்சி என்பன ஒன்றுக்கொன்று இணைந்த அம்சங்கள் எனவும் அவைகளின் உள்வாரி தொடர்பினைப் பற்றித் தெளிவான நோக்கினை நிறுவதற்கும்

உதவுகின்றது எனவும் தர உத்தரவாத உபாயம் (QAS) கருதுகின்றது. உலகலாவிய சவால்களை எதிர்கொள்ளும் வகையில் அதிகரித்துவரும் போட்டி மிகுந்த சூழலில், தனி நபர்களினதும், சமூகங்களினதும் தேவை யாதென அறிந்து, அவைகளை வழங்குவதற்காக வளர்ச்சியடையும் அழுத்தங்களுடன், போட்டியாளர்களிடமிருந்து நிறுவகத்தை வேறுபடுத்தி இனங் காணுவதற்காக பிரிவுகளை வகைப்படுத்திக் காட்டும் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் செயற்பணியின் வெவ்வேறு தரங்களை மீண்டும் உறுதிப்படுத்தவும் தர உத்தரவாத உபாயம் (QAS) உதவுகின்றது. குறிப்பாக மதிப்பீட்டுத் தரம் மற்றும் சகல கல்விசார் ஆவணங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஆவணக் கருத்து திருட்டுடன் தொடர்புபட்டதாக மொறட்டுவை பல்கலைக்கழகம் இச் சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட பல கொள்கைகளை அபிவிருத்திசெய்தது. அது, எப்போதும் நீடித்து நிலைத்திருக்க கூடிய மதிப்புடனும் பல்கலைக்கழக மாற்றங்களுடனும் மிகச் சிறப்பாக செயலாற்றுவதற்கு சந்தேகத்திற்கு இடமின்றி வழியமைக்கும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) மூலம் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினது நிறுவனம்சார் மதிப்பாய்வின் (Institutional review - IR) மூன்றாவது சுழற்சி 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. முந்தைய இரண்டு சுழற்சிகள் 2006 மற்றும் 2013-ஆம் ஆண்டுகளில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன. இந்த ஆண்டின் நிறுவனம்சார் மதிப்பாய்வுக்கு "ஏ" தரத்தை (மிக உயர் தரத்தை) பெறும் சிறப்புரிமையை பல்கலைக்கழகம் அடைந்துகொண்டது.

சுய மதிப்பாய்வு அறிக்கை (SER), 2019 மே மாதம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் மீளாள்வு செயல்பாடு ஆரம்பமாகியது. 2019 பெப்பிரவரி மாதத்தில், துணை வேந்தரவர்களது தலைமையின் கீழ் பிரதி துணை வேந்தர் (DVC), பணிப்பாளர்/ தர உத்தரவாதம், பீடங்களின் பீடாதிபதிகள், பதிவாளர், நூலகப் பொறுப்பாளர், சிரேஷ்ட் கல்வியாளர்கள் மற்றும் நிருவாக உத்தியோகத்தர்கள் ஆகியோரை உள்ளடக்கிய (வரையறையற்ற) வழிப்படுதல் (steering) குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், இது இந்த சுய மதிப்பாய்வு அறிக்கையை (SER) சமர்ப்பிப்பதற்காக செயலாற்றியது. பல்கலைக்கழகத்தின் கல்விசார் துணை பணியாளர்கள், கல்விசாராத பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் மூலம் வழிப்படுதல் குழுவுக்கு திறனாக ஆதரவளிக்கப்பட்டது.

SER சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) மூலம் உள்நாட்டு அரசாங்க பல்கலைக்கழகங்கள் ஐந்தின் சிரேஷ்ட பேராசிரியர்கள் ஐந்து பேர் மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தர உத்தரவாத (QA) நிபுணரொருவரான சர்வதேச மீளாய்வாளர் ஒருவர் ஆகியோரைக் கொண்ட IR குழு நியமிக்கப்பட்டது. மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட SER தொடர்பான மேசை மீளாய்வின் பின்பு, 2019 திசம்பர் 16 முதல் 21 ஆம் திகதி வரை அக் குழு பல்கலைக்கழகத்திற்கான அதனது தள சுற்றுப்பயணத்தை மேற்கொண்டது. மீளாய்வுக் குழுவினால் அவர்களது மீளாய்வு அறிக்கை மூலம் பல்கலைக்கழகத்திற்கு "ஏ" தரத்தை பெற்றுக்கொடுத்ததுடன், அவர்களது பாராட்டுக்கள் மற்றும் பரிந்துரைகளுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் (UGC) சமர்ப்பித்தது. பின்பு, பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரவர்களுக்கு UGC மூலம் அனுப்பிவைக்கப்பட்டது.

முழு IR செயற்பாடுகளும் பல்கலைக்கழகத்தின் உள்ளக தர உத்தரவாத அலகின் (IQAU) மூலம் தர உத்தரவாத பணிப்பாளரின் கீழ் கல்விசார் மற்றும் வெளியீடுகள் சார் பிரதி பதிவாளர் (DR)

மற்றும் வெளியக அலுவல்கள், பிரசித்தப்படுத்தல் சார் உதவி பதிவாளர் (AR/) மூலம் ஒழுங்கமைப்பு விநியோக ஆதரவுடன் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டது.

உலகலாவிய அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகமாகும் எமது தொலைநோக்கின் பொருட்டு, மொறட்டுவைப் பல்கலைக்கழகம் உலக தரப்படுத்தலில் மேலே செல்வதற்கு முயற்சி எடுத்து வருவதுடன், 2019 இல் மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது, இலங்கையில் மிகச் சிறந்த நான்காவது நிலையை தக்கவைத்துக்கொண்டு, 2019 திசம்பரில் உலக பல்கலைக்கழகங்கள் சார் வெபோமெற்றிக்ஸ் (Webometrics) தரப்படுத்தலில் உலக ரீதியாக 2543 ஆவது (சிறந்த 20%) நிலையையும் பெற்றுக்கொண்டது. வெபோமெற்றிக்ஸ் மதிப்பீட்டு அளவுகோள்களின் தன்மை காரணமாக மொறட்டுவை பல்கலைக்கழகத்தைப் போன்ற நடுத்தர அளவிலான பல்கலைக்கழகமொன்றுக்கு தனது நிலையை மேம்படுத்துவது கடினமானதாகும்.

2019 ஆம் ஆண்டு ஆசிய பல்கலைக்கழகங்களின் தர நிர்ணய வரிசைப்படுத்தலுக்கு (QS AUR 2019) அமைய ஆசிய பிராந்தியத்திலுள்ள 12,000 பல்கலைக்கழகங்களுக்கிடையில் 499 பல்கலைக்கழகங்களை கவனத்திலெடுத்து 351-400 ஆவது இடத்திற்கு வரிசைப்படுத்தப்பட்டது என்பது மொறட்டுவை பல்கலைக்கழகமானது ஆசியாவில் உள்ள பல்கலைக்கழகங்களில் 2.5% எனும் உயர்ந்த இடத்தில் அடங்குகின்றது.

இது, CILT, IMechE, CText, IChemE, RIBA, RICS, CICES, PAQS போன்ற பல பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு சர்வதேச அங்கீகாரத்தை பேணிச்செல்வதற்கு மேலதிகமானதாகும். பொறியியல் கல்விசார் தகைமைகளுக்கான அங்கீகாரத்தை வழங்கும் நிறுவனமான இலங்கை பொறியியலாளர்களின் நிறுவனத்துடன் (IESL) 2014 யூன் மாதம் வொசிங்டன் உடன்பாட்டின் (Washington Accord) முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டு, தற்போது மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற சகல பொறியியல் பட்ட பாடநெறிகளும் தர ரீதியில் உலகின் சிறந்த பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படுகின்ற அத்தகைய பட்ட பாடநெறிகளுக்கு இணையானதாக கருதப்படுகின்றது.

முக்கியமாக தற்போது பெற்றுக்கொண்டுள்ள அங்கீகாரங்களை புதுப்பித்துக் கொள்வதற்காக 2019 ஆண்டு காலப்பகுதியில் பல அங்கீகாரங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், புதிய அங்கீகாரங்கள் சில பெற்றுக்கொள்ளப்பட்டன. 2019 காலப்பகுதியில் இலங்கை பொறியியலாளர்களின் நிறுவகம் (IESL) பொறியியல் பீடம் வழங்குகின்ற பொறியியல் சார் பி.எஸ்சி. பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் சார்பாக மீள் அங்கீகாரத்திற்கு/ அங்கீகாரத்திற்கு உட்படுத்தியது.

உப வேந்தரின் தலைமையில், பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் சகல தொழிற்சங்க பிரதிநிதிகள் ஆகியோர்களிடையே மாதாந்தம் நடாத்தப்படும் "*பசுவிபரம*" (*Pasuviparama*) கலந்துரையாடல் 2006 மார்ச் மாதத்திலிருந்து நடாத்தப்பட்டு வருவதுடன், பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு பல்கலைக்கழகத்தினதும் பணியாட்தொகுதி-யினரதும் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் வழிவகைகள் மற்றும் முறைகள் அதில் கலந்துரையாடப்படும். மேலும், சம்பந்தப்பட்ட மாதத்தினுள் தீர்க்கப்படவேண்டிய மாணவர் சமூகம் தொடர்பான முக்கிய பிரச்சினைளை கலந்துரையாடுவதற்காக உபவேந்தரின் தலைமை

வகிக்கும் பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் எல்லா மாணவர் சங்கங்களின் குழு உறுப்பினர்கள் ஆகியோர் இடையே நடாத்தப்படும் இணைப்புக் கூட்டமொன்றும் ஒவ்வொரு மாதமும் நடாத்தப்படுகிறது. அத்துடன், பீட மட்டத்தில் நிலவும் மாணவர்களின் பிரச்சினைகளை கலந்தாலோசித்து தீர்ப்பதற்காக பீடாதிபதியின் தலைமையில் ஆளணியினர், மாணவர் தொடர்புக் கூட்டம் மாதாந்தம் பீட மட்டத்தில் சகல பீடங்களிலும் நடாத்தப்படுகின்றது. இக் கூட்டங்கள் யாவும் பல்கலைக்கழகத்தின் வருடாந்த நாட்காட்டி திட்டத்திலுள்ள விடயங்களாகும்.

2019 ஆம் ஆண்டின் போது, முறைமைசார் மேம்படுத்தல்களுக்காக இன்னும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மாணவர் பதிவு, பெறுபேறுகளை தயாரித்தல், பிரதிகளை வழங்கல், மாணவர் நலன்புரி, வழங்கல் செயற்பாடுகள், வாகன முன்பதிவுகள், சொத்து முகாமை, ஆவணக் கட்டுப்பாடு, தாபன விடயங்கள், பணியாளர் அபிவிருத்தி விடயங்கள் போன்ற நிருவாகம் சார்ந்த பணிகளுக்கான முகாமைத்துவ தகவல் முறைமையை அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவம் இதில் உள்ளடங்குகின்றது. 2019 ஆம் ஆண்டின் இறுதியில் சில மொடியூல்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதுடன், ஏனையவை அபிவிருத்திசெய்தல், அமுல்படுத்துதல் மற்றும் சோதனை செய்தல் செயல்முறைகளில் இருந்தன.

## 1.8 ஆராய்ச்சி முயற்சிகள்

மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது சகல கல்விசார் பணியாளர்களுக்கும் ஆய்வு அத்தியாவசியமான செயற்பாடொன்றாக கருதுகின்றது. 2015 ஆண்டினுள் பணிப்பாளர்/ஆய்வு அலுவலகம் மூலம் ஆதரவு தெரிவிக்கப்பட்ட குறிப்பாக ஆய்வு செயற்பாடுகளுக்காக கவனம் செலுத்தி பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடமொன்று உருவாக்க முடிந்தமை பல்கலைக்கழக ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் ஆய்வு கலாச்சாரம் குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகமானது மூன்று ஆய்வு பட்ட கற்கைகளை வழங்குகின்றது. விஞ்ஞான முதுமாணி (ஆராய்ச்சியை பிரதான கூறாகக் கொண்டு), தத்துவவியல் முதுமாணி (MPhil) மற்றும் தத்துவக் கலாநிதி (PhD) ஆகியவற்றை கட்டடக்கலை, பொறியியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப (IT) பீடங்களின் மூலம் வழங்குகின்றது. FGS இந் நிகழ்ச்சித்திட்டத்தின் நிருவாக நடைமுறைகளை ஒருமுகப்படுத்துதல், உயர் தரத்திலான மாணவர்களை ஈர்த்தெடுத்தல், புதிய ஆராய்ச்சி பங்காளர்கள் மற்றும் நிதியிடல் வாய்ப்புக்களை கண்டறிதல் மற்றும் பல்கலைக்கழகத்தினுள் ஆராய்ச்சி திறனை உயர்த்துதல் சார்பாக மூலோபாயங்கள் மூலம் இந் நிகழ்ச்சித்திட்டங்களை அதிகரிக்க முற்படுகின்றது. FGS இம் முயற்சிகளில் ஆராய்ச்சி அலுவலகம் மற்றும் சர்வதேச உறவுகள் அலுவலகம் ஆகியவற்றுடன் நெருக்கமாகச் செயற்படுகின்றது. 2019 ஆம் ஆண்டில் 18 கலாநிதி (PhD) பட்ட மாணவர்கள் உட்பட 127 புதிய ஆராய்ச்சி மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

2019 ஆண்டில் மேலும் ஆய்வை அதிகரிப்பது மற்றும் ஆய்வு விளைவுகளை பரப்புதல் சார்பாக ஏனைய பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் உள்ளடங்குவன: சர்வதேச மாநாடுகளை ஒழுங்குசெய்வதற்கான மானியங்கள் (பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடத்தின் ஊடாக வழங்கப்பட்ட ரூ. 5 மில்லியன்); கீர்த்திமிக்க வெளிநாட்டு கல்வியாளர்களை வரவழைத்து உபசரிப்பதற்கான மானியம் (பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடத்தின் ஊடாக வழங்கப்பட்ட ரூ. 3 மில்லியன்); மாநாடுகளுக்கு பங்குபற்றுவதற்காக உப வேந்தரவர்களின் திட்டம் மற்றும் உருவாக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி திறந்த அணுகுதல் வெளியீடு (சனெட் ஆய்வு குழுவின் ஊடாக); மற்றும் மேம்படுத்தப்பட்ட தரப்புள்ளிகளுடன் மற்றும் தனி வருட செயல்திறன் அடிப்படையில் திருத்தப்பட்ட விருதுகள் திட்டம். இது தவிர, 2019 ஆண்டின்

போது ஆய்வு நிருவாகம் மற்றும் முகாமைத்துவ முறைமை மேம்படுத்துதல், கல்வியாளர்களது ஆய்வு மற்றும் பரப்புதல் திறன் ஆகியவற்றை அதிகரிப்பதற்காக செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் பல நடாத்துதல் உட்பட பல்கலைக்கழக ஆய்வு கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்காக FGS மூலம் பல முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

சர்வதேச ரீதியாக மற்றும் உள்நாட்டு ரீதியாக எனும் இரண்டிலும் வெளிவாரி நிதியிடல் முகவராண்மைகள் மூலம் ஆய்வுக்கான நிதியளிப்பை பாதுகாப்பதற்கு கல்வியாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றர். 2019 ஆண்டில் பல்கலைக்கழகமானது வெளிவாரி நிதியளிப்பு முகவராண்மைகள் மூலம் ரூ. 48.5 மில்லியனை பெற்றுக்கொண்டதுடன், இதற்குப் புறம்பாக, செனட் சபை ஆய்வு குழு (SRC) மூலம் கல்விசார் பணியாளர்களது பல்கலைக்கழக ஆய்வு கருத்திட்டங்களுக்கு நிதியளிப்பு செய்யப்பட்டது. 2019 ஆண்டின் போது SRC மூலம் 58 குறுங்கால மானியங்கள், 26 நீண்டகால மானியங்கள் மற்றும் 1 மூலதன ஊக்கப்படுத்தல் மானியம் உட்பட மொத்தம் ரூ. 77.48 மில்லியன் வழங்கப்பட்டது.

கல்வியாளர்களது 88 ஆய்வு சிறப்பு விருதுகளின் அதிகரிப்பு மூலம் மேலுள்ள முயற்சிகள் மற்றும் செயற்பாடுகள் ஆய்வு செயலாற்றலை குறிப்பிடத்தக்கவகையில் மேம்படுத்தியுள்ளது. அத்துடன், 2013 ஆண்டில் 12 இல் இருந்து 2014 ஆண்டில் 21, 2015 ஆண்டில் 40, 2016 ஆண்டில் 61, 2017 ஆண்டில் 138, 2018 ஆண்டில் 189 மற்றும் 2019 ஆண்டில் 261 (கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 38% அதிகரிப்பு) சூசிகைபடுத்தப்பட்ட சஞ்சிகைகளில் உயர் தர வெளியீடுகள் மேம்படுத்தப்பட்டுள்ளது.

இம் முயற்சிகள் மற்றும் செயற்பாடுகள் ஆய்வு வெளியீடுகளில் – ஆய்வு பட்டங்கள் மற்றும் பிரசுரங்களின் எண்ணிக்கை, ஆய்வுகள் மற்றும் பிரசுரங்களின் தரம், ஆய்வு நிதியிடல் மற்றும் ஆய்வு ஒத்துழைப்புக்கள் என்பவற்றில் குறிப்பிடத்தக்க துரித அதிகரிப்பை உண்டாக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 1.9 சர்வதேசமயப்படுத்துதல்

மொறட்டுவை பல்கலைகக்கழகம் 2019 ஆண்டு காலப்பகுதியில் சர்வதேசமயப்படுத்துவதற்காக அதிகளவு கவனத்தை தொடர்ந்தும் செலுத்தியது. மொறட்டுவை பல்கலைகக்கழகம் சார்பான சர்வதேச பார்வையை அதிகரிப்பதற்காக பல்வேறு வழிமுறைகளை பயன்படுத்துவதற்கு கவனத்தைச் செலுத்தும் நோக்கத்துடன் 2015 செப்ரெம்பர் மாதம் பணிப்பாளர்/ சர்வதேச உறவுகள் எனும் பதவிக்கான நியமனத்தை மேற்கொண்டது. கூட்டு பட்டங்களை ஆரம்பித்தல், சர்வதேச மாணவர்களை கவர்ந்திழுத்தல், சர்வதேச சுற்றுப் பயணங்களுக்கு ஏற்பாடு செய்தல், எமது மாணவர்களுக்கு சர்வதேச பல்கலைக்கழகங்களில் இணைவதற்கு உதவியளித்தல், சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் (MOUs) என்பவற்றில் ஈடுபடுதல் போன்ற முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டின் போது, பல வெளிநாட்டவர்கள் கல்விசார் மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்புக்களை மேம்படுத்துதல் சம்பந்தமாக இந்தியா பிரதிநிதிகள், தேசிய தாய்வான் பல்கலைக்கழகத்திலிருந்து பிரதிநிதிகள், அவுஸ்திரேலியாவின் டீகின் (Deakin) பல்கலைக்கழகத்திலிருந்து குழு, பின்லாந்து நாட்டின் மாண்புமிகு தூதுவர், தில்லி தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்திலிருந்து குழு, கொரியாவின் இஞ்சியோன் (Incheon) தேசிய பல்கலைக்கழகத்திலிருந்து பிரதிநிதிகள், ஷங்ஹாய் இலக்ரிக் பவர் பல்கலைக்கழகத்திலிருந்து (SUEP) பிரதிநிதிகள், ஆக்லாந்து பல்கலைக்கழகம் (UoA) மற்றும் தாய்வானின் தேசிய சுன் யட்-சென் (Sun Yat-sen) பல்கலைக்கழகம் ஆகியவற்றின்

பிரதிநிதிகள் உட்பட வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்தமை சில நடவடிக்கைகளாகும்.

மொறட்டுவைப் பல்கலைக்கழகம் (UOM), தற்போது 25 இற்கும் மேற்பட்ட சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் ஒத்துழைப்புக்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளதுடன், அவற்றில் சில மிக செயலூக்கமானதாகும். 2019 இல், சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவகங்கள் ஆகியவற்றுடன் பல ஒத்துழைப்புக்களை ஏற்படுத்த நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதுடன், அவற்றோடு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் (MOUs) மற்றும் ஒப்பந்தங்களில் ஈடுபட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) அங்கீகாரத்துக்காக காத்திருக்கிறது. கூட்டு ஆராய்ச்சி மற்றும் மாணவர்/ பணியாளர்கள் பரிமாறல்கள் சார்பாக நாகோகா (Nagaoka) தொழில்நுட்ப பல்கலைக்கழகம், AALTO பல்கலைக்கழகம் – பின்லாந்து, இஞ்சியோன் (Incheon) தேசிய பல்கலைக்கழம், அன்ஸ்பக் (Ansbach) பிரயோக விஞ்ஞானங்கள் பல்கலைக்கழகம், மியாஸாகி (Miyazaki) பல்கலைக்கழகம், ஷான்டோங் (Shandong) பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியாவின் ரோயல் மெல்போர்ன் இன்ஸ்ரிடியுட் ஒப் டெக்னோலோஜி (RMIT) மற்றும் டீகின் (Deakin) பல்கலைக்கழகம் உட்பட செயற்படும் குறிப்பிடத்தக்க ஒத்துழைப்புக்களாகும்.

2019 இன் போது, மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் முழுநேர சர்வதேச மாணவர்கள் 15 பேருக்கும் அதிகமானோர் கல்வி கற்றுவருகின்றனர். இது தவிர, பல்வேறு மாணவர் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சர்வதேச மாணவர்கள் மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் குறுங்கால பாடநெறிகளை கற்பதற்கான சில நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்படுத்தப்பட்டுள்ளன.

## 1.10 விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு செயற்பாடுகள்

றுகுணை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 2019 – இலங்கை பல்கலைக்கழக விளையாட்டு விழாவில் (SLUG) எமது விளையாட்டு வீர, வீராங்கனைகள் பங்குபற்றியதுடன், 14 அரசாங்க பல்கலைக்கழகங்களிடையே ஆண்கள் சம்பியன்ஷிப் இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்ட அதேவேளை, சகலதுறை சார் சம்பியன்ஷிப் மூன்றாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது. மொறட்டுவைப் பல்கலைக்கழகம், SLUG நிகழ்வில் படகு ஓட்டுதல் (ஆண்), டைகொண்டோ (ஆண் மற்றும் பெண்) மற்றும் மேசைப்பந்து (ஆண் மற்றும் பெண்) போட்டிகளில் சம்பியன்ஷிப் பட்டங்களை வெற்றியீட்டியது. நாம், பட்மின்டன் (ஆண்), கூடைப்பந்து (ஆண்), சதுரங்கம் (ஆண் மற்றும் பெண்), கால்பந்து மற்றும் படகு ஓட்டுதல் (பெண்) ஆகியவற்றில் இரண்டாவது இடங்களையும் வெற்றியீட்டிய அதேவேளை, கூடைப்பந்து (பெண்), கரம் (ஆண் மற்றும் பெண்), கராத்தே (ஆண்) மற்றும் றக்பி கால்பந்து ஆகியவற்றில் வெண்கலப் பதக்கங்களையும் வெற்றியீட்டினோம்.

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் மூலம் வருடாந்த Mora இன்டர்நெஷனல் கிரிக்கட் சிக்சஸ் 2019 (Mora International Cricket Sixes 2019) போட்டி நிகழ்ச்சி, இந்தியா பெங்களூர் PES பல்கலைக்கழகம் உட்பட 18 அணிகளுடன் ஒழுங்குசெய்யப்பட்டது. UOM மூலம் வருடாந்த கல்விசார் Mora Seven's றக்பி கால்பந்து போட்டித்தொடர், UIM Shuttllers Fest பெட்மின்டன் போட்டித்தொடர், Mora Smashes 2019 டேபல் டென்னிஸ் போட்டித்தொடர், Mora கிண்ண கால்பந்து சம்பியன்ஷிப், கெமுனு ரத்நாயக்க ஞாபகர்த்த கரப்பந்தாட்ட நாட்பக்கப் போட்டித்தொடர் மற்றும் Mora ஹொக்கி செவன்ஸ் 2019 என்பன ஒழுங்குசெய்யப்பட்டன.

வர்ணங்கள் வழங்கும் வைபவம் 2018, சிவில் பொறியியல் கேட்போர்கூடத்தில் 2019 மார்ச் 13-ஆம் திகதி நடாத்தப்பட்டதுடன், பல்வேறு விளையாட்டுக்கள் தொடர்பாக விளையாட்டு வீர, வீராங்கனைகள் 450 பேர் பல்கலைக்கழக வர்ணங்கள் கொடுத்து பாராட்டப்பட்டனர். பிரதம அதிதியாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியல் த சில்வா அவர்கள் கலந்துகொண்டதுடன், படகு ஓட்டுதல் போட்டித் தலைவர் எஸ்.ஏ.பி. சில்வா சிறந்த சகலதுறை மாணவருக்கான – விளையாட்டுக்கள் மற்றும் கல்விசார் விருதைப் பெற்றுக்கொண்டார்.

2019 ஆகஸ்ட் மாதம் இத்தாலியில் நடைபெற்ற உலக பல்கலைக்கழக விளையாட்டு போட்டியில் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினது பல்கலைக்கழக டேபல் டென்னிஸ் அணியைச் சேர்ந்த மேவன் அபயவிக்கிரம, சுபுன் வருசவிதான, நுவனி நவோத்யா மற்றும் பெண்கள் டெனிஸ் அணியிலிருந்து என். ராஜேந்திரன் ஆகிய நான்கு மாணவ, மாணவிகள் இலங்கை பல்கலைக்கழகங்களை பிரதிநிதித்துவப்படுத்தினர். 2019 FISU கோடைக்கால விளையாட்டு விழாவில் பங்குபற்றிய 67 பேர் கொண்ட தேசிய பல்கலைக்கழக விளையாட்டு குழாமின் தலைவராக உடற்பயிற்சி போதனாசிரியர் திரு. லக்ஷ்மன் விஜேசூரிய அவர்கள் SLUSA மூலம் நியமிக்கப்பட்டார். டைக்குவாண்டோ அணியினது, அணி முகாமையாளராக உடற்கல்விப் பணிப்பாளர் திரு. கே.ஆர்.டீ.சீ. ரத்னமுதலி அவர்கள் நியமிக்கப்பட்டார்.

தேசிய டைகொண்டோ விளையாட்டு விழாவுக்கு இணைவாக இலங்கை டைக்குவாண்டோ சம்மேளனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட கொழும்பு மாவட்ட டைக்குவாண்டோ தொிவுச் சுற்றின் போது Sparring விளையாட்டு (63-68 கி.கி. நிறை பிரிவு) சார்பாக வெண்கலப் பதக்கத்தை ஒன்றிணைந்த வடிவமைப்பு திணைக்களத்தின் மூன்றாவது நிலை மாணவரொருவர் வெற்றியீட்டினார். புடைவை மற்றும் ஆடை தொழில்நுட்ப திணைக்களத்தின் இறுதியாண்டு மாணவரொருவர் தேசிய டைக்குவாண்டோ அணியை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், 2019 திசம்பர் 1-ஆம் திகதி முதல் 10-ஆம் திகதி வரை நேபாளத்தில் நடைபெற்ற 13-வது தெற்காசிய விளையாட்டு விழாவில் பெண்களின் குழு poomsae (அணி செய்துகாட்டல்) நிகழ்வில் (24 வயதுக்கு மேற்பட்ட பிரிவு) வெள்ளிப்பதக்கமொன்று வெற்றியீட்டியது. புடைவை மற்றும் ஆடை தொழில்நுட்ப திணைக்களத்தின் முதலாவது ஆண்டு மாணவரொருவர் தேசிய கராத்தே அணியை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், 2019 திசம்பர் 1 முதல் 10-ஆம் திகதி வரை நேபாளத்தில் நடைபெற்ற 13-வது தெற்காசிய விளையாட்டு விழாவில் Kumite (சண்டை) நிகழ்வில் வெண்கலப்பதக்கத்தை வென்றெடுத்தார்.

FIT SIXES என்பது, பட்டதாரிகள், பட்டதாரி மாணவர்கள் மற்றும் பீடத்தின் கல்விசார் பணியாளர்கள் ஆகியோரிடையே உள்ள பிணைப்பை வழுப்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப பீடத்தின் மாணவர் சங்கத்தினால் வருடாந்தம் ஒழுங்குசெய்யப்படும் ஆறுபேர் (six-a-side) கொண்ட கிரிக்கட் போட்டித்தொடராகும். “FIT SIXES 2019” தகவல் தொழில்நுட்ப (IT) பீடத்தைச் சேர்ந்த பட்டதாரி மாணவர்கள், பட்டதாரிகள் மற்றும் IT தொழில்வாண்மை-யாளர்களது அணிகளின் பங்குபற்றலுடன், 2019 அக்டோபர் 26-ஆம் திகதி பல்கலைக்கழக வளாகத்தில் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்வுக்கு “Extrogene Software” நிறுவனம் பிரதான அனுசரணையாளராக இருந்ததுடன், FIT Moments (தகவல் தொழில்நுட்ப பீடத்தின் உத்தியோகபூர்வ ஊடக அலகு) இந்த நிகழ்ச்சிக்கான உத்தியோகபூர்வ ஊடக பங்காளியாக செயற்பட்டது.

மொறட்டுவைப் பல்கலைக்கழக, தமிழ் இலக்கிய சங்கத்தின் மூலம் 2019 ஆண்டில் ஒழுங்கு செய்யப்பட்ட தமிழரின் வருடாந்த தைபொங்கல் கொண்டாட்டம் 2019 சனவரி 27-ஆம் திகதி

பல்கலைக்கழக வளாகத்தில் 800 பேருக்கும் மேற்பட்டவர்களின் பங்குபற்றலுடன் நடாத்தப்பட்டது. மாணவர்களிடையே சகோதரத்துவம் சார்பான உயர்ந்த உணர்வை பிரதிபலிக்கும் வகையில் இந் நிகழ்வுக்கு சகல மாணவர்களும் செயலூக்கமான வகிபாத்திரத்தை வகித்ததுடன், சிவில் பொறியியல் திணைக்களத்தின் மாணவர்களும் பணியாளர்களும் "சிவில் அபே அவுருது - 2019" (CIVIL APE AVURUDU – 2019) நிகழ்வை ஒழுங்குசெய்து, சிங்கள மற்றும் தமிழ் புது வருடத்தை மிக கோலாகலமாக கொண்டாடினர்.

காலஞ்சென்ற மாணவர்கள் இருவரை நினைவு கூறுதல் மற்றும் திணைக்களத்தினது மாணவர்களிடையே மரியாதை, கருணை சமூக நல்லிணக்கம் என்பவற்றை வளர்த்தல் சார்பாக நில வளங்கள் பொறியியல் திணைக்களத்தின் நில வளங்கள் பொறியியல் சங்கத்தினால் சர்வ மத நிகழ்ச்சியொன்று ஒழுங்குசெய்யப்பட்டது.

புடைவை மற்றும் ஆடை தொழில்நுட்ப திணைக்களத்தினது நாகரீக வடிவமைப்பு பட்ட பாடநெறியின் நாகரீக வடிவமைப்பு மாணவர்களின் சங்கத்தினால் (FDSS) சமுதாய சேவை கருத்திட்டமொன்று, 2019 மே 10-ஆம் திகதி, கந்தானை, அனியாகந்த வைத்தியசாலையில் நடாத்தப்பட்டது. இக் கருத்திட்டத்தின் குறிக்கோள், சமுகத்திலுள்ள மனநலத் துறை சார்பாக உதவுவதும் விருத்திசெய்வதுமாகும். FDSS மூலம் அனியாகந்த வைத்தியசாலையில் "சுவமன்சலா" (SuwaMansala) எனும் மனநல மருத்துவ வாட்டு சார் அத்தியாவசியமான பிரிவொன்று இல்லையென்பதை இனங்கண்டு, வதிவிட நோயாளர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு முடிவு எடுக்கப்பட்டது.

Sneha 2019, போக்குவரத்து மற்றும் தேவை விநியோக ஒழுங்கமைப்பு (Logistics) சங்கத்தின் (STL) மூலம் ஒழுங்குசெய்யப்படும் வருடாந்த நிறுவன சமூக பொறுப்புசார் (CSR) கருத்திட்டம் தொடர்ச்சியாக 4-வது தடவையாகவும் 2019 யூலை 5-ஆம் திகதி, இரத்தினபுரி, பள்ளேபெத்த, முத்தெட்டுபொல வித்தியாலய மாணவ, மாணவிகள் சார்பாக கருணை மற்றும் சகோதரத்துவத்தை தொிவிக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்டது. மொறட்டுவைப் பல்கலைக்கழக, போக்குவரத்து மற்றும் தேவை விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவ திணைக்களத்தின் (TLM) பட்டதாாி மாணவர்களால் முத்தெட்டுபொல வித்தியாலயத்தினது சாதாரண தர மாணவர்களுக்காக 3 நாள் கருத்தரங்கு Sneha 2019 கீழ் ஒழுங்குசெய்யப்பட்டது. சவுத் ஏசியா கேட்வே டெர்மினல்ஸ் (South Asia Gateway Terminals) (பிரை.) லிமி. மற்றும் ஹேலீய்ஸ் எட்வன்டீஸ் (Hayleys Advantis) லிமிடெட் எனும் நிறுவனங்களது நிதியுதவியுடன் பாடசாலையின் பழுதடைந்த கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு, மீண்டும் பயன்படுத்தக்கூடிய நிலைக்கு கொண்டுவரப்பட்டது.

நில வளங்கள் பொறியியல் சங்கத்தின் (நில வளங்கள் பொறியியல் திணைக்கள) மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட வருடாந்த சமுதாய சேவை கருத்திட்டம் "குரு கெதரட அருனெல்லக்" (Gurugedarata Arunellak) எனும் பெயரில், 2019 நவம்பர் 11-ஆம் திகதி புத்தல, மொனறாகலை விஹாரமஹாதேவி ஆரம்ப பாடசாலையில் நடாத்தப்பட்டது. இந் நிகழ்ச்சியின் நோக்கம், மாணவ, மாணவிகளின் கற்றலுக்கு வசதியேற்படுத்திக் கொடுப்பதற்காக புத்தகங்கள், கணினிகள், விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் போன்றன பாடசாலைக்கு அன்பளிப்பு செய்தலாகும்.

எந்திரவியல் பொறியியல் திணைக்களத்தின் மூலம் 5-வது தடவையாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த ஐஸ் கிறீம் தன்சல (குளிர் களி அன்னதானம்), 2019 யூன் 19-ஆம் திகதி

மாணவர்கள் மற்றும் பணியாளர் அங்கத்தவர்கள் பலரது பங்குபற்றலுடன் திணைக்களத்தின் வளவில் நடாத்தப்பட்டது.

கட்டடப் பொருளியல் திணைக்களத்தின் மாணவர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட, Sarasavi Gee Sisila வருடாந்த இசை நிகழ்ச்சி தொடர்ச்சியாக 24-வது தடவையாகவும் 2019 யூலை 26-ஆம் திகதி நடைபெற்றது. இந் நிகழ்ச்சியை ஒழுங்குசெய்வதற்காக திணைக்களத்தினது மாணவ, மாணவிகளின் ஆக்கபூர்வமான மற்றும் அர்ப்பணிப்புமிக்க செயற்பாடுகள் இந் நிகழ்வினது கவர்ச்சியையும் வெற்றியையும் வெளிக்காட்டிய அதேவேளை, போக்குவரத்து மற்றும் தேவை விநியோக ஒழுங்கமைப்பு சங்கத்தின் (STL) மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட போக்குவரத்து மற்றும் தேவை விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவ திணைக்களத்தின் வருடாந்த திறன் நிகழ்ச்சியான Rhythm Divine – 2019 பல்கலைக்கழக வளவில் மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டது.

UoM Leos கடந்த மாதத்தில் மற்றுமொரு வெற்றிகரமான Leos வருடத்தின் முடிவை பதிவுசெய்தது. மனித வர்க்கத்திற்கு சேவை செய்யும் போது அவர்களது கீர்த்தியை உறுதிப்படுத்தி, அவர்கள் தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாகவும் இலங்கையின் மிகச் சிறந்த செயலாற்றலுடைய Leo கழகமாகினர். இது இலங்கையில் Leo கழகமொன்றுக்கு கிடைக்கக்கூடிய உயர்ந்த அங்கீகாரமாகும். இலங்கையின் முன்னோடி Leo கழகமொன்றாக UoM Leos வருடந்தோறும் பெருமளவான சமுதாய சேவை கருத்திட்டங்களை ஒழுங்குசெய்து நடாத்துகிறது. அவற்றுள், சாதாரண தர பரீட்சை தொடர்பாக ஆறு கட்டங்களில் நடாத்தப்படும் கருத்தரங்கு தொடரான "நெனதியவர" (NenaDiyawara) கிராமிய பாடசாலைகளின் நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகளது வாழ்க்கையில் ஒளியேற்றுவதற்கு உதவியுள்ளது. Leo பல்துறை விருதுகள் விழாவின் போது பல விருதுகளுடன் இக் கருத்திட்டமானது மிகவும் பாராட்டப்பட்டது. "The Symphony of Cure" என்பது, மஹரகம அபேக்சா (Apeksha) வைத்தியசாலையில் இருக்கும் சிறு குழந்தைகளின் உள்ளத்தை நலமாக்குவதற்காக UoM Leos மூலம் மேற்கொள்ளப்பட்ட விருதை வெற்றிகொண்ட கருத்திட்டமொன்றாகும்.

அநுராதபுரத்தில் பிரசித்திபெற்ற பாடசாலைகள் இரண்டினது இளம் யுவன் யுவதிகளுக்கு தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் 2019 ஆண்டின் போது INTECS முதலாவது வெளிக்கள செயற்றிட்டம் தொடர்ச்சியாக இரண்டு தினங்கள் நடாத்தப்பட்டன. அது, 2019 யூன் 24-ஆம் திகதி அநுராதபுரம் மத்திய கல்லூரி மற்றும் 2019 யூன் 25-ஆம் திகதி அநுராதபுரம் வலிசிங்ஹ ஹரிஸ்சந்திர கல்லூரி ஆகியவற்றில் நடாத்தப்பட்டன. பாடசாலையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) சம்பந்தமாக மாணவர்களுக்கு வழிகாட்டுதல், மாணவர்களிடையே தகவல் தொழில்நுட்பத் துறை சார்பாக ஊக்குவித்தல் ஆகிய நோக்கங்களுடன் இந் நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. 2019 ஆண்டின் முதலாவது செயற்றிட்டமாக அநுராதபுரம் நிகழ்ச்சித்திட்டத்தில் ஒவ்வொரு தினமும் 200 இற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்குபற்றி மிகவும் வெற்றிகரமானதாக அமைந்தது. இந் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக மாணவ, மாணவிகள் அதேபோல், பாடசாலை இரண்டினதும் ஆசிரியர், ஆசிரியைகள் ஆகியோர்களிடமிருந்து பெறுமதிமிக்க பின்னூட்டல்களும் கிடைத்தன. தகவல் தொழில்நுட்ப பீடத்தின் பட்டதாரி மாணவ, மாணவிகள் 35 போின் பங்குபற்றல் மற்றும் முயற்சி என்பன இச் சிறந்த நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றிக்கானதோர் காரணியாகும்.

இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் பொறியியல் திணைக்களத்தின் இலத்திரனியல் கழகம் (கிளப்) மூலம் 2019 சனவரி 18, 19 மற்றும் 20-ஆம் திகதிகளில் பொன்விழா கொட்டாட்டம் சார்பாக "Expose 2019" எனும் கண்காட்சியொன்றை ஒழுங்குசெய்திருந்தது. கடந்த 50 வருடங்களாக இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் பொறியியல் திணைக்களம், இலங்கையில்

அதிக எண்ணிக்கையான இளம் பட்டதாரி மாணவர்களுக்கு அதி நவீன தொழில்நுட்பத்தின் உச்ச முனை செல்வதற்கான வழிகாட்டுதலை செய்துள்ளது. திணைக்களத்தினது மாணவர்கள் மற்றும் திணைக்களத்தின் மூலம் உருவாக்கப்படுகின்ற சிறந்த தொழில்வாண்மையாளர்கள் மூலம் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் வெற்றி பெற்றுள்ள எண்ணற்ற விருதுகள் சிறந்த தரமான கற்றல் மற்றும் வழிகாட்டுதல் தொடர்பான மிக உறுதியான சான்றாகும். "Expose 2019" முக்கியமான நிகழ்வொன்று என்பதுடன், அது பல்வேறு விடயங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் ஊடாக மாணவர்களது நிபுணத்துவம் மற்றும் திறன்களை வெளிக்காட்டியது. திணைக்களத்தின் 14-வது மாணவர் குழு, அவர்களது மிகச் சிறந்த இறுதியாண்டு கருத்திட்டங்கள் சிலவற்றை இந் நிகழ்வில் காட்சிப்படுத்தியது. இக் கண்காட்சியில் கேம்ஸ் (games) விளையாட்டுக்கள் மற்றும் வேடிக்கை விநோத செயற்பாடுகளைக் கொண்ட பல காட்சிக்கூடங்களும் அதேபோல் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட டுரோன் வானூர்தி சாகச கண்காட்சியும் உள்ளடங்கியிருந்தன. கண்காட்சியில் மற்றுமொரு விசேட செயற்பாடு, "Expose TV" ஒளிபரப்பாகும். இது நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்பு செய்ததுடன், முழுமையாக பட்டதாரி மாணவர்களால் செயற்படுத்தப்பட்டது. இதற்காக வீடியோகிராபிஃ, தொகுத்துவழங்கல், ஒளிபரப்பு செய்யும் திணைக்களத்தின் உள்ளே நேரடி ஒளிபரப்புக் கூடமொன்றும் (studio) அமைக்கப்பட்டது. நேரடி ஒளிபரப்பு செய்யப்படாத நேரம் பார்வையாளர்கள் ஒளிப்பதிவுக் கூடத்தை சுற்றிப்பார்க்க அனுமதிக்கப்பட்டார்கள். பங்குபற்றியவர்களுக்கும் ஒழுங்குசெய்தவர்களுக்கும் சிறந்த அனுபவத்தை பெற்றுக்கொடுத்த இக் கண்காட்சி சனவரி 20-ஆம் திகதி முடிவடைந்தது.

| பட்டமேற்படிப்பு | 2,362,600 | 2,227,200 |
| பாடவகுப்புக் கட்டணம் - பட்டப்படிப்பு | 7,612,300 | 6,321,050 |
| பட்டமேற்படிப்பு | - | - |
| பரீட்சைக்கட்டணம் - பட்டப்படிப்பு | 250,560 | 251,600 |
| பட்டமேற்படிப்பு | 913,920 | 552,440 |
| | **12,085,300** | **10,426,210** |

| குறிப்பு 21<br>ஏனைய வருமானம் | | |
|---|---|---|
| ஆதனங்களிலிருந்து வாடகை | 759,400 | 1,049,856 |
| மீளளிப்புக்கள் | - | - |
| நானாவிதப் பெறுவனவுகள் | 15,283,390 | 12,594,981 |
| நூலக தண்டப்பணம் | 64,838 | 389,443 |
| மருத்துவக் கட்டணங்கள் | 206,313 | 158,847 |
| பழைய பொருள் விற்பனை | - | 475,196 |
| | **16,313,941** | **14,668,322** |

| குறிப்பு 22<br>ஆளுக்குரிய வேதனாதிகள் | | |
|---|---|---|
| **கல்விசார்** | | |
| சம்பளங்களும் கூலிகளும் | 555,444,509 | 469,927,943 |
| படிகள் | 707,415,841 | 517,551,970 |
| வாழ்க்கைச் செலவுப் படி | 47,733,761 | 45,888,336 |
| ப.சே.நி. | 102,907,204 | 84,679,585 |
| ஓய்வூதியம் | 60,841,343 | 45,767,806 |
| ஊ.ந.நி. | 32,740,248 | 26,091,504 |
| பதில் கடமை கொடுப்பனவுகள் | - | - |
| வருகைதரும் விரிவுரையாளர் கட்டணம் | 37,600,964 | 36,872,411 |
| **கல்விசாராத** | | |
| சம்பளங்களும் கூலிகளும் | 345,717,616 | 305,421,127 |
| படிகள் | 208,165,399 | 171,179,950 |
| வாழ்க்கைச் செலவுப் படி | 67,695,079 | 66,381,316 |
| மொழித் தேர்ச்சிக் கொடுப்பனவு | - | - |
| ப.சே.நி. | 47,153,577 | 40,894,070 |
| ஓய்வூதியம் | 29,685,867 | 24,555,484 |
| ஊ.ந.நி. | 15,386,826 | 13,132,166 |
| பதில் கடமை கொடுப்பனவுகள் | 556,415 | 307,049 |
| மேலதிக நேர படி | 57,255,945 | 50,353,799 |
| விடுமுறைக்கால கொடுப்பனவு | 166,354 | 251,254 |
| | **2,316,466,946** | **1,899,255,770** |

| குறிப்பு 23 | 2019 | 2018 |
|---|---|---|
| **பிரயாண மற்றும் இணைந்த கொடுப்பனவுகள்** | ரூ. | ரூ. |
| உள்நாடு | 1,399,885 | 1,991,508 |
| வெளிநாடு | 5,005,076 | 6,080,145 |
| | **6,404,961** | **8,071,653** |

| குறிப்பு 24 | | |
|---|---|---|
| **நலன்புரிச் சேவைகள்** | | |
| சீருடைகள் மற்றும் தையல் கட்டணங்கள் | 2,755,773 | 2,285,631 |
| மருத்துவ வழங்கல்கள் | 1,173,079 | 871,307 |
| பணியாளர் அபிவிருத்தி | 6,487,822 | 6,342,677 |
| விடுமுறைகால ஆணைச்சீட்டு, பருவகால சீட்டு | 1,859,590 | 1,721,025 |
| வெகுமதிகளும் அன்பளிப்புக்களும் | 3,105,933 | 2,032,260 |
| கைத்தொழில் பயிற்சி மற்றும் தொழில் வழிகாட்டல் | - | 95,960 |
| பல்கலைக்கழக விளையாட்டு செயற்பாடுகள் | 2,611,100 | 2,998,930 |
| மாணவ நலன்புரி, ஊழியர் நலன்புரி, மாணவ சங்கம் | 66,707 | - |
| உதவுதொகைகள், அங்கத்துவக் கட்டணங்கள் | 3,307,212 | 2,545,595 |
| பிற – புதினப்பத்திரிகை, சஞ்சிகைகள், போன்றன | 28,097,531 | 25,721,891 |
| | **49,464,748** | **44,615,277** |

| குறிப்பு 25 | | |
|---|---|---|
| **பிற செயற்பாட்டு செலவுகள்** | | |
| மன்ற மற்றும் குழுச் சேவைகள் | 899,800 | 700,650 |
| தொழில்சார் மற்றும் ஏனைய கட்டணங்கள் | 7,622,666 | 6,263,633 |
| களியாட்டச் செலவுகள் | 5,233,751 | 5,544,797 |
| பட்டமளிப்பு விழா | 6,257,983 | 7,534,052 |
| பரீட்சை செலவினம் | 12,128,628 | 13,180,939 |
| பணிக்கொடை ஏற்பாடுகள் | 429,368,809 | 99,372,451 |
| ஆதன கடன் வட்டி - அரசாங்க பங்களிப்பு | 5,682,162 | 5,861,943 |
| | **467,193,798** | **138,458,466** |

| குறிப்பு 26 | | |
|---|---|---|
| **மாணவர்களுக்கான நிதி உதவிகள்** | | |
| மஹபொல புலமைப்பரிசில்கள் | 17,380,300 | 98,852,600 |
| மாணவர் உதவிப்பணங்கள் | 11,298,500 | 6,578,900 |
| அறக்கட்டளை நிதி புலமைப்பரிசில்கள் | 86,000 | 91,500 |
| | **28,764,800** | **105,523,000** |

| குறிப்பு 27 | | |
|---|---|---|
| **ஒப்பந்த சேவைகள்** | | |
| போக்குவரத்து | 3,156,376 | 3,980,971 |
| தொடர்பாடல் | 54,787,205 | 49,466,620 |
| அஞ்சல் கட்டணம் | 2,195,181 | 2,425,361 |
| மின்சாரம் | 90,368,664 | 80,923,112 |
| பாதுகாப்பு சேவைகள் | 40,748,231 | 35,141,292 |
| நீர் | 8,110,814 | 6,608,661 |
| சுத்திகரிப்புச் சேவைகள் | 80,525,621 | 59,053,050 |
| வாடகை, வாடகைக்கமர்த்தல் கட்டணம் | 4,977,259 | 5,737,488 |
| இறைகள் மற்றும் வரிகள் | 50,511 | 288,118 |
| அச்சடித்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் | 6,985,595 | 5,389,878 |
| ஏனையன | 552,971 | 140,451 |
| | **292,458,428** | **249,155,002** |

| குறிப்பு 28 | 2019 | 2018 |
|---|---|---|
| **வழங்கல்கள் மற்றும் நுகர்வுகள்** | ரூ. | ரூ. |
| காகிதாகிகள் | 25,080,639 | 24,697,883 |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் | 11,318,371 | 10,428,045 |
| எந்திர உபகரணம் மற்றும் மின் பொருட்கள் | 553,620 | 1,597,555 |
| இரசாயனங்கள் மற்றும் கண்ணாடிப் பொருட்கள் | 1,899,411 | 1,164,213 |
| பிற வழங்கல்கள் (மென்பொருள், பராமரிப்பு பொருள்) | 75,799,881 | 77,315,255 |
| | **114,651,921** | **115,202,951** |

| குறிப்பு 29 | | |
|---|---|---|
| **பராமரிப்புக்கள்** | | |
| வாகனங்கள் | 13,104,069 | 12,463,235 |
| பொறி, எந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 35,529,297 | 36,810,002 |
| கட்டடங்களும் நிர்மாணிப்புக்களும் | 40,882 | - |
| | **48,674,247** | **49,273,237** |

| குறிப்பு 30 | | |
|---|---|---|
| **நிதிக் கிரயம்** | | |
| வங்கிக் கட்டணம் | 262,748 | 801,293 |
| | **262,748** | **801,293** |

| குறிப்பு 31 | | |
|---|---|---|
| **உருவாக்கப்பட்ட வருமானம்/செலவினம்** | | |
| பட்டமேற்படிப்பு பாடநெறிகள் | 215,647,170 | 173,484,040 |
| குறுகிய பாடநெறிகள் | 38,953,416 | 44,729,259 |
| ஆலோசனைசார் கருத்திட்டங்கள் | 265,723,138 | 318,431,501 |
| | **520,323,724** | **536,644,801** |

## காசுப்பாய்ச்சல் கூற்றுக்கான குறிப்புக்கள்

| குறிப்பு 32 | | |
|---|---|---|
| **காசு மற்றும் காசுக்கு சமமானவை** | | |
| முதலீடு (நீண்டகாலம்) | 894,406,976 | 699,089,161 |
| வங்கியிலுள்ள காசு | 144,969,929 | 164,681,510 |
| கையிலுள்ள காசு | 50,000 | 5,000 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | **1,039,426,905** | **863,775,671** |

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. HED/C/UOM/6/19/FA

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date

உப வேந்தர்,
மொறட்டுவை பல்கலைக்கழகம்.

**மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் 2019 திசம்பர் 31-ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான 2018 இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12-ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.**

1. **நிதிக் கூற்றுக்கள்**

1.1 **அபிப்பிராயம்**

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் 2019 திசம்பர் 31-இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்து மாற்றங்கள் சார் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்றும் நிதிக் கூற்றுக்கான குறிப்புக்களையும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2019 திசம்பர் 31-இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள், 1978-இன் 16-ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107 (5)-ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1)-ஆம் உறுப்புரை மற்றும் 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினது ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108 (1)-ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் 154 (6)-ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொலதுவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34
+94 11 2 88 72 23
ag@auditorgeneral.gov.lk
www.naosl.gov.lk

பல்கலைக்கழகத்தின் 2019 திசம்பர் 31-இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதனது நிதிசார் செயலாற்றலையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இவ் அறிக்கையில் நிதிக் கூற்றுக்கள் சார் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்காக போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகள் என்னால் பெற்றுக்-கொள்ளப்பட்டுள்ளது என நான் நம்புகிறேன்

## 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினரினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்.

நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில், பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் நிலையை தொடருவதற்கான இயலுமையை தீர்மானம் செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன், முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை முடிவுறுத்துவதற்கு கருதுவதாயின் அல்லது ஏனைய மாற்றுவழி இல்லாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாயின் தவிர தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவதுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை சம்பந்தமான பொறுப்பு, ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களால் பொறுப்பு ஏற்கப்படுகிறது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் சம்பந்தமாக ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றை பேணிச்செல்லுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளரது அறிக்கையொன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்படுத்துதல் உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப் படுகின்றபோது அது எல்லா வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை கண்டுபிடிக்கும் என்பதற்கான உத்தரவாதமாக அமையமாட்டாது. மோசடி அல்லது தவறு தனியாக அல்லது கூட்டுமொத்தமான ரீதியில் செல்வாக்கின் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடும் என்பதுடன், இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தாக்கத்தை செலுத்தக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க, தொழில்சார் தீர்ப்புக்களுடன் மற்றும் தொழில்சார் ஐயப்பாட்டுடன் என்னால் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான தவறான கூற்றுக்களில் ஆபத்துக்களை இனங்காணும் போது அல்லது மதிப்பீடு செய்யும் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதனால் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய இடர்களை தவிர்த்துக்கொள்வதற்கு போதுமானளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகின்றது.

- சந்தர்ப்பங்களுக்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- நிகழ்வுகள் அல்லது நிலமைகளின் காரணமாக பல்கலைக்கழகமானது தொடர்ந்தியங்குதல் சம்பந்தமாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் சார்ந்த அடிப்படையில் கணக்கீட்டு செயற்பாட்டுக்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவை பயன்படுத்தி பொருத்தப்பாடுகள் பற்றி தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் பற்றி எனது கணக்காய்வு அறிக்கையானது கவனத்தைச் செலுத்தவேண்டுமென்பதுடன், அவ் வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்குமாயின் என கருத்தை வெளிப்படுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலமைகளின் அடிப்படையில் தொடர்ந்தியங்கும் நிலையானது முடிவுறுத்தவும் படலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் ஆகியவற்றுக்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதை மதிப்பீடு செய்தல்.

- நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்த்தலின் போது, நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்குவதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதும்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்படுகின்ற முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவ தரப்பினர்களுக்கு விழிப்புணர்வூட்டல் செய்யப்பட்டது.

2. <u>ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை.</u>

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, கணக்காய்வுக்கு அவசியமான சகல தகவல்களும் விளக்கங்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், எனது பரீட்சிப்பின் மூலம் தெரியவருகின்றவாறு முறையான நிதிசார் பதிவேடுகள் பல்கலைக்கழகத்தினால் பேணிச்செல்லப்பட்டுள்ளன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப நிறுவகத்தினது நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருக்கின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையிலும் பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததனால் கீழே குறிப்பிடப்படுவதைவிட வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்தின் வழமையான வணிக செயற்பாடுகளுக்கு புறம்பாக முகாமை சபையின் உறுப்பினர் எவருக்காவது பல்கலைக்கழகம் சம்பந்தப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது நேரடியற்றவகையில் தொடர்புபட்டிருத்தல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப கீழே குறிப்பிடப்படும் அவதானிப்புக்களை தவிர்த்து, ஏதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டங்களுடன் அல்லது நிறுவகத்தின் முகாமைத்துவ சபையினால் விடுக்கப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுடன் இணங்காதவாறு செயலாற்றி உள்ளதை குறிப்பிடுதல்.

| <u>தொடர்புபட்ட சட்டங்கள், ஒழுங்குவிதிகள்</u> | <u>விபரம்</u> |
|---|---|
| (அ) இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசு நிதி ஒழுங்குவிதிக் கோவை நிதி ஒழுங்கு விதி 757-(2)(அ). | மீளாய்வு ஆண்டின் திசம்பர் 31-ஆம் திகதியில் இருப்பு கணக்கெடுப்பு அறிக்கையின் படி பராமரிப்பு களஞ்சியத்தில் ரூ. 3,304,883 ஆன தொகை குறைவு தொடர்பாக 2020 யூலை 07-ஆம் திகதி வரை நிதி ஒழுங்குவிதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 திசம்பர் 19 திகதியும் 842 இலக்கமும் கொண்ட அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை. | பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான நிலையான சொத்துக்கள் சம்பந்தமாக நிலையான சொத்துக்கள் சார் பதிவேடொன்று பேணிச்-செல்லப்பட்டிருக்கவில்லை. |

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப கீழே குறிப்பிடப்படும் அவதானிப்புக்களை விடுத்து, பல்கலைக்கழகத்தின் தத்துவங்கள், செயற்பணி மற்றும் இலக்குகள் என்பவற்றுக்கு இணக்கமின்றி செயலாற்றியிருப்பதை குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப கீழே குறிப்பிடப்படும் அவதானிப்புக்களை விடுத்து, பல்கலைக்கழகத்தின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் காலவரையறைகளுக்குள் ஏற்புடையதான சட்டதிட்டங்களுக்கு இணங்க பெற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்காமையை குறிப்பிடுதல்.

3. <u>ஏனைய அவதானிப்புக்கள்</u>

(அ) 2014-ஆம் ஆண்டிலிருந்து 2018-ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியினுள் தேவைகள் இனங்காணப்படாமல் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூ. 5,422,227 ஆன டோனர் மற்றும் காட்ரீஜ் 397 பிரதான களஞ்சியத்தில் காணப்பட்டன.

(ஆ) பல்கலைக்கழகத்தினது திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தின் மூலம் ஒருங்கிணைப்புச் செய்கின்ற "BIT" பாடநெறி சார்பாக தனியார் நிறுவகங்களுடன் மேற்கொண்டுள்ள உடன்படிக்கைகளுக்கேற்ப ஒவ்வொரு நிறுவகங்களின் மூலம் குறைந்தது வருடத்திற்கு மாணவர்கள் 60 பேர் கொண்ட எண்ணிக்கையையாவது சேர்த்துக்கொள்ளப்படாத காரணத்தினால், அத் தனியார் நிறுவகங்கள் இரண்டிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு கிடைக்கவேண்டிய மொத்தம் ரூ. 8,255,000 தொகையை அறவிடுவதற்கு கணக்காய்வு தினமான 2020 ஆகஸ்ட் 10-ஆம் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016-ஆம் ஆண்டிலிருந்து 2018-ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியினுள் "BIT" பாடநெறி மூலம் ஈட்டப்பட்டிருந்த வருமானத்தில் ரூ. 13,016,437 நிருவாகக் கட்டணமாக சம்பந்தப்பட்ட ஒப்பந்தத் தரப்பினரல்லாத Uni Consultancy கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) கல்வி விடுமுறை பெற்று வெளிநாடு சென்றுள்ள விரிவுரையாளர்கள் 37 பேர்கள் ஒப்பந்தங்கள் மற்றும் பிணைகளை மீறியுள்ளதன் காரணமாக மீளாய்வு ஆண்டின் திசம்பர் 31-ஆம் திகதியில் மொத்தம் ரூ. 76,861,700.00 தொகை அறவிட வேண்டியுள்ளதுடன், அதில் 20 வருடங்களுக்கு மேலாக 9 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய மொத்தத் தொகை ரூ. 5,826,861 ஆகும்.

(உ) சரியான திட்டமொன்று இல்லாததன் காரணமாக மேற்கொள்ளப்பட்ட தோட்ட அலங்காரப்படுத்தல் குறிப்பிடப்பட்டவாறு நிறைவேற்றாத காரணத்தினால்

தனியார் ஒப்பந்த கம்பனியொன்றுக்கு செலுத்தப்பட்ட ரூ. 3,093,310 தொகை பொருளாதார இலாபமற்ற செலவினம் என அவதானிப்புச் செய்யப்பட்டது.

(ஊ) 2019 திசம்பர் 31-ஆம் திகதியில் பல்கலைக்கழக பாடநெறிகள் மற்றும் திணைக்களங்கள் சார் அபிவிருத்தி நிதியங்கள் 35-இன் மொத்தம் ரூ. 13,137,228 தொகை ஆண்டினுள் செயற்பாடின்றி இருந்ததுடன், நிதியங்கள் 27-இன் மொத்தம் ரூ. 50,475,124 தொகை குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தன.

(எ) 2019 திசம்பர் 31-ஆம் திகதியளவில் கூட்டுத்தொகை ரூ. 4,548,539 ஆன புலமைப்பரிசில் நிதியங்கள் 10 வருடங்களுக்கும் மேற்பட்ட காலப்பகுதியிலிருந்து குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், புலமைப்பரிசில் வழங்கும் அளவுகோல்கள் சார் நிபந்தனைகளில் காணப்படும் சிக்கல்கள் அதற்கான காரணமாக இருந்தன.

(ஏ) 2019 திசம்பர் 31-ஆம் திகதியில் பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணியினர் முறையே 987 ஆகவும் 873 ஆகவும் இருந்ததுடன், உள்ளபடியான கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாட்-தொகுதியினர் முறையே 587 ஆகவும் 676 ஆகவும் இந்ததால், வெற்றிடங்கள் முறையே 399 ஆகவும் 197 ஆகவும் காணப்பட்டன. வெற்றிடங்கள் சார்பாக ஒப்பந்த அடிப்படையில் 80 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், கல்விசார் ஆளணியினரின் வெற்றிடங்கள் சார்பாக வெளிவாரி விரிவுரையாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு, மீளாய்வு வருடம் சார்பாக ரூ. 37,600,964 கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

(ஐ) யுனி கன்சல்டன்சி கம்பனிக்கு சட்டரீதியான கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதற்காக அரசாங்க பொது முயற்சிகள் குழுவின் மூலம், பல்கலைக்கழகத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ள போதிலும், அறிக்கைத் தினம் வரையும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

டபிள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி

මොරටුව විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை
University of Moratuwa, Sri Lanka

මගේ යොමුව/எனது இல/My Ref: | ඔබේ යොමුව/உமது இல/Your Ref: | දිනය/திகதி/Date 2020.09.11

கணக்காய்வாளர் தலைமையதிபதி,
தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இல. 306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் 2019 திசம்பர் 31-ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான 2018 இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12-ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.

மேற்படி விடயம் தொடர்பான தங்களது இலக்கம் HED/C/UOM/6/18/FA மற்றும் 2020 ஆகஸ்ட் 28-ஆம் திகதியும் கொண்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் தொடர்பானது.

மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான தெளிவுபடுத்தல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. நிதிக் கூற்றுக்கள்

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை.

   தொடர்புபட்ட சட்டங்கள், ஒழுங்குவிதிகள்

   (அ) இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசு நிதி ஒழுங்குவிதிக் கோவை நிதி ஒழுங்குவிதி 757 (2) (அ) – திசம்பர் 31-ஆம் திகதியில் இருப்பு கணக்கெடுப்பு அறிக்கைக்கு ஏற்ப பராமரிப்பு களஞ்சியத்தில் இருப்புக் குறைவு.

   இது சம்பந்தமான விபரங்களை தேடிப்பார்ப்பதற்கும், அதற்கேற்ப அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

මොරටුව විශ්වවිද්‍යාලය, බණ්ඩාරනායක මාවත, කටුබැද්ද, මොරටුව 10400, ශ්‍රී ලංකාව
மொறட்டுவைப் பல்கலைக்கழகம், பண்டாரநாயக்க மாவத்தை, கடுபெத்த, மொறட்டுவை 10400, இலங்கை
University of Moratuwa, Bandaranayake Mawatha, Katubedda, Moratuwa 10400, Sri Lanka

උප කුලපති/உப வேந்தர்/Vice-Chancellor: +94 112 651259
Fax: +94 112 651671
කාර්යාලය/காரியாலயம்/Office: +94 112650188, 2650301, 2650340, 2650441, 2650534
Fax: +94 112650622
www.mrt.ac.lk

(ஆ) 1978 திசம்பர் 19-ஆம் திகதியும் 842-ஆம் இலக்கமும் கொண்ட அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை – நிலையான சொத்துக்கள் பற்றிய ஏடு.

1990-ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழகத்தின் சகல பிரிவுகள் மற்றும் திணைக்களங்கள் வசமுள்ள நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் சார் ஒரே ஏடு பேணிச்செல்லப்படுவதுடன், திணைக்களங்கள் மற்றும்

பிரிவுகளால் அவற்றுக்குரிய சொத்துக்கள் சம்பந்தமாக புறம்பான சொத்துக்கள் பற்றிய ஏடுகள் பேணிச்செல்லப்படுகின்றன. இருப்பினும், அந் நிலையான சொத்துக்கள் சார் ஏட்டின் மூலம் பல்வேறு அறிக்கைகளை பெற்றுக்கொள்ளும் போது ஏற்படும் பலவிதமான நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக சொத்துக்கள் பற்றிய புதிய பதிவேடொன்று அறிமுகப்படுத்தப்படவேண்டியேற்பட்டது.

தற்போது பல்கலைக்கழகத்திற்கான நிலையான சொத்துக்கள் பற்றிய புதிய பதிவேடொன்று (கணினி மயப்படுத்தப்பட்டு) தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதில் 2013.12.31 ஆம் திகதி வரை கைகொள்ளப்பட்ட சகல சொத்துக்களினதும் மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் மற்றும் 2014 முதல் 2018 வரை கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதிகள் இந்த நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2019 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் சிலவற்றுக்கு உரிய தகவல்கள் தவிர ஏனைய சகல சொத்துக்களும் இந்த சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ன. இந்த ஆண்டின் மார்ச் மாதத்தில் இருந்து கொவிட் அச்சுறுத்தல் காரணமாக பல்கலைக்கழகம் சில மாதங்கள் மூடப்பட்டதனால் இச் செயற்பாடுகளை பூர்த்திசெய்ய முடியாமலிருக்கிறது. எனினும், எதிர்வரும்காலத்தில் குறுகிய காலப்பகுதியினுள் இச் செயற்பாடுகள் அனைத்தையும் பூர்த்திசெய்ய எதிர்பார்க்கிறோம். தற்போது பூர்த்திசெய்யப்பட்டுள்ள அளவில் இந்த நிலையான சொத்துக்கள் பதிவேட்டை வழங்க முடியும் என்பதை தொிவித்துக்கொள்கிறேன்.

3. <u>ஏனைய அவதானிப்புக்கள்</u>

(அ) இந்த டோனர் மற்றும் காட்டீஜ் என்பன எதிர்காலத்தில் தேவையான திணைக்களங்கள் மற்றும் பிரிவுகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) BIT பாடநெறியை நடாத்துகின்ற தனியார் நிறுவனங்களுடன் மேற்கொண்டுள்ள உடன்படிக்கைகள் தொடர்பாக முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் படி முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

මොරටුව විශ්වවිද්‍යාලය, බණ්ඩාරනායක මාවත, කටුබැද්ද, මොරටුව 10400, ශ්‍රී ලංකාව
மொறட்டுவைப் பல்கலைக்கழகம், பண்டாரநாயக்க மாவத்தை, கடுபெத்த, மொறட்டுவைப் 10400, இலங்கை
University of Moratuwa, Bandaranayake Mawatha, Katubedda, Moratuwa 10400, Sri Lanka

උප කුලපති/உப வேந்தர்/Vice-Chancellor: +94 112 651259
Fax: +94 112 651671
කාර්යාලය/காரியாலயம்/Office: +94 112650188, 2650301, 2650340, 2650441, 2650534
Fax: +94 112650622
www.mrt.ac.lk

(இ) 2018 ஆண்டின் இறுதி வரை இந்த CODL நிலையம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினர் இருக்காத காரணத்தினால் இப் பாடநெறியை நடாத்திச் செல்வதற்காக CODL நிலையத்திற்கு தேவையான பணியாளர்கள் வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளவேண்டியிருந்தது. இந்த BIT பாடநெறியை நடாத்திச் செல்வதற்காக திறந்த மற்றும் தொலைக்கல்வி கற்பதற்கான நிலையத்துக்கு (Center for Open and Distance Learning) தேவையான பணியாளர்கள் Uni Consultancy எனும் நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், அதன் போது அப் பணியாளர்களுக்கான சம்பளமாக ரூ. 13,016,437 தொகை மேற்படி காலப்பகுதி தொடர்பாக

கொடுக்கப்பட்டுள்ளது. அது அப் பாடநெறியை நடாத்திச் செல்வதற்கான நேரடிச் செலவினமொன்றாக கணக்குகளில் பதியப்பட்டுள்ளது. தற்போது, இந் நிலையத்திற்கு தேவையான ஆளணியினர் அங்கீகரிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளதால், இவ்வாறு Uni Consultancy நிலையம் சார்பாக கொடுப்பனவுகள் செய்யப்படுவதில்லை என்பதை தொிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) 2019 ஆண்டின் போது ரூ. 17,100,722.08 ஆன தொகை பிணை உடன்படிக்கையினை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட்டதன் பின்பு 2019.12.31 திகதியில் உள்ளபடியான ரூ. 76,861,700.00 ஆன தொகையில் ரூ. 6,143,894.15 ஆன தொகை 2020.07.31 ஆம் திகதி வரை அறவிடப்பட்டுள்ளது.

உடன்படிக்கைகள் மற்றும் பிணை ஒப்பந்தங்களை மீறி 20 வருடங்களுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் 09 பேர் தொடர்பாக பிணை ஒப்பந்தம் சார் மீளாய்வுக் குழுவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலுக்கு ஏற்ப அறவிடுவதை விரைவு படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(உ) தோட்ட அலங்காரப்படுத்தல் கருத்திட்டத்தை செயற்படுத்துகின்ற போது பல்கலைக்கழகத்தின் தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு சந்தர்ப்பங்களில் மாற்றும் கோரிக்கைகள் செய்யப்பட்டு வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், கருத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் மாற்றப்பட்ட சந்தர்ப்பங்களும் இருந்தன. எவ்வாறிருப்பினும், கருத்திட்டம் சார்பாக ஒப்பந்தக்காரரின் மூலம் நிறைவேற்றப்பட்ட பணிகள் தொடர்பாக பௌதிக அடிப்படையில் ஆராய்ந்து, உரிய சான்றிதழ் மற்றும் சிபாரிசுகளை பெற்று, கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அச் செலவுகள் பல்கலைக்கழகத்தின் தேவைகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளதனால் அவை பொருளாதார இலாபமற்ற செலவாக கருத முடியாது.

(ஊ) இப் பாடநெறி மற்றும் திணைக்கள அபிவிருத்தி நிதியம் சார்பான நிதி, உரிய திணைக்களத்தின் மூலம் சுயமாக ஈட்டல் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப் படுகின்ற பாடநெறி/ கருத்திட்டங்கள் மற்றும் ஆலோசனை சேவைகள் மூலமாக ஈட்டப்படும் வருமானங்கள் ஊடாக கிடைக்கின்றது. அதன் போது, இப் பாடநெறிகளை விருத்திசெய்தல் சார்பாகவும் எதிர்கால தேவைப்பாடுகள் சார்பாகவும் ஒதுக்கமொன்றாக உரிய பாடநெறியின் மூலம் ஈட்டப்படுகின்ற வருமானத்தின் ஒரு பகுதி இவ்வாறு பாடநெறி அபிவிருத்தி நிதி என பேணிச்செல்லப்படுகிறது. திணைக்கள அபிவிருத்தி நிதியும் சம்பந்தப்பட்ட திணைக்களத்தை விருத்தி செய்வதற்காகவும் எதிர்கால நற்பயன்மிக்க தேவைகள் சார்பாகவும் ஒதுக்கமொன்றாக பேணப்படும் விசேட நிதியமொன்றாகும். இதன்போது, சம்பந்தப்பட்ட பிரிவுத் தலைவரின் மூலம் இனங்காணப்படுகின்ற

பணியாட்தொகுதியினர் மற்றும் மாணவர்கள் சார் அபிவிருத்திச் செயற்பாடுகள், ஆய்வுகூடம் மற்றும் திணைக்களம் சார் உபகரணங்களை கொள்வனவு செய்தல் சம்பந்தமாக திணைக்கள அபிவிருத்தி நிதி பயன்படுத்தப்படுகிறது.

எனவே, இப் பாடநெறி மற்றும் திணைக்கள அபிவிருத்தி நிதி தேவையற்ற விடயங்களுக்காக செலவிடப்படாது, தேவைகள் எழுகின்ற வரை நிறுத்தி வைப்பதன் மூலம் அப் பாடநெறிகள்/ திணைக்களங்கள் அதேபோல், பல்கலைக்கழகத்தினதும் நிதியியல் சக்தியை அதிகரிப்பதற்கு காரணமாகிறது.

மேலும், இப் பாடநெறி/ திணைக்கள அபிவிருத்தி நிதி குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் செலவிடப்படவேண்டிய வெளியக நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற நிதியொன்றல்ல என்பதால், அவற்றை சில வருடங்கள் செலவிடாது ஒதுக்கமொன்றாக வைத்திருப்பதில் பிரச்சினை ஏதுமில்லை என்பதை தொிவித்துக்கொள்கின்றேன்.

(எ) மேற்படி புலமைப்பரிசில் நிதி தொடர்பாக உரிய குழுவின் அறிக்கையை விரைவாக பெற்றுக்கொள்வதற்கும், அதற்கேற்ப தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும்.

(ஏ) கல்விசார் மற்றும் கல்விசார் துணை பணியாளர் வெற்றிடங்கள் சம்பந்தப்பட்ட பிரிவுத் தலைவர்களது கோரிக்கைக்கிணங்க நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், கல்விசாரா பணியாளர் வெற்றிடங்கள் அமைச்சிலிருந்து கிடைக்கும் பட்டியல் மூலம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கல்விசார் பணியாட்தொகுதியினரது வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல்கலைக்கழகத்தின் மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், கல்வித் திணைக்களங்களுக்கு உரிய தகைமைகளைக் கொண்ட மற்றும் திறமையான ஆட்கள் விண்ணப்பிக்காத காரணத்தினால் மேற்படி வெற்றிடங்களை நிரப்ப முடியாதுள்ளது. அதனால், கல்விச் செயற்பாடுகளை தடையின்றி நடாத்திச் செல்வதற்காக வெளிவாரி விரிவுரையாளர்களது சேவையினை பெற்றுக்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளது.

(ஒ) யுனி கன்சல்டன்சி கம்பனிக்கு சட்டரீதியான அங்கீகாரமொன்றை ஏற்படுத்துவதற்காக அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் மூலம் பல்கலைக்கழகத்திற்கு, அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்கிணங்க, 2020 செப்ரெம்பர் மாதமளவில் அங்கீகாரத்துக்காக அமைச்சரவை நிருபமொன்று அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவிருக்கிறது.

பேராசிரியர் என்.டீ. குணவர்தன
உப வேந்தர்

මොරටුව විශ්වවිද්‍යාලය, බණ්ඩාරනායක මාවත, කටුබැද්ද, මොරටුව 10400, ශ්‍රී ලංකාව
மொறட்டுவைப் பல்கலைக்கழகம், பண்டாரநாயக்க மாவத்தை, கடுபெத்த, மொறட்டுவைப் 10400, இலங்கை
University of Moratuwa, Bandaranayake Mawatha, Katubedda, Moratuwa 10400, Sri Lanka

උප කුලපති/உப வேந்தர்/Vice-Chancellor: +94 112 651259
Fax: +94 112 651671
කර්යාලය/காரியாலயம்/Office: +94 112650188, 2650301, 2650340, 2650441, 2650534
Fax: +94 112650622
www.mrt.ac.lk

## 20.9 சட்ட நியாயாதிக்க சபை நிதிசார் முன்னேற்றம் – 2019

**1 நிறுவகத்தின் பெயரும் முகவரியும் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம், கட்டுபெத்த, மொறட்டுவை**

**2 செயற்பணி -**

- உலக சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் ஆராய்ந்தறியும் மனோபாவத்தையும் அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்வதனையும் போசிக்கக் கூடியதான தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் கல்வியை வழங்குதல்;
- கல்வி வரையறைகளை விருத்திசெய்வதற்காக மற்றும் தேசிய தொழில்நுட்பத் திறமைகளை உயர்வடையச்செய்வதற்காக தேசிய ரீதியில் பொருத்தமான மற்றும் உயர் விளைவுகள் கொண்ட ஆய்வினை மேற்கொள்ளுதல்;
- சர்வதேச ரீதியிலான இடத்தைக் கொண்டதொரு தேசிய பல்கலைக்கழகமாக நாட்டிற்கும் கைத்தொழில் துறைக்கும் சமூகத்திற்கும் நிபுணத்துவ சேவைகளை வழங்குதல்; மற்றும்
- இலங்கையின் நிலைத்திருக்கும், விஞ்ஞான, தொழில்நுட்ப, சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் பங்குபற்றுதல்- என்பன மூலமாக தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் அதிகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கல்வி நிறுவகமாக தெற்காசியாவில் திகழ்வதாகும்.

**3 பிரதான செயற்பாடுகள்** - பொறியியல், கட்டடக்கலை, தகவல் துறைகளில் கற்பித்தல், ஆராய்ச்சி, ஆலோசனை மற்றும் ஏனைய தொழில்சார் செயற்பாடுகளை வழங்குதல்.

**4 செயலாற்றல் போக்கு**

| இல. | விபரம் | அலகு | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|---|
| | **வருமானம் மற்றும் செலவினம்** | | | | | | |
| 1 | அரசாங்க மானியம் - மீண்டெழும் | ரூ.'000 | 1,579,000 | 1,724,000 | 1,950,496 | 2,329,350 | 2,756,920 |
| 2 | சொந்த வருமானம் - மீண்டெழும் | ரூ.'000 | 25,995 | 50,735 | 54,786 | 71,872 | 79,366 |
| 3 | பிற மீண்.மானி. (மஹபொல, உதவிப்பணம் போன்ற) | ரூ.'000 | 45,538 | 84,937 | 91,077 | 105,523 | 77,175 |
| 4 | மொத்த வருமானம் – மீண்டெழும் (1+2+3) | ரூ.'000 | **1,650,533** | **1,859,672** | **2,096,359** | **2,506,745** | **2,913,461** |
| 5 | மொத்த ஊழியர் கிரயம் | ரூ.'000 | 1,328,679 | 1,466,230 | 1,581,907 | 1,998,628 | 2,745,835 |
| 6 | பிற மீண்டெ. செலவு (பெறு.தேய்வு நீங்கலாக) | ரூ.'000 | 506,352 | 613,618 | 670,014 | 687,696 | 704,396 |
| 7 | மிகை / பற்றாக்குறை {3-(4+5)} | ரூ.'000 | **(184,498)** | **(220,176)** | **(155,562)** | **(179,579)** | **(536,770)** |
| 8 | அரச. மானி.–மூலத.(2016-ல் திறை.பெ.வே.உட்பட) | ரூ.'000 | 640,000 | 1,353,500 | 745,000 | 562,000 | 400,000 |
| 9 | பிற மானியம் – மூலதன செலவினம் | ரூ.'000 | 3,548 | 119,913 | 668,647 | 8,224 | 78,571 |
| 10 | உருவாக்கப்பட்ட நிதியம் – மூலதன செலவினம் | ரூ.'000 | 14,678 | 34,812 | 8,901 | 4,729 | 7,803 |
| 11 | மூலதன செலவினம் – அரச. மானியம் | ரூ.'000 | 663,466 | 1,363,959 | 780,993 | 545,575 | 423,514 |
| 12 | கிரய மீளளிப்பு செயற்பாட்டு பெறுவனவு | ரூ.'000 | 382,955 | 587,443 | 590,905 | 600,635 | 623,107 |
| 13 | கிரய மீளளிப்பு செயற்பாட்டு செலவினம் | ரூ.'000 | 341,515 | 482,398 | 508,563 | 536,645 | 520,324 |
| | **சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்** | | | | | | |
| 14 | முதலீடுகள் | ரூ.'000 | 349,288 | 359,219 | 481,461 | 699,089 | 894,407 |
| 15 | நடைமுறையல்லா சொத்துக்கள் | ரூ.'000 | 3,259,853 | 4,232,292 | 10,935,243 | 10,618,846 | 10,175,452 |
| 16 | நடைமுறை சொத்துக்கள் | ரூ.'000 | 243,835 | 341,867 | 292,326 | 305,856 | 289,466 |
| 17 | நடைமுறை பொறுப்புக்கள் | ரூ.'000 | 577,163 | 673,730 | 776,908 | 934,590 | 1,074,171 |
| 18 | நடைமுறையல்லா பொறுப்புக்கள் | ரூ.'000 | 774,262 | 878,162 | 891,762 | 1,137,577 | 1,607,800 |
| 19 | நன்கொடைகள்/வெளிநாட்டுதவி (திரட்டிய) | ரூ.'000 | 1,081,282 | 1,201,196 | 712,239 | 638,353 | 627,362 |
| 20 | திரட்டு நிதி | ரூ.'000 | 1,420,270 | 2,180,290 | 9,328,120 | 8,913,271 | 8,049,993 |
| 21 | ஊழியர்களின் எண்ணிக்கை - கல்விசார் | (எண்.) | 496 | 422 | 439 | 456 | 431 |
| 22 | மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை | (எண்.) | 1,089 | 1,100 | 1,099 | 1,193 | 1,150 |
| 23 | மாணவர்களின் எண்ணிக்கை | (எண்.) | 7,601 | 7,922 | 7,902 | 7,912 | 8,369 |
| | **முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள்** | | | | | | |
| i | மொத்த வருமானத்தில் சொந்த வருமானம் | % | 1.57 | 2.73 | 2.61 | 2.87 | 2.72 |
| ii | ஊழியரொருவ. மொத்த உழைப்பு கிரயம் | ரூ.'000 | 1,220 | 1,333 | 1,439 | 1,675 | 2,388 |
| iii | மாணவரொருவ. மொத்த உழைப்பு கிரயம் | ரூ.'000 | 175 | 185 | 200 | 253 | 328 |
| iv | மீண். மானியம் - மாணவருக்கு/ஆண்டிற்கு | ரூ.'000 | 208 | 218 | 247 | 294 | 329 |
| v | ஒரு பட்டதாரிக்கான மொத்த கிரயம் | ரூ.'000 | 750 | 769 | 859 | 967 | 1,088 |
| vi | தொழிலாக்கம் (பெறுபேற்றின் 3 மாதத்தினுள்) | % | 94 | 94 | 93 | 91 | 92 |
| vii | ஊழியர் ஒருவருக்கான மாணவர் | (எண்.) | 07:01 | 07:01 | 07:01 | 07:01 | 07:01 |
| viii | கல்விசார் ஆளணி. ஒருவ. மாணவர் (உண்மை) | (எண்.) | 15:01 | 19:01 | 18:01 | 17:01 | 19:01 |
| ix | வாகனம் ஒன்றுக்கான மாணவர் | (எண்.) | 185:01 | 180:01 | 202:01 | 202:01 | 209:01 |

## 20.10 கணக்காய்வுக் குழு அறிக்கை – 2019

**கணக்காய்வுக் குழுவின் உள்ளடக்கம்**

பல்கலைக்கழகத்தின் கணக்காய்வுக் குழுவானது நிறைவேற்றுக் குழுவில் இடம்பெறாத மூவரை உறுப்பினர்களாக் கொண்டிருப்பதுடன், நிதி முகாமைத்தும் தொடர்பான திறன்களையுடைய ஒருவர் தலைமை வகிப்பார்.

2019 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வுக் குழுவின் அமைப்பு.

| | | |
|---|---|---|
| பொறியியலாளர் வஜிர குலதிலக்க | - | தலைவர் |
| கலாநிதி ரீ.ஏ. பியசிறி | - | அங்கத்தவர் |
| திரு. லிலான் விக்கிரமரத்ன | - | அங்கத்தவர் |

மேற்படி உறுப்பினர்களுக்கு மேலதிகமாக கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் அவதானிப்பாளர்களாக பங்கேற்பதற்கு அழைக்கப்பட்டனர்.

பதிவாளர் மற்றும் நிதியாளர் ஆகியோர் அழைப்பின் பேரில் கூட்டங்களில் பங்கேற்பதுடன், பல்கலைக்கழகத்தின் ஏனைய பணியாட்தொகுதி உறுப்பினர்களின் பிரசன்னம் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அழைக்கப்படுவர். குழுவின் செயலாளராக பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் கடமையாற்றுவார்.

**கூட்டங்கள்**

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய PED/31-ஆம் இலக்க சுற்றறிக்கைப்படி குழு ஒரு வருடத்தில் குறைந்தபட்சம் 04 தடவைகள் கூட வேண்டும். மீளாய்வு ஆண்டில் குழு 04 தடவைகள் கூடியிருப்பதுடன், இக் கூட்டங்களின் போது உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வாளர்களின் அறிக்கைகள் மற்றும் விசாரணைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. பல்கலைக்கழக நிருவாக சபை அவசியமான நடவடிக்கைகளின் நிமிர்த்தமாக கூட்டக் குறிப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**குழுவின் நோக்கெல்லை**

பல்கலைக்கழகத்தின் நிதி மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள் பற்றிய நிருவாக சபையின் பொறுப்பினை வினைத்திறன் மிக்கதாக முன்னெடுப்பதற்கு நிருவாக சபைக்கு உதவுதல் கணக்காய்வுக் குழுவின் முக்கிய நோக்கமாகும். கணக்காய்வு சார்ந்த நல்லாளுகைக்கான சுற்றறிக்கைப் படி குழுவின் நோக்கெல்லை பின்வரும் பணிகளைக் கொண்டிருக்கும்.

i. உள்ளகக் கணக்காய்வின் பொறுப்புகளைத் தீர்மானித்தல் மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டங்களை மீளாய்வு செய்தல்.
ii. நிறுவனத்தின் சகல நடவடிக்கைகளுக்குமென உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை மீளாய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

iii. உரிய காலத்தில் கிரய விளைதிறனின் பொருட்டும், விரயத்தைத் தடுப்பதற்காகவும் செயலாற்றுகையை மீளாய்வு செய்தல்.

iv. வெளியக கணக்காய்வாளர்களுடன் தொடர்புகளைப் பேணுதல் மற்றும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் விசாரணைகள் மற்றும் அறிக்கைகள் மீதான தொடர் கவனிப்பு நடவடிக்கை.

v. சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்தல்.

vi. கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கும் தன்மையை உறுதிப்படுத்த நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல்.

vii. நிவாரண நடவடிக்கைகளின் பொருட்டு உள்ளகக் கணக்காய்வு/ வெளியக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ ஆவணங்களை மீளாய்வு செய்தல்.

viii. அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (COPE) சிபாரிசுகள் மற்றும் பணிப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை மீளாய்வு செய்தல்.

ix. ஆண்டறிக்கையில் உள்ளடக்குவதற்காக குழுவின் கண்டுபிடிப்புகள் அடங்கிய அறிக்கையைத் தயாரித்தல்.

**ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

மீளாய்வு ஆண்டின் போது பின்வரும் நடவடிக்கைகளை குழு முன்னெடுத்துள்ளது.

**1) 2019 ஆண்டுக்கான உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயல்பாட்டுத்திட்டம் என்பவற்றை அங்கீகரித்தல் மற்றும் கண்காணித்தல்.**

குழுவானது 2019-ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயல்பாட்டுத்திட்டம் ஆகியவற்றை சிபாரிசு செய்ததுடன், வருடம் பூராகவும் அதன் நிலைமையை கண்காணிப்பு செய்தது. மேலும், உள்ளகக் கணக்காய்வு மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் வினைத்திறனும் செயல்நிறைவேற்றமும் மீளாய்வு செய்யப்பட்டு, கண்காணிப்பு செய்யப்பட்டது

**2) சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்தல்**

கணக்காய்வு குழுவானது ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குதல் தொடர்பாக உள்ளக மற்றும் வெளியாக கணக்காய்வாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை மீளாய்வு செய்தது

**3) உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மீளாய்வு செய்தலும் பலப்படுத்தலும்.**

குழு வருடாந்த களஞ்சியசாலை மெய்யுறுதிப்படுத்தல்/ இருப்பு மெய்யுறுதிப்படுத்தல், தீர்க்கப்படாத முற்பணங்களை அறவிடுதல், இனங்காணப்படாத அல்லது அறவிடமுடியாத கடன் மீதிகளைத் தீர்த்தல், பிரதான களஞ்சியசாலையின் தொழிற்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை பலப்படுத்துவதற்குத் தேவையான சிபாரிசுகளை வழங்குதல் மூலமாக பல்கலைக்கழகத்தின் நிலையான சொத்துக்கள் மீதான உள்ளகக் கட்டுபாடுகளின் வினைத்திறனை மீளாய்வு செய்துள்ளது. அத்துடன்,

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பலவீனங்கள், மீளாய்வு ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வு விசாரணைகளை சரிப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.

**4) அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு COPE-இன் கூட்டக் குறிப்புகளிலிருந்து எழுகின்ற சரிப்படுத்தல்கள் பற்றிய மீளாய்வும் கண்காணிப்பும்.**

பல்கலைக்கழகம், COPE பரிந்துரைகளுக்கு இணங்க சரியான நடவடிக்கைகளை எடுத்துள்ளதா எனவும், COPE செயலாளரவர்களுக்கு அனுப்பப்பட்ட பதில்கள் சார்பாக மீளாய்வு செய்யப்பட்டுள்ளதா எனவும் குழுவின் மூலம் மீளாய்வு செய்யப்பட்டு, ஆராய்ந்து பார்க்கப்பட்டது.

தலைவர்
கணக்காய்வுக் குழு
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
01.07.2020

## 21. நிலையான வளர்ச்சி குறித்த வருங்கால அறிக்கை

### நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைதல்

1. குறிக்கோள்களையும் இலக்குகளையும் இனங்காணுதல்

பல்கலைக்கழகத்தின் மூலம் விதிக்கப்பட்ட எல்லைகளின் ஊடாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

2020 மற்றும் 2030 ஆம் ஆண்டுகளுக்கான மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பிரதான திட்டம் கட்டடக்கலைகள் பீடத்தின் பணியாளர் குழுவொன்றின் மூலம் தயாரிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் தற்போதய சகல பௌதிக அபிவிருத்திச் செயற்பாடுகளும் இப் பிரதான திட்டத்தின் படி மேற்கொள்ளப்படுகிறது. பல்கலைக்கழகத்தின் துரித விரிவாக்கத்துடன் 2020 இற்கும் அப்பால் 2030 தொடர்பாக திருத்தப்பட்ட திட்டமொன்று பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணத்துவ குழுவொன்றின் மூலம், தேசிய அபிவிருத்தி திட்டம் மற்றும் உயர் கல்வி அமைச்சினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் கூட்டுத் திட்டம் ஆகியவற்றுக்கு இணங்க மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பௌதிக உட்கட்டமைப்பு வசதிகள் சார்பாக துரித அபிவிருத்தியை உள்ளடக்கியதாக மேம்படுத்தப்பட்டு வருகிறது.

- குறிக்கோள் இலக்கம் 04

பூரணத்துவம் மற்றும் சமத்துவம் கொண்ட தரமான கல்வியை உறுதிப்படுத்தல் மற்றும் அனைவருக்கும் நீண்டகால கற்றல் வாய்ப்புக்களை ஊக்குவித்தல்.

பல்கலைக்கழக மூலோபாய முகாமைத்துவ திட்டத்தினுள் பூரணத்துவம் மற்றும் சமத்துவம் கொண்ட தரமான கல்வியை உறுதிப்படுத்தல் மற்றும் அனைவருக்கும் நீண்டகால கற்றல் வாய்ப்புக்களை ஊக்குவித்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழகத்தின் மூலம் நடாத்தப்படும் சகல கல்வி மற்றும் ஆராய்ச்சி சார் பிரதான செயற்பாடுகளில் இக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக முன்னுரிமை அளித்து செயலாற்றப்படுகிறது.

தரமான கல்வியை பெற்றுக்கொடுப்பதற்காக விரிவுரையாளர்களை ஆட்சேர்க்கும் போது சர்வதேச மட்டத்தில் கீர்த்திமிக்க பல்கலைக்கழகங்களில் கலாநிதி பட்டங்களைப் பெற்ற விரிவுரையாளர்களுக்கு முன்னுரிமை அளிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இக் குறிக்கோளை அடைந்துகொள்ளத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- குறிக்கோள் இலக்கம் 05

  ஆண்-பெண் பால்நிலை சமத்துவத்தை ஏற்படுத்துதலும், பெண்கள் மற்றும் சிறுமிகள் அனைவரையும் வலுவூட்டுதல்.

  பல்கலைக்கழகத்தின் மூலோபாய முகாமைத்துவ திட்டத்தினுள் இது தொடர்பாக தெளிவாக காட்டப்பட்டுள்ளதுடன், அதற்கிணங்க செயலாற்றப்படுகிறது.

- குறிக்கோள் இலக்கம் 06

  அனைவருக்கும் நீர் மற்றும் உடல்நலவசதிகள் கிடைப்பதை உறுதிசெய்தல் மற்றும் அவற்றை நிலைபேறாக முகாமைசெய்தல்.

  100% டெங்கு போன்ற தொற்றுநோய்களற்ற பசுமை பல்கலைக்கழகமொன்றாக ஆக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- குறிக்கோள் இலக்கம் 07

  அனைவருக்கும் மலிவான, நம்பகமான, நிலைபேறான மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கிடைப்பதை உறுதிசெய்தல்.

  வலுசக்தி பயன்பாடு பற்றிய முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. மேலும், 2030 ஆகும் போது 25% திறன்மிக்க மாற்று வலுசக்தி நோக்கிச் செல்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், ஏற்கனவே Smart Grid கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- குறிக்கோள் இலக்கம் 09

  நெகிழ்திறனுடைய உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புவதுடன், பரந்தளவானதும் நிலைபேறானதுமான கைத்தொழில்மயமாக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் புத்துருவாக்கல்.

  இது சார்பாக கைத்தொழில் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுடன் ஒன்றிணைந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருதுடன், அவற்றை மேலும் மேம்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- குறிக்கோள் இலக்கம் 13

காலநிலை மாறுபாட்டையும் அதன் தாக்கங்களையும் தவிர்க்கும் வகையில் செயற்படுதல் மற்றும் அது தொடர்பாக துரித நடவடிக்கைகளை எடுத்தல்.

பல்கலைக்கழகத்தின் மூலம் நடாத்திச் செல்லப்படும் சில கற்கைப் பாடநெறிகளில் கற்றல் செயல்பாடுகள், ஆய்வும் அபிவிருத்தியும் நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனைப் பணிகள் ஊடாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள இலக்கம் 06, 07, 09 மற்றும் 13 ஆவது குறிக்கோள்களுக்குரிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

**2. குறிக்கோள்களையும் இலக்குகளையும் நிறுவகத்தின் திட்டங்களில் உள்ளடக்குதல்**

பல்கலைக்கழக சட்ட ஏற்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் இணங்க அறிவைப் பரப்புதல் ஊடாக வலுவூட்டுதல் (குறிப்பாக கஷ்ட பிரதேசங்களில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெற்ற, பொருளாதாரத்தில் பின்னடைவான மாணவ, மாணவிகளின் வறுமை நிலையை ஒழித்தல்) குறிக்கோளாகக் கொண்டு கற்கை பாடநெறிகள் நடாத்திச்செல்லப்படுகின்றன.

மேலும், பல்கலைக்கழக பணியாட்தொகுதியினர் மற்றும் மாணவ, மாணவிகள் மிகத் திட்டமிட்ட வகையில் சமுதாய அபிவிருத்தி மற்றும் சமூக நல உதவி நிகழ்ச்சித்திட்டங்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருவதுடன், இவற்றில் அதிகமானவை நேரடியாக குறைந்த வருமானமுடைய நபர்களுக்கு கல்வியைப் பெற்றுக்கொடுத்தல், பௌதிக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்றன மூலம் அவர்களிடையே முழுமையான அபிவிருத்தியை குறிக்கோளாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

**3. குறிகாட்டிகளை தயாரித்தல்**

வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டினுள் விசேடமாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் குறிப்பிடப்படாத போதிலும், அக் குறிக்கோள்களை (குறிப்பாக 04 ஆம் இலக்க குறிக்கோளை) அடைந்துகொள்ளும் தேசிய முயற்சிக்கு பங்களிப்புச் செய்யும் நோக்கத்தின் அடிப்படையில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பிறவழிகளில் நிதியேற்பாட்டைப் பெற்றுக்கொள்ள பல்கலைக்கழகம் எதிர்பார்க்கிறது. அதேபோல், பல்கலைக்கழகத்தின் கல்விசார் செயற்பாடுகளின் மூலம் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் இலக்கம் 5, 6, 7, 9 மற்றும் 13 ஆகியவற்றை அடைந்துகொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அத்துடன், அனைவருக்கும் பூரணத்துவம் மற்றும் சமத்துவம் கொண்ட தரமான கல்வியை உறுதிப்படுத்தல் மற்றும் அனைவருக்கும் நீண்டகால கற்றல் வாய்ப்புக்களை ஊக்குவித்தல் ஆகியவற்றை உறுதிசெய்வதற்குத் தேவையான சகல தர கட்டுப்பாட்டு செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பல்கலைக்கழகத்தின் மூலம் தேவையான நிதியேற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், பல்கலைக்கழகத்திலிருந்து தொலைதூரத்தில் இருக்கும் பல்வேறு ஆற்றலுடையவர்களை இலக்காகக் கொண்டு, திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தின் (CODL) மூலம் பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன. அதற்காக வரவு செலவுத் திட்ட நிதியேற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழகத்தின் பொதுவான நடைமுறைகளுக்குப் புறம்பாக பல்வேறு ஆற்றல் கொண்ட நபர்களை கல்வித் துறையில் மிகச் சிறந்தவர்களாக ஆகுவதற்கு வழிகாட்டுதல் ஊடாக அவர்கள் வலுவூட்டப்பட்டுள்ளனர். அவ்வாறான செயற்பாடுகளுக்கு வசதி அளிப்பதற்காக பல்கலைக்கழகத்தினால் மேலதிக வரவு செலவுத் திட்ட நிதியேற்பாடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**4. தரவுகளை பேணிச்செல்லல்**

சம்பந்தப்பட்ட பாடநெறிகள் நடாத்தப்படும் கல்விப் பிரிவிகளின் மூலம் அந்த அந்த பாடநெறிகளுக்குரிய தரவுகள் பேணிச்செல்லப்படுகின்றன.

**5. அடைவு நிலைகளை இனங்காணுதல்**

செயற்பாட்டுத் திட்டம் மற்றும் மூலோபாய திட்டம் ஆகியன திருத்தப்பட்டதைத் தொடர்ந்து, மேற்பார்வை செய்யவேண்டிய அடைவு நிலைகள் எவையென பொருட்படுத்தப்படும். இது அபிவிருத்தி கட்டத்தில் காணப்படுவதுடன், உரிய துறைகள் இனங்காணப்பட்டு பொருத்தமான செயற்பாட்டுத் திட்டம் அபிவிருத்தி செய்யப்படும்.

**6. முன்னேற்றங்களை அளவிடுதல்**

ஒவ்வொரு கல்விப் பிரிவுகளின் ஊடாக நடாத்தப்படும் ஆலோசனைக் குழு கூட்டங்களின் மூலமாகவும், தர உத்தரவாத அலகின் மூலமாகவும் முன்னேற்றம் சார்பான மீளாய்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.













பொதுநிர்வாகப் பிரிவு, மொறட்டுவைப் பல்கலைக்கழகம்.